B.A. (Programme) Semester-I/II TAMIL-B

# Paper : Modern Indian Language

## FUNCTIONAL GRAMMAR OF THE TAMIL LANGUAGE

## STUDY MATERIAL : 1 (1-7)

**SCHOOL OF OPEN LEARNING**
**University of Delhi**

**Department of Tamil**

**Editor : Dr. S.Manickavasagam**

**Graduate Course**

# MODERN INDIAN LANGUAGE

## Functional Grammar of The Tamil Language

## STUDY MATERIAL : 1 (1-7)

Editor :
**Dr. S.Manickavasagam**

**SCHOOL OF OPEN LEARNING**
University of Delhi
5, Cavalry Lane, Delhi-110007

# பாடம் - 1
# எழுத்தியல்

மொழி என்பது ஒலி வடிவத்தையே குறிக்கும். லத்தீன் மொழிச் சொல்லாகிய Lingua என்பதற்கு 'நா' என்றொரு பொருளும் உண்டு எனவே, நாவின் செயலால் உருவான ஒன்று என்பதைக் குறிப்பாக உணர்த்துவதே 'Language' என்னும் சொல்லாகும். தமிழிலும், மொழியப்படுவது மொழி என்பர். ஒவ்வொரு மொழியிலும் ஒலி வடிவம் அதிகம் மாறுதலுக்கு உட்படுவதில்லை. ஆனால் அம் மொழியின் வரி வடிவம் ஒலி வடிவைக் காட்டிலும் கொஞ்சம் அதிகம் மாறுதலுக்கு உட்படும். தமிழ் இலக்கண ஆசிரியர்களான தொல்காப்பியரும் பவணந்தியாரும் இதனை உணர்ந்த காரணத்தால் அவர்களது இலக்கண நூல்கள் விளக்கவியல் இலக்கண நூல்களாக இருக்கின்றன. அவர்கள் தமிழ் மொழியின் வடிவு இது என்பதைக் கூறும் வகையில் இலக்கணம் எழுதினார்களே தவிர இதுதான் இதற்கு விதி என்று வரையறை கூறும் வகையில் இலக்கணம் கூறவில்லை எனலாம். ஒவ்வொரு ஒலிக்கும் கட்டாயம் ஒரு வரி வடிவம் இருக்கவேண்டுமென்பதில்லை. இருப்பினும் மொழியின் ஒலியமைப்பு முறையை ஒட்டி வரி வடிவம் வளர்ச்சி பெறும். தொல்காப்பியரும் நன்னூலாரும் தமிழ் எழுத்துகளை அவற்றின் ஒலி வடிவுக்கு ஏற்ப வகைப்படுத்தி இருப்பதைக் காணலாம்.

## தமிழ் எழுத்தியல்

உயிரெழுத்துகள்:

தமிழ் எழுத்து நான்கு வகைப்படும். அவை வருமாறு :

1. உயிரெழுத்து 12. அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ.

2. மெய்யெழுத்து 18. க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன்.
3. உயிர் மெய்யெழுத்துகள் 216
4. ஆயுதம் 1

----------------

**மொத்தம் 247**

----------------

உயிரெழுத்துகள் பன்னிரெண்டினைக் குறில், நெடில் என இரண்டாக வகுப்பர். உயிரெழுத்துகள் அ, இ, உ, எ, ஒ என்னும் ஐந்து எழுத்துகள் குற்றெழுத்துகள் எனவும் ஆ, ஈ ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்னும் ஏழு எழுத்துகள் நெட்டெழுத்துகள் எனவும் பிரிப்பர். குற்றெழுத்து ஐந்தினுள்ளும், முதல் மூன்று எழுத்துகளாகிய அ, இ, எ, என்பன சுட்டு எழுத்துகளாகும். இந்த எழுத்துகளின் துணை கொண்டு அந்த, இந்த, எந்த, அப்படி, இப்படி, எப்படி, அப் பக்கம், இப் பக்கம், எப் பக்கம், அவன், இவன், எவன் எனச் சொற்கள் உருவாக்கம் பெறுவதைக் காணலாம். இச் சுட்டெழுத்துகளைப் போன்று ஆ, ஏ, ஓ என்பன வினா எழுத்துகளாகும் என்பர் தொல்காப்பியர். தொல்காப்பியர் காலத்தே இவ்வெழுத்துகள் வினாக்களாகச் செயல்பட்டன. எடுத்துக்காட்டாக:

அவன் தான் + ஆ இராமன் = அவன் தானா இராமன்?
அவன் தான் + ஏ இராமன் = அவன் தானே இராமன்?
அவன் தான் + ஓ இராமன் = அவன் தானோ இராமன்?

என வருவதைக் காணலாம். பின்னர் எ, யா என்னும் எழுத்துகள் சொல்லின் முதலில் நின்றும், ஆ, ஓ, என்னும் எழுத்துகள் சொல்லின் ஈற்றில் நின்றும், ஏ என்னும் எழுத்து இரு நிலைகளிலும் வினாவாக வரும் என்பர் பவணந்தியார். எடுத்துக்காட்டாக:

எவன்?, எவள்?, எவர்?.
யாவன்?, யாவள்?, யாவர்?, யாது?, யாவை?.
ஏன்?

எனவும் வருவதைக் காணலாம்.

## 2. மெய்யெழுத்துகள்:

உயிரெழுத்துகளைக் குறில், நெடில் என ஒலிப்பு முறைக்கு ஏற்ப பிரித்திருப்பதைப் போன்று மெய்யெழுத்துகளையும் வல்லினம், மெல்லினம், இடையினம் என மூன்றாகப் பகுத்திருப்பதைக் காணலாம்.

வல்லினம் : க் ச் ட் த் ப் ற்
மெல்லினம் : ங் ஞ் ண் ந் ம் ன்
இடையினம் : ய் ர் ல் வ் ழ் ள்

இம் மெய்யெழுத்துகள் பதினெட்டும் உயிரெழுத்துகள் பன்னிரெண்டோடு உறழ 216 மெய்யெழுத்துகள் தோன்றுவதைக் காணலாம். எடுத்துகாட்டாக:-

க் + அ = க
க் + ஆ = கா

இவ் வெழுத்துகள் ஒலிப்பு நிலையில் தம் மாத்திரையிலிருந்து குறைந்து ஒலிப்பதைப் பலவிடங்களில் காணலாம். இவ்வெழுத்துகளின் ஒலிப்பு நிலையைச் சார்ந்து பல எழுத்துள் தம் மாத்திரையில் குறைந்து ஒலித்தாலும் அவற்றின் வரி வடிவம் ஒன்றேயாகும். நகு, நாகு, தபு, தப்பு, வறு, வயிறு, என்னும் சொற்களின் இறுதியிலுள்ள உகரத்தை ஒலிக்கும்பொழுது ஒலிப்பு முறையில் வேறுபாடு இருப்பதைக் காணலாம். நகு, தபு, வறு, என்னும் சொற்களின் உகரம் முற்றுகரமாகவும் நாகு, தப்பு, வயிறு என்னும் சொற்களின் உகரம் குற்றியலுகரமாகவும் ஒலிப்பதைக் காணலாம். இவ்வொலி வேறுபாட்டினை ஒட்டிச் சில எழுத்துகளைச் சார்பெழுத்து என்பர். தொல்காப்பியர் காலத்தே குற்றியலுகரம், குற்றியலிகரம், ஆய்தம் என்னும் மூன்றெழுத்துகளையே சார்பெழுத்துகளாகக் குறிப்பிட்டு இருப்பதைக் காணலாம். நன்னூலார் சார்பெழுத்துகள் பத்து வகைப்படும் என்பார். இச் சார்பெழுத்துகளின் வகைகள் பற்றியும் மாணவர்கள் தெரிந்து கொள்ள வேண்டியது ஒன்றுமில்லை. குற்றியலுகரச் சொற்களுக்குப் பிறகு யகரத்தை முதலாக உடைய சொற்கள் வருமாயின் குற்றியலுகரச் சொல் திரிந்து குறைந்த மாத்திரையுடைய சொல்லாக ஒலிக்கும்.

எடுத்துக்காட்டு:

வாத்து + யாரது = வாத்தியாரது
நாடு + யாது = நாடியாது

என வரும் சொற்களைப் பார்க்கும்பொழுது பொருள் புலப்படுவதில்லை. வாத்தியாரது என்பது ஆசிரியரது என்னும் பொருளைக் குறிப்பதாக இருக்கிறது, எனவே பவணந்தியார் சொன்ன சார்பெழுத்துகளின் வகைகளைப்பற்றித் தெரிந்துகொள்வது என்பது வேண்டாத ஒன்றாகும். சார்பெழுத்துகள் 369 எனப் பவணந்தியார் சுட்டிக் காட்டுவதைக் கொண்டு தொல்காப்பியர் காலத்திலிருந்து பவணந்தியார் காலம் வரையில் தமிழ் மொழியின் ஒலிப்பு நிலையில் பல மாற்றங்கள் ஏற்பட்டிருப்பதைக் காணலாம். மாற்றம் இருத்தல் வளர்ச்சியின் அடையாளம் ஆகும்.

இதுவரை பார்த்த தமிழ் எழுத்துகளில் எவையெவை சொல்லுக்கு முதலில் வரும் என்றும், எவையெவை சொல்லுக்கு இடையில் வரும் என்றும், எவையெவை சொல்லுக்கு ஈற்றில் வரும் என்றும் பார்க்க வேண்டும். உயிரெழுத்துகள் பன்னிரெண்டும் க ச ஞ ட த ந ப ம ய ர ல வ என்னும் உயிர் மெய்யெழுத்துகள் பன்னிரெண்டும் சொல்லுக்கு முதலில் வரும். ங் ண் ழ் ள் ற் ன்

ஆகிய எழுத்துகள் சொல்லுக்கு முதலில் வரமாட்டா. ர் ழ் ஆகிய மெய்யெழுத்துகளைத் தவிர மற்ற பதினாறு மெய்யெழுத்துகளும் தத்தம் எழுத்தோடு சேர்ந்து வருவதுண்டு. ர் ழ் பிற மெய்களோடும் சேர்ந்து வருதல் உண்டு.

எடுத்துக்காட்டு: சேர்தல், வாழ்தல்

உயிரெழுத்துகள்: அறம், ஆடு, இலை, ஈட்டி, உரல், ஊர், எருது, ஏர், ஐயம், ஒன்று, ஓடம், ஔவை.

**மெய்யெழுத்துகள் :**

க : கல், கால், கிளி, கீரை, குடம், கூடம், கெடுதல், கேள், கைப்பு, கொடை, கோடு, கௌவை (ஓசை).

ச : சட்டி, சார்தல், சிரிப்பு, சீர், சுடுதல், சூடு, செக்கு, சேவல், சைகை, சொல், சோர்வு, சௌக்கியம்.

ஞ : ஞ, ஞா, ஞெ, ஞொ என்பன மட்டும் சொல்லுக்கு முதலில் வரும். ஞமலி (நாய்), ஞாலம் (உலகம்), ஞெகிழி (கொள்ளிக் கட்டை) ஞொள்குதல் (குறைதல்) என்னும் ஞகர வரிசையில் உள்ள எழுத்துகளை முதலாகக் கொண்டு வரும் சொற்கள் இன்று பெரும்பாலும் பண்டிதர் தமிழிலேதான் இருக்கின்றன.

ட : டகரம் சொல்லுக்கு முதலில் வராது என்று கூறியது தமிழ்ச் சொற்களைக் குறித்ததே ஆகும். டங்கன் துரையை இடங்கன் துரை என்றும் டயர் என்னும் சொல்லை இடயர் என்றும் டில்லி என்பதை இடில்லி என்றும் எழுதினால் பொருள் மாறுபடாதா? ஆதலின் இக் காலத்தில் டகரம் பிற மொழிச் சொற்களில் மொழிக்கு முதல் எழுத்தாக வரும் எனக் கொள்க என்பர் அ. கி. பரந்தாமனார்.

த : தந்தை, தாய், தினை, தீமை, துணை, தூண், தென்னை, தேன், தையல், தொன்மை, தோல், தௌவல் (கெடுதல்)

ந : நன்றி, நாடு, நிலம், நீர், நுனி, நூல், நெல், நேர்மை, நைந்து, நொச்சி, நோக்கம், நௌவி.

ப : பன்றி, பாடு, பிஞ்சு, பீடு, புவி, பூட்டு, பெண், பேதை, பையன், பொன், போதை, பௌர்ணமி.

ம : மண், மான், மின்னல், மீன், முட்டாள், மூளை, மெய், மேன்மை, மையம், மொட்டு, மோர், மௌனம்.

ய : யமன், யானை, யுகம், யூகம், யௌவனம் என வரும் யகர வரிசையில் பிற எழுத்துகள் சொல்லுக்கு முதலில் வரா.

ர : இக் காலத்தில் ரகரமும் சொல்லுக்கு முதலில் பிற மொழிச் சொற்களில் வருவதைக் காணலாம். முன் காலத்தில் ரகரம் சொல்லுக்கு முதலில் வந்தால் அகரம் இட்டும் இகரம் இட்டும் அரங்கநாதன் இரங்கநாதன் இராமாயணம் என எழுதுவர். ரம்பர், ரம்பம், ரதம் என்பவற்றை இரம்பம், இரதம் என எழுத வேண்டியதில்லை. ரப்பர் என்பதனை இரப்பர் என எழுதினால் யாசிக்கிறவர் என்று பொருள்படும். எனவே ரகரத்திற்கு முன் அகரம் இகரம் இட்டு எழுதத் தேவையில்லை.

ல : பிற மொழிச் சொற்களில் வரும் லகரத்தைச் சொல்லுக்கு முதலில் வருவதாகக் கொள்ளலாம். ‘லோகம்’ என்பதை ‘உலோகம்’ என எழுதியது போன்று லண்டனை இலண்டன் என்றும் லட்டுவை இலட்டு என்று லூயிபிஷரை உலூயிபிஷர் என்றும் எழுதுவது தவறு என்பர்.

வ : வருகை, வானம், வினை, வீடு, வெளி, வேலை, வையகம், வெளவுதல் என வரும்.

தத்தம் எழுத்துகளோடு சேர்ந்து சொல்லுக்கு இடையில் வரும் எழுத்துகள் வருமாறு:

பக்கம், அங்ஙனம், அச்சம், மஞ்ஞை, பட்டம், கண்ணன், பத்து.
அந்நியர், அப்பம், மெய்யன், பல்லி, கொவ்வை, பள்ளம், குற்றம், அன்னம்.

வல்லின எழுத்துகளான க, ச, ட, த, ப, ற, என்னும் ஆறும் மெல்லின எழுத்துகளான ங, ஞ, ண, ந, ம, ன, என்னும் ஆறும் இன வெழுத்துகளாம். எனவே மெல்லின எழுத்துகளும் தம் இனவெழுத்துகளோடும் சொல்லுக்கு இடையில் வரும்.

எடுத்துக்காட்டு:

சங்கம், பஞ்சு, வண்டு, கந்தன், கம்பன், கற்பு.

சொல்லுக்கு இறுதியில் வரும் எழுத்துகள் 23 ஆகும். உயிரெழுத்துகள் பன்னிரெண்டும் ஞ், ண், ந், ம், ன், ய், ர், ல், வ், ழ், ள், என்னும் மெய்யெழுத்துகள் பதினொன்றும் சொல்லுக்கு இறுதியில் வரும் எழுத்துகளாம்.

எடுத்துக்காட்டு:

விள, பலா, கிளி, தீ, நடு, பூ, சேய், மனை, நொவோ, வென உயிர்கள் பன்னிரண்டும் சொல்லுக்கு இறுதியில் வந்தன.

உரிஞ், எண், பொருள், அறம், மண், தாய், வேர், மால், தெவ், புகழ், முள் ஆகிய மெய்யெழுத்துகள் பதினொன்றும் சொல்லுக்கு இறுதியில் வந்தன.

**ஒலி மாற்றம் :**

காலந்தோறும் ஒலிப்பு முறையில் பல மாறுபாடுகள் ஏற்படுகின்றன. ஒருவர் ஓர் எழுத்தை உச்சரிப்பது போன்று மற்றொருவர் ஒலிப்பதில்லை. ஒருவர் ஓர் எழுத்தை ஒரு தடவை ஒலித்தது மாதிரி பிறிதொரு தடவை ஒலிப்பதில்லை. இவ் வொலிப்பு மாற்றங்கள் மொழியில் பெருகும்பொழுது அவை நிலைபெற்று விடுகின்றன. இலக்கண நூலார் அவற்றிற்கு இலக்கணமும் எழுதி விடுகின்றனர். மொழி நூலார் இம் மாற்றங்கள் மொழி வளர்ச்சியின் அடையாளம் என்பர். இவ் வொலி மாற்றங்கள்பற்றிய அறிவு மாணவர்களுக்கு இன்றியமையாத ஒன்றாகும். தொல்காப்பியரும் இவைபற்றி உயிரீற்றுப் புணரியல், மெய்யீற்றுப் புணரியல் முதலிய அதிகாரங்களில் சொல்லியிருக்கிறார். இவ்வொலி மாற்றங்களில் மிகவும் முக்கியமானவற்றில் சில இங்குக் காண்போம்.

**1. ஓரினமாதல்:**

ஓரினமாதல் அல்லது மெய் பிறிதாதல் என்பதனை ‘Assimilation’ என்பர் மொழி நூலார். ஒரு சொல்லின் இறுதியில் உள்ள மெய்யெழுத்தானது அடுத்துவரும் சொல்லின் முதல் எழுத்தின் தாக்கத்தால் மாறுவதை ஓரினமாதல் என்பர். வருஞ் சொல்லின் முதல் எழுத்தின் திரிதலை வருமொழித் திரிபு என்றும் முதற் சொல்லின் மெய்யொலித் திரிதலை நிலைமொழித் திரிபு எனறும் இரண்டிடத்தும் திரிதலை இரு மொழித் திரிபு என்றும் கூறுவர்.

**வருமொழித் திரிபு:**

எடுத்துக்காட்டு: மண் + தீது = மண்டீது.

பொன் + நன்று = பொன்னன்று.

**நிலைமொழித் திரிபு:**

எடுத்துக்காட்டு: நெல் + கதிர் = நெற்கதிர்

புறம் + நானூறு = புறநானூறு

**இருமொழித் திரிபு:**

எடுத்துக்காட்டு:

கல் + தூண் = கற்றூண்

நல் + தாய் = நற்றாய்

**2. அசை கெடல்:**

இருவேறு சொற்கள் இணைந்து ஒலிக்கும்பொழுது அச் சொற்களை முழுவதுமாக ஒலிக்காது விடுவதும் உண்டு. இதனை அசை கெடல் என்பர்.

எடுத்துக்காட்டு:

அருமருந்து + அன்ன = அருமருந்த

ஆதன் + தந்தை = ஆந்தை

பூதன் + தந்தை = பூந்தை

**3. உயிர் தோன்றல்:**

தமிழ் ஒலி மரபில் இரண்டு மெய்யொலிகள்தான் தொடர்ந்து வரமுடியும். இரண்டு மெய்யொலிகளுக்குமேல் தொடர்ந்து வரும்பொழுது இடையில் உயிர் ஒலி தோன்றும். இதனை உயிர் தோன்றல் என்பர்.

எடுத்துக்காட்டு: வாக்யம் - வாக்கியம்; பத்மம் - பதுமம்

என வடமொழிச் சொல்லைத் தமிழ்ப்படுத்தும் பொழுது இடையே உயிரெழுத்திட்டு எழுதுதல் மரபு. இதனை உயிர் தோன்றல் என்பர்.

**4. உயிரொட்டு:**

வடமொழிச் சொற்களைத் தமிழில் எழுதும்போது அச்சொற்களுக்குமுன் அ, இ, உ என்னும் உயிரெழுத்துகளைச் சேர்த்து ஒலிப்பதற்கு உயிரொட்டு என்பர்.

எடுத்துக்காட்டு: யக்ஷன் - இயக்கன்; ரிஷி - இருஷி

**5. உயிர் கெடல்:**

எடுத்துக்காட்டு: மருளும் - மருண்ம்; போலும் - போன்ம்

**6. மெய் கெடல்:**

உயிரெழுத்துகளைப்போன்று மெய்யெழுத்துகளையும் ஒலிக்காது விடுவது காணலாம். சொற்களின் இடையில் வரும் க, ழ, ர என்னும் எழுத்துகளைப் பேசும்பொழுது பெரும்பாலும் ஒலிப்பதில்லை. இதனை மெய் கெடல் என்பர்.

எடுத்துக்காட்டு:

| | |
|---|---|
| ஆகும் - ஆம் | போகும் - போம் |
| பொழுது – போது | அரும்பல் - அம்பல் |
| உருண்டை – உண்டை. | |

**7. இடம் பெயரல்:**

சொற்களின் வடிவமைப்பானது முன் பின்னாக மாறினும் பொருள் மாறாது இருப்பதையே இடம் பெயரல் என்பர். இதனை இலக்கண நூலார் போலி என்பர். இது முதற் போலி, இடைப் போலி, கடைப் போலி என மூவகைப்படும்.

எடுத்துக்காட்டு:

| | |
|---|---|
| இல்வாய் - வாயில் | நுதற்கண் - கண்ணுதல் |
| இல்முன் - முன்றில் | மரநுனி - நுனிமரம் |
| விசிறி - சிவிறி | கால்வாய் - வாய்க்கால் |

சில சொற்களின் இறுதியில் உள்ள ம், ல் என்னும் எழுத்துகளுக்குப் பதிலாக ன், ர், ள், என்னும் எழுத்துகள் போலியாக வரும்.

எடுத்துக்காட்டு:

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நலம் | -- | நலன் | சாம்பல் | -- | சாம்பர் |
| அறம் | -- | அறன் | சுவல் | -- | சுவர் |
| குடல் | -- | குடர் | மதில் | -- | மதிள் |
| பந்தல் | -- | பந்தர் | செதில் | -- | செதிள் |

இவ்விரண்டு விதமாகவும் இச் சொற்களை எழுதினாலும் தவறில்லை. பொருள் ஒன்றே. இதனை மொழி வேறுபாடு எனலாம்.

**8. உடம்பாடு மெய்:**

இரண்டு சொற்கள் இணையும்பொழுது முதற் சொல்லின் இறுதி எழுத்து உயிராகவும், இரண்டாவது சொல்லின் முதல் எழுத்து உயிராகவும் இருப்பின் இவ்விரு சொற்களுக்கும் இடையே ய, வ என்னும் மெய்கள் வந்து அச் சொற்களை இணைக்கின்றன. ஏனெனில் இரண்டு உயிர்களை ஒலிக்கும் பொழுது

தடை ஏற்படுவதைக் காணலாம். இதனைத் தடுக்கும் வகையில் யகரம், வகரம் வருவதைக் காணலாம். எனவே, இவ்வெழுத்துகள் உடம்படு மெய்கள் என்பர்.

எடுத்துக்காட்டு:

| | | | | |
|---|---|---|---|---|
| மணி | + | அழகு | = | மணியழகு |
| பலா | + | அருமை | = | பலாவருமை |
| அவனே | + | அழகன் | = | அவனேயழகன் |

இரண்டு சொற்கள் சேரும் பொழுது ஏற்படும் ஒலி மாற்றங்களைப் பற்றி மாணவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். இவற்றைத் தெரிந்து கொள்ளுவதற்குத் தொல்காப்பியம், நன்னூல் சூத்திரங்களை மாணவர்கள் மனப்பாடம் செய்ய வேண்டும் என்னும் தேவையில்லை. இரண்டு சொற்களை ஒலிக்கும் பொழுதே அச் சொற்களில் ஏற்படும் ஒலி மாற்றத்தைக் காணலாம். சொற்களை இணைத்து எழுதும்போது ஏற்படும் மாற்றங்களை நான்கு வகையாகப் பிரிப்பர். சொல்காப்பியர் இவற்றை ஒலித் திரிபு என்பர். இரண்டு சொற்கள் புணர்ந்து எழுதும்பொழுது வேறொன்று ஆதல், மிகுதல், குன்றல், இயல்பாதல் என்னும் நான்கு நிலைகளுள் ஏதேனும் ஒரு நிலையில் ஒலித் திரிபு நிகழலாம். தொல்காப்பியர் எழுத்துத் திரிபு என்று கூறாமல் ஒலித் திரிபு என்று கூறியதே இங்கு நினைவில் கொள்ளவேண்டும்.

**9. மொழி பேறுபாடு:**

படம், இடம் என்னும் இவ்விரு சொற்களையும் பார்த்தால் இவ்விரு சொற்களும் இரு வேறுபட்ட பொருளை உணர்த்துகின்றன என்பது புரியும். ப, இ என்னும் இரு எழுத்தே இங்குப் பொருள் வேறுபாட்டினைப் புலப்படுத்த வல்லன. இவ்விரு எழுத்துகளையும் தனித்தனியே பகர ஒலியன், இகர ஒலியன் என்பர். இவை போன்று ஓர் எழுத்து வேறுபட்டால் பொருள் வேறுபாட்டைத் தோற்றுவிக்கும் சொற்களை நாம் காணலாம். தமிழ் பயிலும் மாணவர்களுக்கு இத்தகைய சொற்களைத் தனித்தனியே இனங் காணவும் பிழையின்றி எழுதவும் பயிற்சி பெற வேண்டும். குறிப்பாக ரகர, றகர வேறுபாட்டினையும் னகர, ணகர, வேறுபாட்டினையும், லகர, ளகர, ழகர வேறுபாட்டினையும் தெரிந்து கொள்ளவேண்டும்.

**(1) ரகர, றகர வேறுபாட்டுச் சொற்கள்:**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அரம் | = | ஒரு கருவி | அறம் | = | தருமம் |
| அரி | = | வெட்டு | அறி | = | தெரிந்துகொள் |
| அரை | = | பாதி, மாவரைத்தல் | அறை | = | வீட்டின் பகுதி |
| இரங்கு | = | கருணை காட்டு | இறங்கு | = | கீழே வா |
| இரந்தான் | = | யாசித்தான் | இறந்தான் | = | செத்தான் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இரை | = | தீனி | இறை | = | கடவுள் |
| உரை | = | சொல் | உறை | = | தலையணை உறை |
| எரி | = | தீ | எறி | = | வீசு |

**(2) னகர, ணகர, நகர வேறுபாட்டுச் சொற்கள்:**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பணி | = | ஏவல் | பனி | = | குளிர்ச்சி |
| தின் | = | சாப்பிடு | திண் | = | வலிமை |
| கன்னன் | = | கர்ணன் | கண்ணன் | = | கிருஷ்ணன் |
| என்னாள் | = | என் ஆள் | எந்நாள் | = | எந்த நாள் |
| ஈந்தாள் | = | கொடுத்தாள் | ஈன்றாள் | = | பெற்றெடுத்தாள் |
| அன்னாள் | = | அவள் | அந்நாள் | = | அந்த நாள் |
| இன்னார் | = | இத்தகையார் | இந்நாள் | = | இந்த நாள் |
| ஊன் | = | மாமிசம் | ஊண் | = | உணவு |

**(3) லகர, ளகர, ழகர வேறுபாட்டுச் சொற்கள்:**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அகலம் | = | விரிவு | அகளம் | = | தாழி |
| அகல் | = | நீங்கு | அகழ் | = | தோண்டு |
| இழித்தல் | = | இறக்குதல் | இளித்தல் | = | பரிகாரஞ் செய்தல் |
| வாழை | = | வாழை மரம் | வாளை | = | மீன் |
| விளி | = | அழை | விழி | = | கண் |
| வேலை | = | தொழில் | வேளை | = | காலம் |

அலகு = பறவை மூக்கு; அளகு = பறவையின் பெண்பாற் பெயர்; அழகு = வனப்பு

அலறு = உரக்கக் கூப்பிடு    அளறு = சிதறு    அழறு = சேறு

வால் = வால்    வாள் = ஆய்தம்    வாழ் = வாழு

**இரு வடிவம்:**

மொழி வேறுபாடு பேச்சு மொழியிலும் எழுத்து வடிவிலும் காணக் கூடிய ஒன்று. ஒரு சொல்லை இரண்டு வகையாகவும் எழுதலாம். இருப்பினும் சில இடங்களில் நுண்ணளவான பொருள் வேறுபாட்டை இச் சொற்களில் காணலாம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆழ்வார் | = | ஆள்வார் | கோவில் | = | கோயில் |
| சுருசுருப்பு | = | சுறுசுறுப்பு | யார் | = | ஆர் |
| பவளம் | = | பவழம் | யாறு | = | ஆறு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| துளை | = | தொளை | யானை | = | ஆனை |
| வரட்சி | = | வறட்சி | யமன் | = | எமன் |
| வியர்வை | = | வேர்வை | உழறுதல் | = | உளருதல் |
| யாண்டு | = | ஆண்டு | | | |

**ஒலித் திருத்தம்:**

சிலர் சொல்லின் அடிச்சொல் பற்றித் தெரியாது பிழையுற எழுதுகின்றனர். இத்தகைய தவறுகளையும் எழுதும் பொழுது களைய வேண்டும். நம்மில் பலரும் இத் தவறுகளைச் செய்வதால் இத் தவறுகளைத் தவறாகவே கருதுவதில்லை. இருப்பினும் இத்தகைய தவறுகளைத் திருத்திக்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

| **பிழை** | | **திருத்தம்** | **பிழை** | | **திருத்தம்** |
|---|---|---|---|---|---|
| அடமானம் | = | அடைமானம் | ஊரணி | = | ஊருணி |
| அடமழை | = | அடைமழை | எண்ணை | = | எண்ணெய் |
| இடது பக்கம் | = | இடப் பக்கம் | எந்தன் | = | என்றன் |
| உந்தன் | = | உன்றன் | கத்தரிக்கோல் | = | கத்தரிக்கோல் |
| உடமை | = | உடைமை | கர்ப்பூரம் | = | கருப்பூரம் |
| சித்தரிக்கிறாள் | = | சித்திரிக்கிறாள் | சுவற்றில் | = | சுவரில் |
| தொந்திரவு | = | தொந்தரவு | நாகரீகம் | = | நாகரிகம் |
| நாழி | = | நாழிகை | பதட்டம் | = | பதற்றம் |
| வயறு | = | வயிறு | வரவு சிலவு | = | வரவு செலவு |
| வினாயகர் | = | விநாயகர் | வெய்யில் | = | வெயில் |
| வென்னி | = | வெந்நீர் | தேனீர் | = | தேநீர் |

மேலே கொடுக்கப்பட்டுள்ளவை அ. கி. பரந்தாமானார் எழுதியுள்ள ‘நல்ல தமிழ் எழுத வேண்டுமா’ என்ற நூலிலிருந்தும் கணபதி பிள்ளை எழுதிய ‘பயிற்சித் தமிழ்’ (முதலாம் பாகம்) என்ற நூலிலிருந்தும் கொடுக்கப்பட்டவையாகும். எழுத்துப் பிழைகள் வராமலிருக்க மாணவர்கள் இந் நூல்களில் காட்டப்பட்டுள்ள

எடுத்துக்காட்டுகளைத் தெரிந்து கொள்வது நல்லது. எழுத்துப் பிழைகள் வராமல் இருத்தற்குச் சில வழிகள் இருக்கின்றன. அவையாவன:

1. பிழையற்ற நூல்களைப் படித்தல்
2. சொல்லின் பகுதி பார்த்து எழுதுதல்
3. பொருள் நினைவோடு எழுதுதல்

எனவே, பொருளறிந்து எழுதினால் எழுத்துப் பிழைகள் ஏற்படா என்பர் அ. கி. பரந்தாமனார். இவையே நல்ல தமிழ் எழுதுவதற்குத் தேவையான அடிப்படைக் காரணிகள் எனலாம்.

**தமிழ் எழுத்தியல் -- விளக்கப் படம்**

தமிழ் எழுத்துகள்

| உயிர் | மெய் | உயிர்மெய் | ஆய்தம் |
|---|---|---|---|
| (12) | (18) | (216) | (1) |

ஒலி மாற்றம்

1. ஓரினமாதல்
2. அசை கெடல்
3. உயிர் தோன்றல்
4. உயிரொட்டு
5. உயிர் கெடல்
6. மெய் கெடல்
7. இடம் பெயரல்
8. உடம்படு மெய்

ஒலி வேறுபாடு

1. ரகர, றகர வேறுபாடு
2. னகர, ணகர வேறுபாடு
3. லகர, ழகர, ளகர வேறுபாடு
4. இரு வரி வடிவம்
5. ஒலித் திருத்தம்

**மாணவர் கருத்தில் கொள்ள வேண்டியன:**

1. சொல்லுக்கு முதலில் வரும் எழுத்துகள் யாவை?
2. சொல்லுக்கு இடையில் வரும் எழுத்துகள் யாவை?
3. சொல்லுக்கு ஈற்றில் வரும் எழுத்துகள் யாவை?
4. பின்வரும் இணைச் சொற்களின் பொருள் வேறுபாட்டினைப் புலப்படுத்தி அவற்றை வாக்கியங்களில் அமைத்துப் பழகுக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அரம் | அறம், | இறங்கு | இரங்கு, | இரை | இறை, |
| பணி | பனி, | அன்னாள் | அந்நாள், | ஈந்தாள் | ஈன்றாள், |
| அகல் | அகழ், | இழித்தல் | இளித்தல், | விளி | விழி, |
| வேலை | வேளை. | | | | |

5. பின்வருஞ் சொற்களில் காணப்படும் பிழையினைத் திருத்துக:
   அடமானம், உந்தன், சித்தரிக்கின்றாள், எண்ணை, வரவு சிலவு, வென்னி, தேனீர்.
6. பிற மொழிச் சொற்களில் வரும் ட, ல எழுத்துகள் தமிழில் (சொல்லுக்கு முதலில்) எவ்வாறு இடம் பெற வேண்டும்?
7. தமிழ் எழுத்துகளில் காணப்படும் ஒலி மாற்றம், ஒலித் திருத்தம், ஒலி வேறுபாடு ஆகியன குறித்து நீவிர் அறிவன யாவை?
8. ஓரினமாதல், மொழித் திரிபு குறித்து நீவிர் அறிவன யாவை?
9. தமிழ் எழுத்துகளின் பொருள் வேறுபாடு குறித்துச் சிந்திக்க.

**துணை புரிந்த நூல்கள்:**


1. அ. கி. பரந்தாமானர் : நல்ல தமிழ் எழுத வேண்டுமா?
   அல்லி நிலையம்
   19 முத்து முதலித் தெரு,
   வேப்பேரி, சென்னை – 600007.
   ஆறாம் பதிப்பு 1978
2. தென்புலோலியூர் மு. கணபதிப் பிள்ளை : பயிற்சித் தமிழ் (முதலாம் பாகம்)
   தென்புலோலியூர், இலங்கை,
   முதற் பதிப்பு – 1955.
3. ரா. சீனிவாசன் எம். ஏ. : மொழியியல்,
   பாரி நிலையம், 59 பிராட்வே,
   சென்னை – 1
   முதற் பதிப்பு – 1960.

## பாடம் - 2

# சொல்லியல்

**ஒரு விளக்கம்:**

மாணவர்களுக்கு எழுத்துப் பயிற்சி எவ்வளவு முக்கியமானதோ அவ்வளவு முக்கியமானது சொற் பயிற்சியாகும். ஓர் எழுத்தானது தனித்து நின்றும் அல்லது பல எழுத்துகளோடு சேர்ந்தும் ஒரு பொருளை உணர்த்துமாயின் அது சொல் எனப்படும். எழுத்தே தனித்தும் தொடர்ந்தும் பொருள் தரின் பதமாம் என்று பவணந்தியார் கூறுவதும் இதுவே. தொல்காப்பியர் காலந்தொட்டே சொல்லின் மரபு அறிந்து மொழியைப் பயன்படுத்தும் போக்கு வளர்ந்துள்ளதைக் காணலாம்.

மொழி என்பது பல்வேறு சொற்களின் தொகுதியே. மொழியின் கண்ணுள்ள எல்லாச் சொற்களும் பொருள் உணர்த்தக் கூடியனவே. இதனையே தொல்காப்பியரும், ‘‘எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே’’ என்பர், இத்தகைய சொற்களானது மக்களது ஒலிப்பு முறையின், இட வேறுபாட்டின், தட்பவெட்ப நிலையின் காரணமாகப் பல மாறுதல்களுக்குட்படுகின்றன. சாப்பிட்டான் என்று ஒருவன் சொன்னவுடன் சென்னை மாநிலத்திலுள்ள தமிழர்கள் மட்டுமல்ல உலகெங்கிலும் குடியேறியுள்ள எல்லாத் தமிழர்களும் புரிந்து கொள்ள முடியும். இத்தகைய இயல்பான சொற்களை இயற்சொல் எனவும் இடத்துக்கு இடம் மாறுபட்டு வரும் சொற்களைத் திசைச் சொல் எனவும் வழக்கில் மாறி ஒலிக்கப்படும் சொற்களைத் திரிசொல் எனவும் வடமொழியிலிருந்து தமிழுக்கு வந்து தமிழில் பழக்கத்தில் உள்ள சொற்களை வடசொல் எனவும் கூறுவர்.

**பெயர்ச் சொல்:**

இயற்சொல், திசைச்சொல், திரிசொல், வடசொல் என்னும் நான்கு வகையான சொற்களையும் மாணவர்கள் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம். இருந்தாலும் சொற்கள் என்றவுடன் மாணவர்களின் கவனத்துக்கு வரவேண்டியன இரண்டு வகையான சொற்களாகும். ஒன்று பெயர்ச் சொல். இரண்டு வினைச் சொல். பெயர்ச் சொல்லானது வேற்றுமை யுருபு கொள்ளும். வினைச் சொல்லானது வேற்றுமை உருபு ஏற்காது. பெயர்ச் சொல்லானது காலம் உணர்த்தாது. வினைச் சொல்லானது காலம் உணர்த்தும். இவையே பெயர்ச் சொல்லுக்கும் வினைச் சொல்லுக்கும் உள்ள வேறுபாடுகளாகும். தமிழில் உள்ள பெயர்ச் சொற்களை இரண்டு வகையாகப் பிரித்துக் கொள்ளலாம்.

1. பொருளை உணர்த்துவன
2. மாற்றாக உணர்த்துவன

என இருவகைப்படும்.

**பொருளை உணர்த்துவன:**

*எடுத்துக்காட்டு:* கண்ணன், சாந்தா, நிலம், காலம், மகன், மகள், நம்பி, நங்கை.

**மாற்றாக வருவன:**

*எடுத்துக் காட்டு:* அவன், அவள், அவர், அது, அவை.

தமிழில் பெயர்ச் சொற்கள் திணைப் பாகுபாட்டின் அடிப்படையில் அமைவனவாகும். இதே நேரத்தில் பெயர்ச் சொல்லானது இடுகுறியாகவோ, காரணப் பெயராகவோ காரண இடுகுறியாகவோ இருக்கும்.

*எடுத்துக் காட்டு:*

**இடுகுறிப் பெயர்:** கல், மண்.
**காரணப் பெயர்:** வயிறு, கை.
**காரண இடுகுறிப் பெயர்:** நாற்காலி, காற்றாடி.

இவ்வகையில் பயன்படுத்தப்படும் பெயர்ச் சொற்களை பொருள் அடிப்படையில் பொருட்பெயர், இடப் பெயர், சினைப் பெயர், பண்புப் பெயர் எனப் பகுப்பர். ஓர் அடிச் சொல்லோடு ஆக்க உறுபுகள் சேர்ந்து பெயர்ச் சொல்லாவதை ஆக்கப் பெயர்ச் சொல் என்பர் ரா. சீனிவாசன்.

**ஆக்கப் பெயர்ச் சொல்:**

| | | |
|---|---|---|
| *எடுத்துக் காட்டு:* | மல் + அர் | = மலர் |
| | இருள் + து | = இருட்டு |
| | சோர் + வு | = சோர்வு |

பெயர்ச் சொற்களை, 1. வினையாலணையும் பெயர், 2. தொழிற் பெயர், 3. பால்பகர் பெயர், 4. காரணப் பெயர் எனவும் பிரிப்பர்.

**1. வினையாலணையும் பெயர்:**

'அவன் செய்தான்' என்னும் தொடரில் செய்தான் என்னும் வினை முற்றானது 'செய்தானைக் கண்டேன்' என்னும் தொடரில் வினையாலணையும் பெயர் ஆகிவிடுகிறது.

**2. தொழிற் பெயர்:**

வினையாலணையும் பெயர், காலம் உணர்த்தும், தொழிற் பெயர், காலம் உணர்த்தாது. தல், அல், அம், ஐ, கை, வை, கு, பு, சி, வி, வுள் மற்றும்

இன்னோரன்ன விகுதிகளுள் ஏதேனும் ஒன்றினைக் கொண்டுவருவது தொழிற் பெயர். அவற்றிற்குச் சில எடுத்துக்காட்டுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

*எடுத்துக் காட்டு:*

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வினையடி + தல் | : | செய்தல் | அம் | : | நோக்கம் |
| அல் | : | ஓடல் | வை | : | பார்வை |
| கை | : | வருகை | தி | : | மறதி |
| பு | : | மடிப்பு | ஐ | : | கொலை |
| கு | : | போக்கு | | | |

பால்காட்டும் விகுதிகள் சேர்ந்தும் பெயர்ச் சொல்லாதல் உண்டு. இதனைப் பால்பகர் பெயர்ச்சொல் எனலாம்.

*எடுத்துக் காட்டு:*

செய்து + அவன் = செய்தவன்

ஒரு காரணம் பற்றி வரும் பெயர்ச் சொல்லைக் காரணப் பெயர் என்பர்.

*எடுத்துக் காட்டு:*

பொன்னன் : பொன்னை உடையவன்

மரமேறி : மரம் ஏறுபவன்

சாலி, வான், மான், காரன், காரி வந்தர் முதலான வடமொழிச் சொற்களோடு சேர்ந்தும் பெயர்ச் சொல்லாதல் உண்டு. இதனைக் கலவைச் சொல் என்பர்.

*எடுத்துக் காட்டு:*

| | | |
|---|---|---|
| வான் | : | தனவான், பாக்கியவான் |
| மான் | : | நீதிமான், புத்திமான் |
| காரன் | : | பணக்காரன், வேலைக்காரன் |
| காரி | : | பணக்காரி, வேலைக்காரி, வம்புக்காரி |
| வந்தர் | : | செல்வந்தர், தன்வந்தர். |

ஒன்றன் பெயர் மற்றொன்றுக்கு ஆகி வருவதை ஆகுபெயர் என்பர். ‘‘தலைக்கு இரண்டனா கொடு’’ என்பதில் ‘தலை’ என்பது ஆளைக் குறிப்பதால் ஆகுபெயர் என்றாயிற்று. இதுபோன்று வினாப் பெயர் எனவும், தொகுதிப் பெயர் எனவும் பாகுபாடு செய்யலாம். பெயர்ச் சொற்களைப் பற்றி பேசும்பொழுது திணை, பால், எண், இடம் வேற்றுமை பற்றி விளக்கமும் மாணவர்களுக்கு ஓரளவாவது வேண்டும்.

**திணை:**

தமிழில் பெயரும் வினையும் பால், திணை, காட்டுதல் பெரிதும் வற்புறுத்தப்படுகிறது. இது மொழியின் அடிப்படை இலக்கணமாகக் கருதப்படுகிறது.

ஆங்கிலத்தில் வினைச் சொற்களில் பால் பாகுபாடு இல்லை. I cut, You cut, They cut என வருவதைக் காணலாம். திணை என்பது ஒழுக்கம் அல்லது பாகுபாடு எனப்படும். உயர்திணை, அஃறிணை எனத் திணை இருவகைப்படும்.

உயர்திணை : மக்கள், தேவர், நரகர்

அஃறிணை : மரம், மலை, நாய்

இவ்விரண்டு திணைக்கும் உடையனவாகவும் ஒரு சிலவற்றைச் சொல்லலாம்.

கடவுள் இருக்கிறார் : சாமி வருகிறார்

கடவுள் இருக்கிறது : சாமி இருக்கிறது

பால் :

பால் என்பதும் பகுப்பு அல்லது பிரிவு எனப்படும். ஆண்பால், பெண்பால், பலர் பால், ஒன்றன் பால், பலவின் பால் எனப் பால் ஐந்து வகைப்படும்.

| | | |
|---|---|---|
| உயர் திணை | ஆண்பால் | : கண்ணன், அவன் |
| | பெண்பால் | : சீதை, அவள் |
| | பலர்பால் | : மக்கள், பலர் |
| | ஒன்றன்பால் | : மாடு, அது |
| | பலவின்பால் | : மாடுகள், அவை |

எண்:

எண் ஒருமை பன்மை என இரு வகைப்படும். ஒன்றுக்கு மேற்பட்டதைக் குறிப்பது பன்மை எனப்படும்.

இடம்:

தன்மை, முன்னிலை, படர்க்கை என இடம் மூவகைப்படும்.

***தன்மை:***

| **ஒருமை** | **பன்மை** |
|---|---|
| நான், யான் | நாம், நாங்கள், யாம், யாங்கள் |

***முன்னிலை:***

| **ஒருமை** | **பன்மை** |
|---|---|
| நீ | நீர், நீங்கள் |

***படர்க்கை:***

| **ஒருமை** | **பன்மை** |
|---|---|
| அவன், அவள், அது. | அவர்கள், அவை |

“ஒரு பொருளை ஒருகால் வினை முதலாக்கியும், ஒருகால் செயப்படு பொருளாக்கியும், ஒருகால் கருவியாக்கியும், ஒருகால் ஏற்பதாக்கியும், ஒருகால் நீங்க நிற்பதாக்கியும், ஒருகால் இடமாக்கியும் நிற்பதால் வேற்றுமை எனப் பெயர் பெற்றதாய்ச் சொல்லுவர் தெய்வச்சிலையார். சுருங்கச் சொன்னால் பெயர்ச் சொல்லின் பொருளை வேறுபடுத்துவதே வேற்றுமை எனலாம். இயல்பாய் நிற்கும் பெயர்கள் வாக்கியங்களில் வரும்பொழுது அவற்றின் பொருள் திரிந்து வரும். இது வேற்றுமை. இப்படித் திரிவதற்கு அறிகுறியாகப் பெயர்களின் எழுத்துகளோ சொற்களோ சேர்க்கப்படு. இவ்வாறு சேர்க்கப்படும் எழுத்துகளையும் சொற்களையும் வேற்றுமை உருபுகள் என விளக்குவர் அ. கி. பரந்தாமனார்.

| வேற்றுமை | வேற்றுமை உருபுகள் |
|---|---|
| 1. முதலாம் வேற்றுமை | : உருபு இல்லை. |
| 2. இரண்டாம் வேற்றுமை | : ஐ |
| 3. மூன்றாம் வேற்றுமை | : ஆல், ஆன், ஒடு, ஓடு, உடன், கொண்டு. |
| 4. நான்காம் வேற்றுமை | : கு, பொருட்டு, நிமித்தம், ஆக. |
| 5. ஐந்தாம் வேற்றுமை | : இல், இன், இலிருந்து, நின்று. |
| 6. ஆறாம் வேற்றுமை | : அது, ஆது, அ, உடைய. |
| 7. ஏழாம் வேற்றுமை | : இல், உள், இடம், முன், பின், கண், பால், கீழ். |
| 8. எட்டாம் வேற்றுமை | : உருபு இல்லை. |

**வினைச் சொல்:**

பெயர்ச் சொல்லுக்கும் வினைச் சொல்லுக்கும் இடையேயுள்ள வேறுபாடானது மிக நுண்ணியது. பெயர்ச் சொல் காலம் காட்டாது. வினைச் சொல் காலம் காட்டும். பெயர்ச் சொல் வேற்றுமை உருபு ஏற்கும். வினைச் சொல்லானது வேற்றுமை உருபு ஏற்காது. வினைச் சொல் பற்றி அ. கி. பரந்தாமனார் கூறுவதை இங்கு நினைவில் கொள்ள வேண்டும். “மொழிக்கு இன்றியமையாத உறுப்பு வினைச் சொல்லாகும். வினைச் சொல்லானது ஒரு பொருளின் புடைப் பெயர்ச்சியைக் காட்டும். வினைச் சொல் தெரியும்படியாகவாவது குறிப்பாகவாவது காலத்தைக் காட்டும். இதனால் வினைச் சொல்லைப் பொதுவாகக் காலக் கிளவி என்பர். தமிழில் வினைச் சொற்களின் தன்மைகளை நன்கு அறிந்தால்தான் மொழியில் வல்லவராதல் இயலும்.”

வினைச் சொல்லானது தெரிநிலை வினை என்றும் குறிப்பு வினை என்றும் இரு வகைப்படும். தெரிநிலை வினையானது வினையடியைக் கொண்டிருக்கும்.

*எடுத்துக் காட்டு:*

ஓடினான் - இதில் ஓடு என்பது வினைப்பகுதியாக இருக்கும். குறிப்பு வினையின் பகுதியானது பெயர்ச் சொல்லாயிருக்கும்.

*எடுத்துக்காட்டு:*

பொன்னன் - இதில் பொன் என்பது பெயர்ச்சொல்.

வினையானது முற்று என்றும் எச்சம் என்றும் இருவகைப்படும். ஒரு சொல்லானது முற்றுப் பெற்றிருப்பின் முற்று எனப்படும்.
*எடுத்துக்காட்டு:* காக்கை பறந்தது.

இதில் பறந்தது என்பது முற்றுப் பெற்ற நிகழ்ச்சியாதலின் வினைமுற்று (Finitive Verb) எனப்படும். காக்கை கரியது என்பது குறிபு வினைமுற்று.

எச்சம் என்பது ஒரு கருத்தானது \ செயலானது முற்றுப் பெறாமல் இருப்பது. இது பெயரெச்சம், வினையெச்சம் என இருவகைப்படும். 'ஓடுகிற குதிரை' இது பெயரெச்சம். (Relative Verbal form) இதில் 'ஓடுகிற' என்னும் சொல் முற்றுப்பெறாமல் குதிரை என்னும் பெயர் கொண்டு முடிந்தது. இதனால், இது பெயரெச்சம் எனப்படும். இதுவும் தெரிநிலைப் பெயரெச்சம், குறிப்புப் பெயரெச்சம், என இரு வகைப்படும். மேலும் உடன்பாட்டுப் பெயரெச்சம் எதிர்மறைப் பெயரெச்சம் எனவும் பிரிப்பர். ஆடிப் பாடினாள் என்னும் தொடரில் 'ஆடி' என்னும் வினையானது முற்றாகப் பெறாமல் 'பாடினாள்' என்னும் வினைமுற்று கொண்டு முடிந்திருப்பதால் வினையெச்சம் எனப்படும். இவ் வினையெச்சமானது பிறிதொரு வினையெச்சத்தையும், பெயரெச்சத்தையும், வினைமுற்றையும், தொழிற் பெயரையும், வினையாலணையும் பெயரையும் ஒட்டி வரும். கீழே சில எடுத்துக்காட்டுகள் கொடுக்கப் பெற்றுள்ளன:
*எடுத்துக் காட்டு:*

| | | |
|---|---|---|
| ஓடி வந்து நிற்கிறான் | = | ஓடி என்னும் வினையெச்சம் வந்து என்னும் வினையெச்சத்தைத் தழுவி நிற்கிறான் என்னும் வினைமுற்று கொண்டு முடிந்தது. |
| ஓடி வந்த பையன் | = | ஓடி என்னும் வினையெச்சம் வந்த என்னும் பெயரெச்சத்தைத் தழுவி நின்றது. |
| ஓடி விளையாடுதல் | = | ஓடி என்னும் வினையெச்சம் விளையாடுதல் என்னும் தொழிலின் பெயரைக் கொண்டு முடிந்தது. |
| ஓடி வந்தன் விழுந்து கிடந்தான் | = | ஓடி என்னும் வினையெச்சம் விழுந்தவன் என்னும் வினையாலணையும் பெயர் கொண்டு முடிந்தது. |

இவ் வினையெச்சமானது இறந்தகால வினையெச்சம், நிகழ்கால வினையெச்சம், எதிர்கால வினையெச்சம் என மூவகைப்படும்.

1. **இறந்தகால வினையெச்சம்:**
   உ, இ, ய், என்பனவற்றைப் பகுதிகளாகக் கொண்டு வரும்.

   *எடுத்துக்காட்டு:* **செய்து போனான், ஓடி ஆடினான், போய் நின்றான்**

2. **நிகழ்கால வினையெச்சம்:**
   செய என்னும் வாய்பாடு கொண்டு முடியும்.

   *எடுத்துக் காட்டு:* செய்யச் சொன்னான், ஆட வருகிறான்

3. **எதிர்கால வினையெச்சம்:**
   இது, இன், ஆல், வான், பான் என்னும் விகுதிகளுள் ஏதேனும் ஒன்றைப் பெற்று வரும்.

   *எடுத்துக் காட்டு:* வந்தால் தருவேன், செய்வான், புகுவேன், உண்பான், போவேன். இவை போன்று எதிர் மறையாகவும் து, மல், மே என்னும் விகுதிகளைக் கொண்டும் எதிர்மறை வினையெச்சம் வரும்.
   *எடுத்துக் காட்டு:*
   காணாது சென்றான், உண்ணாமல் போனான், உண்ணாமே கொடுத்தான்.

வினையெச்சங்களைப் பற்றிய தெளிவான விளக்கம் மாணவர்களுக்கு மிகவும் இன்றியமையாததாகும். பல வாக்கியங்களை இணைத்து ஒரே வாக்கியமாக எழுதுவதற்கு வினையெச்ச அமைப்பு உதவுகிறது.

அவன் ஓடினான், அவன் ஆடினான், அவன் பாடினான் என்னும் மூன்று வாக்கியங்களையும் ஓடி ஆடிப் பாடினான் என ஒரே வாக்கியமாக எழுதி விடலாம். தமிழ் மொழியில் வினையெச்சங்கள் மிகவும் அற்புதமானவை. மிக நீண்ட இராமாயணக் கதையையோ பாரதக் கதையையோ வினையெச்சங்களைப் பயன்படுத்தி நூறு பக்கம் வரக்கூடிய ஒரே வாக்கியமாக எழுதிவிட முடியும்.

**தன் வினையும், பிற வினையும்:**

ஒரு செயலானது நேரிடையாகச் செய்பவனைச் சார்ந்து வருவது தன் வினை என்றும், ஒருவன் செய்யும் செயலானது அவனைச் சார்ந்து வராமல் பிறரைச் சார்ந்து வருவதற்குப் பிறவினை என்றும் வினையைப் பாகுபாடு செய்வர்.

| **தன்வினை** | **பிறவினை** |
|---|---|
| திருந்துவான் | திருத்துவான் |
| அமைவான் | அமைப்பான் |
| அடங்குவான் | அடக்குவான் |
| பெருகினான் | பெருக்கினான் |
| ஆடுவான் | ஆட்டுவான் |
| மாறுவான் | மாற்றுவான் |
| மாறினான் | மாற்றினான் |

**வினை வகைகள்:**

வினைச் சொல்லை அது உணர்த்தும் பொருளுக்கு ஏற்பவும் வகைப்படுத்துவர். இதனை ஆங்கிலத்தில் 'MOODS' என்பர். ஒரு செயலைப் பற்றிச் சொல்வதனை வினை நிலையுணர்த்தல் என்பர்.

*எடுத்துக் காட்டு:* தமிழ் உண்டு; அவன் கரியன்.

ஒரு செயலைச் செய்ய ஒருவனை ஏவுவது ஏவல் வினை எனப்படும்.

எடுத்துக்காட்டு:

நட, வா போ, உண்.

ஒருவனை வாழ்த்தவும் வையவும் செய்வதனை வியங்கோள் வினை என்பர். ஏவல் வினையே வியங்கோளாகவும் வரும்.

*எடுத்துக் காட்டு:*

நீ செய்க = ஏவல் வினை

நீ வாழ்க = வியங்கோள் வினை

ஒரு நிபந்தனையின் அடியாக வருவதை கட்டளை வினை எனலாம். இன், இல், ஆல், கால், ஏல், ஆயின் முதலியவற்றுள் ஒன்று கொண்டுவரின், கட்டளை வினையாகும்.

*எடுத்துக் காட்டு:*

| | |
|---|---|
| வரின் தருவேன் | வரில் தருவேன் |
| வருங்கால் கிடைக்கும் | வருவாயேல் கிடைக்கும் |
| வருவாயேல் நல்லது | கிடைக்குமாயின் நல்லது |
| கேட்டால் கிடைக்கும். | |

இது செய் என வருவதை, செய் என்னும் வாய்ப்பாட்டு வினை எனலாம்.

*எடுத்துக் காட்டு:*

நெல் விளைய மழை பெய்தது.

கோழி கூவப் பொழுது விடிந்தது.

**செய் வினையும், செயப்பாட்டு வினையும்:**

ஆங்கிலத்தில் செய்வினை செயப்பாட்டு வினை என இருவகையான வினை அமைப்புகள் உண்டு.

நான் இந்த வீட்டைக் கட்டினேன்.

இந்த வீட்டை நான் கட்டினேன்

என இரு வகையாகத் தமிழில் ஒரு வகை வினைமாற்றமும் செய்யாமல் செயப்படு பொருளை முதலில் வைக்க முடிகிறது. ஆங்கிலத்தில் செயப்படு பொருளை முதலில் வைத்து அதற்குச் சிறப்புக் கொடுக்க 'இரு' என்ற பொருளையுடைய துணை வினைகள் முன்னர் அமைக்க வேண்டியுள்ளது.

This house was built by me.

This house has been built by me.

This house is being built by me.

This house is built by me.

என்று ஆங்கில வாக்கியங்கள் செயப்பாட்டுப் பொருளில் அமைதல் மிகுதி என்பர் ரா. சீனிவாசன்.

தமிழில் ஆயிற்று, ஆல் என்னும் துணை வினைகளைக் கொண்டு செயப்பாட்டு வினைப் பொருள் உணர்த்தப்படுகின்றன.

*எடுத்துக் காட்டு:*

முடிந்து போயிற்று

அது என்னால் உடைந்தது.

இவை போன்றே பெயரெச்சமும் வினையாலணையும் பெயரும் செயப்பாட்டு வினைச் செயலை உணர்த்துவதைக் காணலாம்.

*எடுத்துக் காட்டு:*

எழுதின நூல் வேண்டும் - பெயரெச்சம்

சொன்னது போதும் - வினையாலணையும் பெயர்.

திராவிட மொழிகளில் செயப்பாட்டு வினை வடிவம் இல்லையென்பது ஒரு சில மொழி நூலாரின் கருத்தாகும். படு என்ற துணை வினை கொண்டு செயப்பாட்டு வினைப் பொருளை உணர்த்துவதே தமிழ் வழக்காகும்.

**ஒலிச் சொற்கள்:**

சொல்லுக்கும் பொருளுக்கும் தொடர்பு இருப்பது போலவே ஒலிக்கும் ஓரளவுக்குத் தொடர்பு இருக்கிறது. தொல்காப்பியர் கூறும் உரிச் சொல்லைக் கணம் ஒலிச் சொற்களுக்குப் பொருந்தும் எனலாம். உரிச் சொல்லானது பண்பு, குறிப்பு ஆகியவற்றின் அடிப்படையில் தோன்றும் என்பர் தொல்காப்பியர். இசை பற்றி அமையும் சொற்களே ஒலிச் சொற்களாகும். ஒலிச் சொற்கள் ஒலிக் குறிப்புகளாகவும் முழுச் சொற்களாகவும் வருவனவாகும்.

*எடுத்துக் காட்டு:*

ஒல்லென ஒலித்தது - ஒலிக் குறிப்பாக வந்தது.
குக்கூ என்றது கோழி - ஒலிக் குறிப்பாக வந்தது.

ஒலிச் சொற்கள் இரட்டித்தும், என்று, என என்னும் துணை விகுதிகள் கொண்டும் இல்லாமலும் வரும். இவற்றை இரட்டைக் கிளவி என்பர்.

எடுத்துக் காட்டு:

தடதட என்று தட்டினான்
மடமட எனப் பேசினான்
படபடத்தது
துடிதுடித்தது.

ஒரே சொல்லானது மறுமுறையும் முன் சொன்னதற்கு எதிரொலியாக வருவதை எதிரொலிச் சொல் எனலாம்.

எடுத்துக் காட்டு:

வண்டி கிண்டி, சோறு கீறு, தண்ணி கிண்ணி, வீடு கீடு, கந்தல் கிந்தல். இங்குக் கி, கீ எனத் தொடங்கும் சொற்களே எதிரொலிச் சொற்களாக வந்திருப்பதைக் காணலாம். இவ்வெதிரொலிச் சொற்கள் பொருள் உணர்த்தா. சம்பளம் கிம்பளம் என்னும் எதிரொலிச் சொல்லில் மட்டும் கிம்பளம் என்பது லஞ்சம், ஊழல் ஆகியவற்கைக் குறிக்கின்றது.

வம்பு தும்பு, ஓட்டை ஒடைசல், சாக்குப் போக்கு, கொஞ்ச நஞ்சம், அடி தடி, அக்கம் பக்கம், மிச்சம் மீதி, கங்கு கரை, தங்கு தடை, பேச்சு மூச்சு, எக்கச் சக்கம், கிட்டத் தட்ட.

இங்கு முதல் சொல்லைத் தொடர்ந்து வரக்கூடிய சொல்லானது பொருள் உணர்த்தும் சொல்லாகவே இருக்கிறது. இதனை இணைச் சொல் என்பர்.

இவை தவிர சில ஒலிச் சொற்கள் மிகுதிப் பொருளை உணர்த்துவதையும் காணலாம்.

எடுத்துக் காட்டு:

பச்சைப் பசேல், கன்னங் கரேல், வெள்ளை வெளேர், சின்னஞ் சிறு, தன்னந் தனி, புத்தம் புதிது, வெட்டை வெளி, நட்டநடு, பட்டப் பகல், தட்டுத் தடை

**இடைச் சொல் :**

பெயர் வினைச் சொற்களைச் சார்ந்து வரக்கூடிய சொல்லுக்கு இடைச் சொல் என்பர் தொல்காப்பியர். நன்னூல் கூறும் இடைச் சொல் எல்லாவற்றையும் மாணவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்பது அவசியமில்லை. இருந்தாலும் ஏகார இடைச் சொல், ஓகார இடைச் சொல், உம்மை இடைச்சொல் ஆகியவற்றைப் பற்றி ஓரளவு தெரிந்து கொள்ளுவது நலம்.

எடுத்துக் காட்டு:

பாண்டவருள் தருமனே நல்லவன் - பிரிநிலை
பள்ளிக்கூடத்திற்குத்தானே போகிறாய்? - வினா
காதலே பெரிது - உயர்வு
காமமே பெரிது - இழிவு

இதைப் போலவே ஓகார இடைச்சொல்லானது,

எடுத்துக் காட்டு:

பிச்சை எடுக்கவோ வந்தாய்? - ஒழியிசை
நானோ செய்வேன்? - எதிர்மறை
நீயோ பாடினாய்? - வினா
நாயோ நரியோ வந்திருக்கும் - ஐயம்

உம்மைச் சொல்லானது,

எடுத்துக் காட்டு:

மூவரும் வந்தனர் - முற்றும்மை
நாயும் இச்சோற்றைத் தின்னாது - இழிவு

குரங்கும் ஏறமுடியாத மரம் - உயர்வு

அண்ணனும் தம்பியும் வந்தார்கள் - எண்ணும்மை

நீயும் போ, நானும் வருகிறேன் - இறந்தது

தழுவியது முதலான பொருளில் வரும்.

## சொல்லியல் விளக்கப் படம் - 1

- தினை (2)
  - உயர் திணை,
  - அ.ஃறிணை
- பால் (5)
  - ஆண்பால்
  - பெண்பால்
  - பலர்பால்
  - ஒன்றன்பால்
  - பலவின்பால்
- வழு (7)
  - திணைவழு
  - பால்வழு
  - இடவழு
  - காலவழு
  - மரபுவழு
  - செப்புவழு
  - வினைவழு
- வேற்றுமை (8)
  - 1-ஆம் வேற்றுமை
  - 2-ஆம் வேற்றுமை
  - 3-ஆம் வேற்றுமை
  - 4-ஆம் வேற்றுமை
  - 5-ஆம் வேற்றுமை
  - 6-ஆம் வேற்றுமை
  - 7-ஆம் வேற்றுமை
  - 8-ஆம் வேற்றுமை
- தொகை (6)
  - வேற்றுமைத் தொகை
  - உவமைத் தொகை
  - வினைத் தொகை
  - பண்புத் தொகை
  - உம்மைத தொகை
  - அன்மொழித் தொகை
- இடம் (3)
  - தன்மை
  - முன்னிலை
  - படர்கை
- காலம் (3)
  - இறந்த காலம்
  - நிகழ் காலம்
  - எதிர் காலம்
- பொது மொழி
  - வழக்கு
  - செய்யுள்

உரையாசிரியர்களால் மேற்கொள்ளபபெற்ற சொல்லாராய்ச்சியின் வரைபடம் இது. இதன் முலம் சொல் பற்றிய ஆராய்ச்சியினை எண் வகையாக மேற்கொண்டார்கள் என்பது விளங்கும். பட்டப் படிப்பு பயிலும் மாணவர்கள் இவ்வெண் வகையான சொல்லாராய்ச்சிவழித் தமிழ்ச் சொற்களைப் புரிந்து கொள்வார்களானால் அவர்கள் மொழித்திறன் மிக்கவராக விளங்குதல் திண்ணம்.

எடுத்துக்காட்டு:




**மாணவர் மனதில் கொள்ளவேண்டியன:**

1. பின்வரும் தன்வினைகளைப் பிறவினைகளாக்கி வாக்கியங்களில் அமைத்துத் தருக:
   அகல், அடங்கு, அருந்து, இரு, உதை, உளற்று, ஓடு, செல், தடு, பயில், மறை, வை.
2. பின்வரும் பிறவினைப் பகுதிகளுக்குரிய தன்வினைப் பகுதிகளை எழுதி அவற்றை வாக்கியங்களில் அமைத்துத் தருக:
   அறிவி, ஆட்டு, இணக்கு, உருக்கு, காட்டு, தேற்று, உணர்த்து, போக்கு, மாற்று, மூட்டு, வருத்து, வீழ்த்து.
3. பெயராக்கச் சொற்களுக்கு எடுத்துக்காட்டுகள் எழுதிப் பழகு.
4. வான், மான், காரன், காரி, வந்தர் - என்னும் இச் சொற்களின் அடியாகத் தோன்றும் பெயர்ச் சொற்களை எழுதுக:
5. செயப்படு வினைக்கும் செயப்பாட்டு வினைக்கும் உள்ள வேறுபாட்டை எடுத்துக்காட்டுகள் தந்து விளக்கு.
6. பின்வரும் ஒலிக்குறிப்புச் சொற்களை (ஒலிச் சொற்களை) வாக்கியங்களில் அமைத்துக் காட்டுக.

மடமட, தடதட, சடசட, சலசல, குபுகுபு, சளசள, கடகட, படபட, தளதள, மளமள, கலகல, பளபள, சோசோ, கணகண, டமடம, வடவட.

வண்டிகிண்டி, சோறுகீறு, வீடுகீடு, சம்பளம் கிம்பளம், பானை கீனை, சட்டிகிட்டி, மோரு கீரு, தண்ணி கிண்ணி.

7. பின்வரும் இனச் சொற்களை வாக்கியங்களில் அமைத்துப் பொருள் புலப்படுத்துக:
   கங்கு கரை, தங்கு தடை, அக்கம் பக்கம், மிச்சம் மீதி, பேச்சு மூச்சு, எக்கச் சக்கம், கிட்டத் தட்ட, கோட்டை கொத்தளம், பட்டம் பதவி, சட்ட திட்டம், அருமை பெருமை, நரை திரை, குப்பைக் கூளம், இன்ப துன்பம், தப்பித் தவறி, உருண்டு திரண்டு, கண்ட துண்டமாக, சாக்குப் போக்கு.

**துணை புரிந்த நூல்கள்:**


1. ரா. சீனிவாசன் : மொழி இயல்,
   பாரி நிலையம், 59, பிராட்வே, சென்னை - 1.
   முதற்பதிப்பு 1960.
2. அ.கி. பரந்தாமனார் : நல்ல தமிழ் எழுத வேண்டுமா?
   அல்லி நிலையம்,
   19, முத்துமுதலி தெரு, வேப்பேரி,
   சென்னை – 600007.
   ஆறாம் பதிப்பு, 1978.

## பாடம் - 3

# தொடரியல்

**ஓர் அறிமுகம்:**

எழுத்து, தனித்தோ அல்லது இணைந்தோ சொல்லாகிறது. இச் சொல்லானது பொருளை உணர்ந்து தனி நிலையாக மொழியில் செயல்பட்டாலும் ஒரு கருத்தினை, ஓர் எண்ணத்தை/அனுபவத்தை வெளியிடப் போதுமானதாக இருந்திருக்க முடியாது. எனவே, ஒரு காலத்தில் மனம் பல சொற்களை இணைத்துப் பார்க்கத் தொடங்கியிருக்க வேண்டும். இம் முயற்சியின் விளைவே மனிதன் தன் அனுபவத்தைச் சொற்களால் தொடர் மொழியாக, வாக்கியங்களாக வெளியிடத் தொடங்கினான். தொல்காப்பியம் சொல்லதிகாரத்தின் முதல் அதிகாரமாகிய கிளவியாக்கம் என்னும் தலைப்புக்கு விளக்கம் கூறிய தெய்வச்சிலையார் கிளவியாக்கம் என்றால் கிளவியதாக்கம் எனவும், கிளவியதாக்கம் என்பதற்குப் பொருள் சொல்லினது தொடர்ச்சி எனவும் கூறியிருப்பது இங்கு நினைவில் கொள்ளவேண்டும்.

மொழிப் பயிற்சி என்னும் தலைப்பில் எழுத்தியல், சொல்லியல் என்னும் இரு பாடங்களைப் படித்த மாணவர்களுக்குத் தொடர் என்றால் என்ன?, தொடர் மொழி என்றால் என்ன? என்பனவற்றை விளக்கி அவற்றை அறிமுகப்படுத்தும் வகையில் தொடரியல் என்னும் தலைப்பில் எழுதப் பெற்றதே இப் பாடமாகும். தமிழில் தொடரமைப்புபற்றி, தொடரியல்பற்றிப் பல மொழி நூல் வல்லவர்கள் பல நூல்களை எழுதியிருந்தாலும் சிறந்த முறையில் பிழையற எழுதவும், புதுப்புது வாக்கியங்களை உருவாக்கவும், பல வாக்கியங்களின் அமைப்பினைப் புரிந்துகொள்ளவும் உதவக்கூடிய வகையில் மாணவர்களுக்கென வழுதப் பெற்றுள்ள நூல் ஒன்றுகூட கிடையாது எனலாம்.

இருந்தாலும் ஞா. தேவநேயப் பாவாணர் எழுதிய ‘உயர்தரக் கட்டுரை இலக்கணம் (முதலாம் பாகம்)’ என்னும் நூலையும் தென்புலோலியூர் மு. கணபதிப் பிள்ளை எழுதிய ‘பயிற்சித் தமிழ் (இரண்டாம் பாகம்)’ என்னும் நூலையும் இங்கு குறிப்பிடல் வேண்டும். இவ்விரு நூல்களும் மாணவர்களுக்கு வாக்கிய அமைப்புப் பற்றியும், வாக்கியங்களை உருவாக்கும் வகையைப் பற்றியும் விரிவாகச் சொல்லுவதைக் காணலாம். மாணவர்கள் இவ்விரு நூல்களையும் படிக்க வேண்டும். இவை தவிர அ. கி. பரந்தாமனார் எழுதிய ‘நல்ல தமிழ் எழுத வேண்டுமா? என்னும் நூலிலுள்ள வாக்கிய முறைகளையும், அமைக்கும் வகைகளையும் ‘வாக்கிய அமைப்பில் அறிய வேண்டியன’, ‘தேடி வைத்த செல்வம்’ முதலான

அதிகாரங்களைக் கட்டாயம் படிக்க வேண்டும். இவற்றை படிப்பின் மாணவர்கள் மொழித் திறனோடு எழுத்துத் திறன் மிக்கவராகவும் விளங்குவர் என்பது உறுதி.

'வாக்கியம்' என்பது வடசொல் என்று கேட்கும்போது வியப்படையலாம். வாக்கியத்திற்குத் தமிழ்ச் சொல் இல்லையா? என்று ஒருவர் கேட்கலாம். வாக்கியத்தை 'முற்றுச் சொற்றொடர்' எனலாம். வாக்கியம் என்பதே பெரிதும் வழங்கிவந்திருப்பதால் நாம் அச் சொல்லை ஏற்றுக் கொள்வதால் தவறில்லை. 'முற்றுச் சொற்றொடர்' என்றால் இன்று அது பலருக்குப் புரியாத புதிராக இருக்கும். வாக்கியம் உரைநடையில் மிகமிக இன்றியமையாத பகுதியாகும் என்று அ.கி. பரந்தாமனார் கூறுவது பொருத்தமே. வாக்கியங்களின் அமைப்புமுறை பற்றிப் பேசுவதை மொழி நூல் வல்லுநர் தொடரியல் என்பர். உரையாசிரியர்களும் இருமொழித் தொடர். பன்மொழித் தொடர் எனப் பேசுவதால் வாக்கிய அமைப்புப் பற்றி இனி பேசும்பொழுது பொதுவாகத் தொடர் எனப் பேசலாம்.

தொடரியலை மூன்று வகையாகப் பிரிப்பர் மொழி நூலார். அவை பின்வருமாறு: 1. தொடர் அமைப்பு 2. தொடர் முறை 3. தொடர் இயைபு

**1. தொடர் அமைப்பு:**

வாக்கியங்களில் பலவகைச் சொற்கள் சில ஒழுங்கான முறைகளில் தொடர்ந்து நிற்கின்றன. 'சாத்தான் உண்டான்' என்றும் தொடரில் உள்ள இரண்டு சொற்களும் தம்மில் தொடர்புடையனவே. இதைப் போன்றே "நீண்டு வளர்ந்த மரத்தின் மேல் ஏறினான்" என்னும் தொடரில் ஒவ்வொரு சொல்லும் அடுத்திருக்கும் சொல்லோடு தொடர்புடையது எனக்கொள்ளாமல் "நீண்டு வளர்ந்த மரத்தின் மேல் ஏறினான்" என்பது ஒரு தொகுதியாகவும், "குள்ள உருவமுள்ள பையன்" என்பது ஒரு தொகுதியாகவும் கொண்டு பொருள் உணர்கிறார்கள். இத் தொகுதிகளுக்கிடையே உள்ள உறவு எத்தகையது என்பது ஒவ்வொருவருக்கும் தெரியாவிடினும் பழக்கத்தால் சொல் தொகுதிகளின் அமைப்புக்கள் அவர்கள் மனத்தில் பதிந்திருக்கின்றன. இவ்வமைப்புகளை மாணவர்களுக்கு விளக்க வேண்டும்.

"பெரிய நடிகன் விரைந்து வந்தான்" என்னும் தொடரில் 'பெரிய நடிகன்' என்பது ஒரு தொடர். 'விரைந்து வந்தான்' என்பது இன்னொரு தொடர். இத் தொடரை,

1. நடிகன் வந்தான் 2. பெரிய நடிகன் 3. விரைந்து வந்தான் 4. பெரிய நடிகன் விரைந்து வந்தான்.

என விரித்துரைக்கலாம். இதனைக் கீழ்க் காணும் விளக்கப் படத்தின் மூலம் அறியலாம்.

| | | | |
|---|---|---|---|
| பெரிய | நடிகன் | விரைந்து | வந்தான் |
| பெரிய | நடிகன் | விரைந்து | வந்தான் |
| பெரிய | நடிகன் | விரைந்து | வந்தான் |

ான்று அடுத்திருக்கும் நிலையினைத் தொடரமைப்பு என்பர். ‘பெரிய’ என்னும் சொல் ‘நடிகன்’ என்னும் சொல்லை அடுத்து வருவதை அண்மை நிலையுறுப்பு என்பர். சில வேளைகளில் சொற்கள் அண்மை நிலையில் தொடர்ந்து வரும்பொழுது பொருள் மயக்கம் ஏற்படுவதுண்டு. ‘‘ஏழை அரசாங்க ஊழியன்’’ என்னும் தொடரில் உள்ள சொற்களைக் கீழே தந்துள்ள நிலையில் பிரித்தால் பொருள் மாறுபடும்.




1. ஏழை அரசாங்க ஊழியன்
2. அரசாங்க ஏழை ஊழியன்

உரையாசிரியர்களால் மேற்கோளாகக் காட்டப்படும் ‘புலி கொல் யானை’ என்னும் தொடரும் இத்தகையதேயாம். புலியால் கொல்லப்பட்ட யானை எனவும் புலியைக் கொல்லும் யானை எனவும் இருவேறு பொருள்படுவதைக் காணலாம். இப்பொருள் மயக்கத்தை நீக்குவதில் மாணவர்கள் மிகக் கவனமாக இருக்கவேண்டும். எனவே மாணவர்கள் தொடரமைப்புப் பற்றிக் கவனம் செலுத்த வேண்டும்.

இவ்வாறு சொற்களானது அண்மை நிலையைப் பெற்று வரும் தொடரமைப்பை அகநிலைத் தொடர் எனவும், புற நிலைத் தொடர் எனவும் பிரிப்பர். இவற்றைத் தொகை நிலைத் தொடர் எனக் கூறுவர் தெய்வச்சிலையார்.

யானைக் கோடு
பொன் மேனி
கொல் யானை
கருங்குதிரை

என்பன தொகை நிலைத் தொடர் எனவும், சாத்தான் உண்டான், சாத்தனை வெட்டினான், உண்டு வந்தான் என்பன தொகா நிலைத் தொடர் எனவும் விளக்குவர்.

'படித்த புலவர் பேசினார்' என்னும் தொடரிலுள்ள 'படித்த புலவர்' என்பதை பெயர்த்தொடர் எனலாம். 'பெரிய நடிகன் விரைந்து வந்தான்' என்னும் தொடரிலுள்ள 'விரைந்து வந்தான்' என்பதனை வினைத் தொடர் எனலாம். ஆங்கில மொழியமைப்பைப் போன்று பெயரடை என்றோ வினையடை என்றோ தனியமைப்பு, தமிழிலும் இல்லை. பெயரைச் சிறப்பிக்கும் அடைகள் பல்வேறாகத் தமிழில் உள்ளன. அதே போல வினையைச் சிறப்பிக்கும் அடைகளும் சில உள. இவ்வாறு தொடரும் தொடரமைப்பை அடைத் தொடரமைப்பு என்பர். பண்பு அடிச்சொற்கள் பெரும்பாலும் பெயரடைகளாக விளங்குகின்றன. இவ்வாறு தொடரும் அமைப்பைப் பண்புத் தொகை என்பர் என்று கூறிவிட்டு, 'நல்லபையன்', 'அழகான பெண்' என்று பெயரடைக்கு மேற்கோள் காட்டுவார் ரா. சீனிவாசன்.

இதே போன்று வினையடைகளாக வருவனவற்றுக்கு, 'வேகமாக ஓடினான்', 'அன்பாகப் பேசினான்' என்பவற்றை எடுத்துக் காட்டுவர். இவ்வமைப்பினை 'பெயரடைத் தொடர்' எனவும், வினையடைத் தொடர் எனவும் சொல்லலாம். மொத்தத்தில் ஒரு தொடர் \ வாக்கியம் என்பது பெயர்த் தொடரும் வினைத் தொடரும் இணைந்தே வரக்கூடிய ஒன்று எனலாம். இதனை மொழி நூலார் "S → NP + VP" என்பர்.

பலவகையான வாக்கிய அமைப்புகளைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கு முன்னால் ஒரு வாக்கியத்தில் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் பற்றித் தெரிந்து கொள்ளுவது அவசியம்.

எழுவாய் என்பது தலைமையான கருத்து எழுவதற்கு இடமாக இருப்பது.
பயனிலை என்பது எழுவாயின் பயனைத் தன்னிடத்தே நிலைத்திருக்கச் செய்வது.

செயற்படுவதற்கு உரியதாக உள்ள பொருளுக்கு செயப்படுபொருள் என்று பெயர்.

‘பறவை கூடு கட்டுகிறது’ என்னும் வாக்கியத்தில் பறவை என்பது எழுவாயாகும். முதலில் பயனிலையைக் கண்டு பிடித்து, யார் என்று கேட்டால் அ∴றிணை எழுவாயைக் கண்டு பிடிக்கலாம். பறவை என்ன செய்தது என்று கேட்பதன்மூலம் ‘கூடு’ என்பது செயப்படுபொருள் எனக் கண்டுபிடித்துவிடலாம். சில வாக்கியங்களில் செயப்படுபொருள் இல்லாமல் இருக்கும்.

எடுத்துக்காட்டு:

இராமன் நடந்தான்.

அ. கி. பரந்தாமனாரின் எழுவாய் முதலியவற்றைப் பற்றிய விளக்கம் மாணவர்களுக்குத் தேவையானது. எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் (இரண்டாம் வேற்றுமையிலே இருக்கும் எழுவாய் தொக்கு இருக்கும்) முதலியன வாக்கிய உறுப்புகளாகும் என்று கூறுவர் ஞா. தேவநேயப்பாவாணர்.

பெயர்த் தொடரமைப்பு வகையினை எழுவாய், பயனிலைத் தொடரமைப்பு எனலாம். இதுவே பெரும்பாலும் தமிழில் இருப்பது.

எடுத்துக்காட்டு:

1. கண்ணன் நல்லவன்
2. கண்ணன் நடந்தான்
3. கண்ணன் நல்லவனா?
4. கண்ணன் வாழ்க.

எழுவாய் பயனிலைத் தொடர்களின் பொருளுடைய அரைகுறைத் தொடர்களும் தமிழில் உள்ளன.

1. ஏவல் : வா, வாருங்கள், வாரும், வராதே, வாராதீர், வாராதீர்கள்.
2. வியங்கோள் : வாழ்க, வளர்க.
3. விளி : கண்ணே
4. தனிச் சொற்கள்: நன்றி, வணக்கம், நலம்.
5. பழமொழி : பாலுக்கும் காவல், பூனைக்கும் தோழன்.

எழுவாய் பயனிலைத் தொடர்களில் பொரும்பாலும் எழுவாய் முன்னாலும் பயனிலையும் அதைச் சார்ந்தனவும் பின்னாலும் அமைவதே முறை,

செயற்படுபொருள் அது நடுவில் நிற்கும். கீழே உள்ள எடுத்துக்காட்டு இதை நன்கு விளக்கும்.

எடுத்துக்காட்டு:

1. கண்ணன் பழத்தைக் கடித்துத் தின்றான்
   1 2
2. பழத்தைக் கடித்துத் தின்றான் கண்ணன்
   2 1
3. கண்ணன் படித்துத் தின்றான் பழத்தை
   1 2
4. பழத்தைக் கண்ணன் கடித்துத் தின்றான்
   2 1 2

எனவே சொற்களில் எழுவாய் பயனிலை அமையும் முறை பற்றி மாணவர்கள் தெரிந்து கொள்ளுத் அவசியம்.

வாக்கியத்தில் எழுவாயாக நிற்கும் பெயரின் திணை, பால், எண், இடங்களும் பயனிலையாக நிற்கும் வினைமுற்றின் திணை, பால், எண், இடங்களும் ஒத்திருக்க வேண்டும். இதைத்தான் மொழி நூலார் இயைபு என்பர். உயர் திணை எழுவாயாக இருந்தால் உயர்திணைப் பயனிலையும், அஃறிணை எழுவாயாக இருந்தால் அஃறிணைப் பயனிலையும் வரவேண்டும்.

எடுத்துக்காட்டு:

சாத்தன் உண்டான்
கமலா ஓடினாள்
நண்பர்கள் கூடிப் பேசுகிறார்கள்
குதிரை ஓடுகிறது
வண்டிகள் ஓடா

சில சமயங்களில் சொற்களில் திணை விரவி வருவதும் உண்டு. அப்படி வரும் பொழுது அச்சொற்களில் மிகுதியாக வந்துள்ள திணைப் பொருளுக்கு ஏற்ப பயனிலை முடிவு கொடுக்க வேண்டும்.

எடுத்துக்காட்டு:

நானும் என் நாயும் சென்றோம்.

நானும் நீயும் அவனும் சென்றோம்.

பொதுவாக சொற்றொடர்களை அவற்றின் பொருள் முடிவை ஒட்டி கிளவி, வாக்கியம் எனப் பிரிப்பர். ஒரு தொடரில் எழுவாயும் பயனிலையும் இணைந்து இருந்தும் சொல்ல வேண்டிய கருத்து முடிவு பெறாமல் இருந்தால் அத்தொடரினைக் கிளவி எனலாம். இதனைக் கிளவியம் என்பர். ஞா. தேவநேயப் பாவாணர். கிளவியத்தைப் பெயர்க் கிளவியம், பெயரெச்சக் கிளவியம், வினையெச்சக் கிளவியம் எனவும் பிரிப்பர். என்பது, அல்லது, என்று, என்னும் சொல்லானது எழுவாயைப் பயனிலையோடு இணைப்பதைப் பெயர்க் கிளவியம் என்பர்.

எடுத்துக்காட்டு:

| குயில் காகத்தின் கூட்டில் முட்டையிடும் | என்பது | யாருக்குத் தெரியாது |
|---|---|---|
| எழுவாய் | இணைப்புச் சொல் | பயனிலை |

பெயர்க் கிளவியம்

**பெயரெச்சக் கிளவியம்:**

எடுத்துக்காட்டு:

தச்சன் செய்த (பெட்டி)

வள்ளுவர் வகுத்த (வழி)

**வினையெச்சக் கிளவியம்:**

எடுத்துக்காட்டு:

மழை செய்து (பயிர் விளைகிறது)

மாணவன் படித்துத் (தேறுகின்றான்)

ஞா. தேவநேயப் பாவாணர் எடுத்துக்காட்டும் பிளவியம் பற்றிய இவ் விளக்கமானது மாணவர்களுக்கு வாக்கியங்களின் வகைகளைப் பற்றித் தெரிந்து கொள்ள உதவும்.

**வாக்கியமும் அதன் வகைகளும்:**

வாக்கியத்தினை மூன்று வகைகளாகப் பிரிப்பர். அவையாவன:

1. தனி வாக்கியம்
2. தொடர் வாக்கியம்
3. கலவை வாக்கியம்

கதம்ப வாக்கியம் (Mixed sentence) என ஒன்றினையும் சேர்த்து வாக்கியமானது நான்கு வகைப்படும் என்பர். ஆங்கிலத்தில் இலக்கண நூல்கள் சிலவற்றைப் பாடசாலைகளுக்கென வகுத்தமைத்த நெஸ்.ஃ.வீல்டு முதலானோர் வாக்கிய வகைகள் கதம்ப வாக்கியம் எனவும் ஒன்று வகுப்பர். தமிழ் மொழி பயிலும் மாணவர்களுக்கு அம்முறை சிறிது குழப்பம் தருவதாகும் எனக் கருதியமையின் இங்கே சேர்த்துக்கொள்ளப்படவில்லை என மு. கணபதிப்பிள்ளை கூறுவது ஏற்றுக்கொள்ளத்தக்கதே.

### 1. தனி வாக்கியம்:

ஒரு எழுவாயும் பயனிலையும் இணைந்து வரக்கூடிய வாக்கியத்தினைத் தனி வாக்கியம் எனலாம்.

எடுத்துக்காட்டு:

1. மயில் ஆடுகிறது.
2. சாத்தன் வந்தான்.

இத்தனி வாக்கியங்களைப் பெயரடைத் தொடர்களையும், வினையடைத் தொடர்களையும் இணைத்துப் பெரிது படுத்தலாம்.

எடுத்துக்காட்டு:

மயல் ஆடுகிறது.

ஓர் அழகான மயில் ஆடுகிறது.

அழகான மயில் ஆடுகிறது.

ஓர் அழகான ஆண் மயில் ஆடுகிறது.

இம்முறையில் ஒரு தனி வாக்கியத்தினை ஒன்றிக்கு மேற்பட்ட நிலையில் விரித்தும் எழுதலாம்.

### 2. தொடர் வாக்கியம்:

ஒன்றுக்கு மேற்பட்ட தனி வாக்கியங்கள் இணைந்து அல்லது பல எழுவாய்கள் ஒரு பயனிலையோடு சேர்ந்து அல்லது ஒரு எழுவாய் பல பயனிலைகளைக் கொண்டு வருவது தொடர் வாக்கியம் எனப்படும்.

எடுத்துக்காட்டு:

- நான் சென்னைக்குப் போனேன். போனதும் எனக்குக் கடுமையான காய்ச்சல் கண்டதால் உடனே தில்லிக்குத் திரும்பி விட்டேன்.

ஓர் எழுவாயின் பல வினைகள் தொடர்ந்து வரின் அவையெல்லாம் ஆங்கிலக் கூட்டு வாக்கியத்தில் முற்றுவினையாகவே இருக்கும். ஆனால் தமிழிலோ அவற்றுள் இறுதி வினை தவிர ஏனையவெல்லாம் எச்ச வினையாக இருக்கலாம். ஆங்கிலத்தில் கூட்டு வாக்கியமாக இருப்பது தமிழிலும் கூட்டு வாக்கியமாக இருக்க

வேண்டும் என்னும் நியதி இல்லை என்பர் தேவநேயப் பாவாணர். இதற்கு எடுத்துக்காட்டாக அவர் கூறுவது:

Nambi went to School and learnt his lessions.

- Compound Sentence.

நம்பி பள்ளிக்கூடம் சென்று தன் பாடங்களைப் படித்தான்.

- தனி வாக்கியம்.

**3. கலவை வாக்கியம்:**

கலவை வாக்கியம் என்பது பல வாக்கியங்கள் ஒன்று சேர்ந்து ஒரு வாக்கியமாக அமைவது. இதில் ஒன்று முதன்மை வாக்கியமாக / கிளவியாக இருக்கும். மற்றது சார்புக் கிளவியாக இருக்கும். சில சமயம் கலவை வாக்கியத்தில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட சார்புக் கிளவிகள் இருக்கும்.

| கூற்றுவன் வரும் | வேளை யாருக்கும் தெரியாது. |
|---|---|
| சார்புக் கிளவி | முதன்மைக் கிளவி |

இம் மூன்று வகையான வாக்கியங்களை அவற்றின் பொருள் முதலை நோக்கி நான்கு வகையாகப் பிரிக்கலாம். அவை பின்வருமாறு:

1. செய்தி வாக்கியம்
2. ஏவல் வாக்கியம்
3. வினா வாக்கியம்
4. உணர்ச்சி வாக்கியம்

எடுத்துக்காட்டு:

1. மழை பெய்தால் நெல் விளையும் - செய்தி வாக்கியம்
2. இது யாருடைய வீடு? - வினா வாக்கியம்
3. நாளைக்குப் பாடம் படித்து வா - ஏவல் வாக்கியம்
4. அந்தோ, யான் ஒரு பாவமும் அறியேன். - உணர்ச்சி வாக்கியம்

வாக்கியமும் அதன் வகைகளையும் பற்றித் தெரிந்து கொண்ட மாணவர்கள் ஒரு வாக்கியத்தினை இனங்கண்டு கொள்ளவும் தெரிய வேண்டும். திணை, பால், எண், இடம், காலம், வினா, செப்பு முதலான ஏழு நிலைகளில் தவறின்றி வாக்கியங்களை உருவாக்கத் தெரிய வேண்டும். சொற்களை அதன் பொருளுக்கு ஏற்ப பயன்படுத்த வேண்டும். ஒவ்வொரு மனிதனிடத்தும் எண்ணமுடியாத அளவுக்கு வாக்கியங்களை ஒருவாக்கும் திறன் இருக்கிறது. அவற்றைச் செயற்படுத்தப் பயன்படுவதே இலக்கணமாகும். எனவே இப் பாடமானது பல வகையான சொற்களை உருவாக்க உதவும் வகையில் எழுதப்பட்டதே தவிர இப்படித்தான்

மாணவர்கள் வாக்கியங்களை ஒருவாக்க வேண்டும் என்று விதி முறைப்படுத்தி எழுதப்படவில்லை. வாக்கியங்களை இலக்கண வழுவின்றி எழுதினால் மட்டும் போதாது. அவற்றின் பொருண்மை நிலையினை வெளிப்படுத்தும் நிலையிலும் எழுத வேண்டும்.

‘முயல் பாடம் வடிக்கிறது’ என்னும் தொடரானது இலக்கண வழுவற்ற சொல். ஆனால் தமிழ் படிக்கின்றவர்கள் இதனை வாக்கியம் எனச் சொல்லமாட்டார்கள். ஒரு வேளை இது கதையில், புனை கதையில் சாத்தியமாக இருக்கலாம். எனவே, பொருண்மை நிலையிலும், வாக்கியங்களை உருவாக்க மாணவர்கள் கற்றுக் கொள்ள வேண்டும்.

வாக்கியம் - விளக்கப் படம்




(அந்தப் பையன் இந்தப் பையனை அடித்தான்)

**பாடம் - 4**

# நடையியல் - ஓர் அறிமுகம்

**மரபு நிலை:**

மொழியானது பேச்சு மொழி, எழுத்து மொழி என இரு வகைப்படும். எழுத்து மொழிக்கென ஒரு மரபு உண்டு. இந்த மரபினை நினைவூட்டுவது இலக்கணத்தின் பணியாகும். பேச்சு வழக்கில் நாம் மரபைப் புறக்கணித்துக்கூடப் பேசலாம். ஆனால், இலக்கியத்தில் மரபை மீறி எழுதுவது என்பது கூடாது. இது தொல்காப்பியர் வற்புறுத்தும் அடிப்படைக் கோட்பாடாகும். ‘‘மரபு நிலை திரியின் பிறிது பிறிதாகும்’’

எனவும், “மரபு நிலை திரிதல் செய்யுட்கில்லை” எனவும் மரபியலில் அவர் கூறியதைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். ‘செய்யுட்கு இல்லை’ என அவர் கூறுவது இலக்கியத்தினைக் குறித்த ஒன்றாகும். அம் மரபினை இயல்பு வழக்கு எனவும் தகுதி வழக்கு எனவும் இரு வகையாகப் பிரிப்பர்.

**இயல்பு வழக்கு:**

இயல்பு வழக்கினை, இலக்கணமுடையது, இலக்கணப் போலி, மருவூ எனவும் பிரிப்பர். இலக்கணமுடையது என்பது சொற்கள் இலக்கண முறையில் பன்படுத்துதல் என்பதாகும். பெயர், வினை என்னும் அடிப்படையில் சொற்களை அவற்றின் பொருள் அறிந்து பயன்படுத்துதல் என்பதாகும். இலக்கணப் போலி என்பதனை (Grammatical ambiquity) எனலாம். தீ சுடும் என்பதனை மூன்று காலத்துக்குச் சேர்த்துச் சொல்வதும், அன்பின் மிகுதி காரணமாக உயர் திணையை அ.்.றிணையாகவும், அ.்.றிணையை உயர்திணையாகக் கூறுவதையும் கொள்ளலாம். (சாமி வருகிறது அல்லது சாமி வருகிறார்) போலியானது ஒரு சொல்லுக்குப் பதிலாகப் பிறிதொரு சொல் வருவதாகும். ஒரு சொல்லானது மருவி வருவது மருஉ என்பர்.

**இலக்கிய உலகில்:**

இவ்வாறு இயல்பு வழக்குபற்றித் தெரிந்து கொள்ளும்பொழுது இலக்கிய உலகின் நிலைத்துவிட்ட சில மரபுச் சொற்களைப்பற்றியும் தெரிந்துகொள்ள வேண்டும். குரங்கு என்பதனை, கடுவன், மந்தி என்கிறோம். இதே விலங்குகளின் இளமைப் பருவத்தின் பெயர்களையும் அவற்றிற்குரிய மரபுச் சொற்களைக் கொண்டு குறிப்பிட்டு வருதலையும் காணலாம்.

| **உயிரினப் பெயர்** | | **இளமைப் பெயர்** |
|---|---|---|
| பறவை | : | பார்ப்பு, பிள்ளை. |
| அணில் | : | பிள்ளை |
| பன்றி, புலி, முயல், நரி | : | குருளை, குட்டி, பறழ., பிள்ளை. |
| ஆடு, குதிரை, மான் | : | மறி, குட்டி. |
| யானை | : | கன்று, குழவி. |
| சிங்கம் | : | குருளை |

இவை போன்று மரம் செடிகளின் பெயர்களையும் நாம் பார்க்கலாம்.

**சொற்பொருள் மாற்றம்:**

ஒரு சொல்லுக்குப் பல பொருட்களும் பல சொல்லுக்கு ஒரு பொருளும் இருப்பன இலக்கிய உலகில் மட்டுமின்றி பேச்சு வழக்கிலும் காணலாம்.

ஒன்றினைச் சொல்லுதல் என்னும் சொல்லைக் குறிப்பதற்குத் தமிழில் 30 க்கு மேற்பட்ட சொற்கள் இருப்பதையும் எடுத்துக்காட்டுவர் ஞா. தேவநேயப் பாவாணர். இலக்கிய உலகில் வழக்கத்தில் உள்ள சொற்கள் காலப் போக்கில் வழக்கற்றதாகிவிடுவதையும் காணலாம். அல்லது அதற்கான பொருளை இழந்துவிடுவதையும் காணலாம். இதனைச் சொற்பொருள் மாற்றம் என்பர். இது நான்கு நிலைகளில் நடைபெறும்.

| | | |
|---|---|---|
| 1. உயர்வு (Elevation) | : | அரசன் இருக்கும் இடமாகிய கோயில் இப்பொழுது இறைவன் இருக்கும் இடத்தைக் குறிக்கிறது. |
| 2. இழிவு (Degradation) | : | தம்பிரான், பண்டாரம் முதலிய சொற்களின் இன்றைய நிலை. |
| 3. பொது (Common) | : | பள்ளி என்பது படுக்கையறையையும் கல்வி பயிலும் இடத்தையும் குறிப்பதைக் காணலாம். |
| 4. வரையறை | : | பிள்ளை என்னும் சொல் இப்பொழுது ஒரு வகுப்பாரைக் குறிக்கும் சொல்லாக இருப்பதைக் காணலாம். |

**தகுதி வழக்கு:**

தகுதி வழக்கு என்பது இலக்கியத்தில் பேச்சு வழக்கில் நிலைத்து விட்ட வழக்காகும்.

இடக்கரடக்கல்: சொல்ல வேண்டாதவற்றை மறுத்துச் சொல்லுதலாகும்.

“கக்கூஸ் சென்று வந்தேன்” என்பதனைக் “கால் கழுவி வந்தேன்” எனச் சொல்லுதலாகும்.

இதையே ‘மங்கலச் சொல் வழக்கு’ என்பர். குழூஉக்குறி என்பது வியாபாரிகளுக்கிடையே பல வகைகளில் இருப்பதைக் காணலாம்.

‘குட்டி’ என்பதைப் ‘பெண்’ என்று குறிக்கும் பரிபாஷையைக் கல்லூரி மாணவர்களிடையே காணலாம்.

**மொழி நடை:**

இயல்பு வழக்கும் தகுதி வழக்கும் இணைந்த மரபு வழிப்பட்ட மொழியே இலக்கியத்தின் சாதனமாகிறது. இலக்கியம் என்பது தனி மனிதனின் அனுபவ வெளிப்பாடு. தனி மனிதனின் அனுபவ வெளிப்பாடானது கலை வடிவம் பெறுவதற்கு அவன் பயன்படுத்தும் சாதனமே மொழி. இந்த மொழி பொது மொழியிலிருந்து

மாறுபட்டதன்று. பொது மொழியை உள்வாங்கிய ஒன்று. ஓர் இலக்கியப் படைப்பில் பதிவாகியிருக்கும் மொழியே இலக்கிய ஆசிரியரின் மொழியாகும். இதனை மொழிப் பதிப்பு என்பர்.

ஒரு பொருளை உணர்த்த ஓர் ஆசிரியன் மொழியைக் கையாளும் திறனே அவனது நடையாகும். ஒருவனின் மொழித் திறனுக்கும் மொழி நடைகும் உள்ள தொடர்பு பிரிக்க முடியாதது. மொழியே நடை; நடையே ஆசிரியன் என்பர். ஒரு படைப்பைப் படித்தவுடன் இது இளங்கோவின் நடை என்றும், இது கம்பன் நடை என்றும், இது பாரதியின் நடை என்றும், இது புதுமைப்பித்தன் நடை என்றும், இது தி. ஜானகிராமனின் நடை என்றும், இது லா. சா. ராமாமிர்தத்தின் நடை என்றும் நம்மால் எப்படிச் சொல்ல முடிகிறது?

**நடையியல்:**

இது ஒவ்வொரு ஆசிரியனுக்கும் ஒரு மொழி நடை உண்டு என்பது புரியவைப்பதாகும். இம்மொழி நடை என்பது இடையறாக பயிற்சியின் பொருட்டு ஆழ்ந்த அனுபவத்தின் அடிப்படையில், சொல்ல வேண்டும் என்னும் உந்துதலில் அமைவதாகும். ஓர் இலக்கிய ஆசிரியனின் மொழிநடையை ஆராய மேற்கொண்ட நெறிமுறையே நடையியல் எனப்படும். ‘Stylisti’ என்னும் சொல்லானது ‘Die Stylistik’ என்னும் ஜெர்மானியச் சொல்லிலிருந்து வந்தது என்பர். நடையியல் பற்றிய ஆராய்ச்சியானது இன்று வளர் நிலையிலேயே இருக்கிறது. ஒருவனின் நடைபற்றியது ஓர் இலக்கியப் படைப்பைத் திறனாயும் துறையினை வளப்படுத்த உதவும்.

**நடையியல் ஆய்வு:**

நடையியல் ஆராய்ச்சியினை மூன்று நிலைகளில் மேற்கொள்ளுவதைக் காணலாம்.

1. படைப்பின் சார்பு
2. உருவமைப்புச் சார்பு
3. படைப்புக்கு வெளிநிலவும் சூழல் சார்பு

முதல் பகுதி ஓர் இலக்கியப் படைப்பை ஒட்டியது.
இரண்டாவது பகுதி படைப்பின் அமைப்பு, மொழி பற்றியது.
மூன்றாவது பகுதி படைப்பு தோன்றிய காலத்துச் சூழல் பற்றியது.

இருந்தாலும் மொழிப் பதிவு எனப்படும் இலக்கியப் படைப்பின் மொழியைப் பொருட்புலப்பாடு, வடிவம் எனப் பிரிக்கலாம். இதனை வெளியீட்டு நிலையில் படைத்தல், சுட்டுதல் எனவும் சொல்லலாம். மொழி நடைபற்றிச் சொல்லுவதற்கு முன்னால் நடையியல்பற்றி ஓரிரு வார்த்தைகள் சொல்ல வேண்டும்.

**தமிழில்:**

தமிழில் நடையியல் பற்றி நூல்கள் ஒன்றும் வெளிவரவில்லை என்று சொல்லலாம். இதுவரை இரண்டு நூல்கள் மட்டுமே வந்துள்ளன. சோமலே என்பவர் எழுதிய 'வளரும் தமிழ்' ஓரளவு உரைநடையைப்பற்றிச் சொல்லுவதாகும். டாக்டர் மா. இராமலிங்கம் எழுதிய புதிய உரைநடை என்னும் நூல் உரைநடையைப்பற்றியது. இவை தவிர டாக்டர் ஜெ. நீதிவாணன் என்பவரும் திருமலை என்பவரும் நடையியல்பற்றி மொழிநூல் அடிப்படையில் நூல்கள் எழுதியிருக்கிறார்கள். நடையியல் என்பது கவிதை, புனை கதை, உரைநடை பற்றியது என்றாலும் பட்டப் படிப்புப் பயிலும் மாணவர்களுக்கு உரைநடை பற்றிய ஆராய்ச்சி அறிவு இருந்தாலும் போதுமானது எனலாம்.

**செயல் முறைத் தமிழ்:**

செயல் முறைத் தமிழின் அடிப்படை நோக்கம் மாணவரின் மொழி நடையினை வளம் பெறச் செய்ய வேண்டும் என்பதாகும். நடையியல் பற்றிச் சொல்லுவதற்கு முன்னால் தமிழில் இதுவரை உருவாகியுள்ள உரைநடைப் போக்குகளைப் பற்றியும் மாணவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். உரையாசிரியர்கள் தோற்றுவித்த உரைநடை ஒன்று. இது இன்று பெரும்பாலும் தமிழ்ப் பண்டிதத்தின் பாற்பட்டதாகவே காணப்படுகிறது. மறைமலையடிகளால் தோற்றுவித்தத் தனித் தமிழ் நடை மற்றொன்று. இது ஓரளவு மொழிப்பற்று கொண்ட நடை எனலாம்.

சொல் என்பதனை இயற்சொல், திரிசொல், திசைச் சொல், வடசொல் எனத் தொல்காப்பியர் நான்காகப் பிரிப்பர். ஒரு மொழியில் வேற்றுமொழிச் சொற்கள் கலப்பது இயற்கை. அப்படிக் கலக்கும்போது அச்சொற்களை மொழி மரபுக்கேற்ப தமதாக்கிக் கொள்ள வேண்டும். இது தொல்காப்பியருக்கும் உடன்பாடான ஒன்றாகும். ஆனால், தனித் தமிழ் வாதிகளோ வடசொற்களை இப்போதே நாம தடை செய்யாவிடின், தமிழ் தன்னிலை கெட்டு வேறு மொழி போல ஆகிவிடக்கூடும் என்று கூறுவர்.

தமிழில் பிறமொழிச் சொற்களைச் சேர்ப்பதால் தமிழ் தன் இனிமையை இழந்து விடுவதோடு பல தமிழ்ச் சொற்களும் வழக்கில் இல்லாமல் இறந்து போய்விடும். இதற்கு மாறாக, உலகில் உயிர்ப் பொருள் எதுவும் பிறவற்றின் கலப்பின்றித் தனித்து வாழ இயலாது; பிறவற்றினின்றும் தான் பெற்று வளர்தலும், தன்னுடையவற்றைப் பிறவற்றிற்குத் தந்து வாழ வைத்தலும் உலக இயல்பாகும். உயிரில்லாததுதான் தனித்து நிற்கும். இத்தன்மை எல்லா மொழிகளுக்கும் ஒக்கும். தமிழ் மொழி உயிருடன் கூடியது. வளரும் இயல்புடையது. ஆதலின் தன்

சொற்களை உடன் வாழும் பிறவற்றிற்குத் தரும் தானும் பிற மொழிச் சொற்களைக் **கைக் கொள்ளும் என்ற கொள்கைளை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். மறுமலர்ச்சி நடை** என்பது பிறிதொன்றாகும். இதுதான் எல்லோரும் விரும்பக் கூடிய நடையாகும். இது கருத்தை உணர்த்துவதை முக்கியமாகக் கொண்டது எனலாம்.

**உரை நடை:**

தமிழில் வசன நடை எப்படி இருக்க வேண்டும்? இக் கேள்விக்குப் பேசுகிற சாயலிலேயே மக்கள் பேசும் எளிய நேரான மொழியிலேயே வசனம் இருக்க வேண்டும் என்பதை திரு டி.கே. சிதம்பரநாத முதலியார் போன்றவர்களும் கூறுகின்றனர். ஆனால் வசனம் என்பது நிதானித்து எழுதப்படுவது; அவகாசத்துடன் எழுதப்படுவது ஆகும். பேச்சுக்களில் பேசும்போது இருக்கும் வசதிகளும், பிறவும் வசனம் எழுதும்போது இருப்பதில்லை எனலாம். ஆதலால் பேசுகிற சாயல் என்பதன் பொருள் முழுமையும் நம் மனத்தில் கொள்ளுவோமேயானால், பேசுகிற சாயலில் வசனம் இருக்க முடியாது என்பதைக் காணலாம். பேசுகிற சாயலில் இருக்கக் கூடாது என்ற முடிவுக்குத்தான் வருவோம் என்பர் பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை.

**நடையின் பொருட் புலப்பாடு:**

நடையின் பொருட் புலப்பாட்டினை இரு வகைககளாகப் பிரிக்கலாம். அவை வெளிப்படை, குறிப்பு என்பனவாகும். வெளிப்படை என்பது மொழி நடையின் புறத் தோற்றம எனலாம். இது சொல்லுக்கும் பொருளுக்கும் நேரடித் தொடர்பு கொண்டது – எளிமையானது. குறிப்பு என்பது தமிழில் உள்ளுறை உவமம் போன்றது. இலக்கண அமைப்புக்கு மீறிய நிலையில், பொருளுக்கு ஓர் உள்ளார்ந்த அர்த்தம் கொடுப்பது எனலாம். இது ஆசிரியரின் ஆத்மார்த்தப் பண்பு கொண்டது எனலாம். ஆசிரியரின் மொழி நடையில் வெளிப்படையாகத் தோன்றுவதைத் தெரிநிலை எனவும், அணி நிலை எனவும் வகுக்கலாம். தெரிநிலை ஒன்றும் ஒன்றும் இரண்டு எனச் சொல்லுவதாகும். அணி நிலை என்பது ஈருயிரும் ஓருயிராயின் எனச் சொல்லுவதாகும்.

**நடை அழகு:**

வசன நடைக் கலையின் இயல்பை இரண்டு நிலைகளினின்று நோக்கி நாம் கற்கலாம். ஒருநிலை மொழியைப் புறத்தே நின்று வழங்குவதைப் பற்றியது. இதன் நோக்கம் பிழையற்ற திருந்திய நடை என்று கொள்ளலாம். மற்றொரு நிலை மொழியை அகத்தே நின்று வழங்குவதாகும். இதன் நோக்கம் பிறரை வசீகரித்தல் போன்ற அழகாகும். இதனை அழகிய நடை என்றும் கூறுவர். சொல்லமைப்பை மாத்திரம் ஆய்ந்தால், ஒரு திருந்திய நடையே நமக்குக் கிடைக்கும். இது சாதாரண மக்களுடைய பேச்சில் இருக்கும் குறைபாடுகளை எங்கும் முறைப்பட நீக்குதலால் விளைவதாகும். ஆனால், இவ்வாறு திருத்தமுற்ற நடையிலும் மேம்பட்டு, அழகுடைத்தாக வசனம் அமைய வேண்டுமெனில், அப்பொழுது முன்னே குறித்த

குற்றங்களை நீக்குவதுடன் ஆசிரியனுக்குரிய ஆத்ம குணங்கள் சிலவும் பொருந்தி இருத்தல் வேண்டும். இக் குணங்கள் நடை அழகிற்கு உதவுவனவாகும் எனபர் ஹெர்பர்ட்.

**நடை அழகிற்கு வேண்டுவன:**

நடை அழகிற்கு வேண்டுவன:

1. பிழையற்ற நடை
2. அணி நடை.

அணி நடை என்றவுடன் நடைக்குத் தேவையான அலங்காரம் செய்தல் என்று நினைத்துக் கொண்டு உவமைகளையும் சிலேடைகளையும், வேண்டாத அலங்காரச் சொற்களையும் வழக்கிழந்த சொற்களையும், பயன்படுத்துவது கூடாது. தமிழில் மரபுத் தொடர்களும், வளமைத் தொடர்களும், உவமைத் தொடர்களும் ஏராளம். அவற்றை இடமறிந்து பயன்படுத்தினால்தான் நடை அழகு பெறும். இது போலவே பொருள் தெரிந்து பழமொழிகளையும் பயன்படுத்த வேண்டும். இதுவும் அளவு கடந்துவிட்டால் பொருட் சிறப்பை இழந்து விடும் எனலாம்.

**உரைநடைக்கு உரிய அலங்காரங்களாகச் சிலவற்றைக் சுட்டிக் காட்டுவர்:**

| | | |
|---|---|---|
| 1. | உவமை | (Similie) |
| 2. | உருவகம் | (Metaphor) |
| 3. | எதுகையும் மோனையும் | |
| 4. | உயர்வு நவிற்சி | (Hyperbole) |
| 5. | ஆகுபெயர் | (Metonymy) |
| 6. | வக்கணை | (Pun) |
| 7. | முரண் | (Irony) |
| 8. | மெய்மை முரண் | (Paradox) |
| 9. | சொல்முரண் | (Oxymoran) |
| 10. | சிலேடை, தற்குறிப்பேற்றம் | (Pathelic Falley) |
| 11. | ஒலிக்குறிப்பு | (Onametopocia) |
| 12. | மேற்கோள் | (Quotation) |

இவற்றை நடையழகுக்குப் பயன்படுத்தலாம். ஆனால் இவை நடையில் இயற்கையாகப் பொருந்தி இருக்க வேண்டும். செயற்கையாக இருக்கக் கூடாது. ஏனெனில் பழகிய இயற்கை நடை வேறு. செயற்கை நடை வேறு. இரண்டிற்கும் உரிய வேறுபாட்டை ஹாஸ்லிட் நன்றாக விளக்கி இருக்கிறார்.

**இயற்கை நடை:**

நடிப்பின்றி இயற்கையாக எழுதுவது என்றால் மனதில் தோன்றியபடி எழுதுவது என்று நினைக்கிறார்கள். ஆனால் சொல்லின் திட்பமும், உரையின் தூய்மையும் இயற்கை நடையில் வேண்டும் அளவு வேறொன்றிற்கும் வேண்டியன அல்ல. பொருளற்ற ஆடம்பரச் சொற்களை இயற்கை நடை அறவே ஒழித்துவிடும். இதற்கும் மேலாக கீழ்மையான இயல்புள்ள தொடர்களையும் பொருத்தமற்று நெகிழ்ந்து செல்லும் வாசகங்களையும் குழுஉக்குறிகள் என்று சொல்லத்தகும் சொற்களையும் முற்றும் இந்நடை நீக்கிவிடும். கைக்கு எட்டிய முதல் வார்த்தையை இது எடுத்துக் கொள்ளுவதில்லை. பொது ஜன வழக்கில் உள்ளவற்றில் மனம் போன போக்குப்படி வாக்கியத்தில் தொடர்ந்து செல்லும்படி இது விடுவதில்லை. மொழியின் உண்மையான மரபினைத் தெரிந்து இம்மரபோடு ஒத்து, சொற்களை வாக்கியத்தில் தொடர்ச்சியுறச் செய்யும். உண்மையான இயற்கை நடை என்பது சாதாரணமான சம்பாஷணையில் சொல் வன்மையுடைய ஒருவன் வார்த்தைகளைத் தெரிந்து எடுத்து லாவகத்துடனும் ஆற்றலுடனும் தெளிவுடனும் பேசுதல்போல எழுதுவதாகும். இவன் பாண்டித்ய படாடோபங்களையும் பிரசங்கப் பெருவீச்சுகளையும் அறவே நீக்கி விடுவான்.

(பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையின் மொழி பெயர்ப்பு).



**மாணவர் மனங்கொள்ள வேண்டியன:**

1. இயல்பு வழக்கு, தகுதி வழக்குபற்றிக் குறிப்பு வரைக.
2. மொழி நடை என்பது யாது, மொழி நடை சிறப்பாக அமைய வேண்டுமாயின் கவனத்தில் இருத்த வேண்டிய கருத்துகள் யாவை?
3. மொழி நடை அழகுக்கு மெருகூட்டும் சாதனங்கள் யாவை? உதாரணங்களுடன் விளக்குக.
4. நடையின் பொருட் புலப்பாட்டின் வகைகள் யாவை? அவை எந்த அளவிற்கு மொழி நடைகது பயன்படுகின்றன?

**துணை புரிந்த நூல்கள்:**


1. G. W. Turner: Stylistics, Penguin Books Ltd., Harmondworth, England – 1973
2. எஸ். வையாபுரிப் பிள்ளை: தமிழின் மறுமலர்ச்சி என்னும் நூலிலுள்ள 'தமிழில் வசன நடை' என்னும் கட்டுரை. நவபாரதி பிரசுராலயம் லிமிடெட் திருநெல்வேலி ஜங்ஷன் - 1947.
3. சோமலே : 'வளரும் தமிழ்', பாரி நிலையம், 59, பிராட்வே, சென்னை-1.

## பாடம் - 5

# நடையாக்கம்

**சந்திப் பிழையின்றி எழுதுதல்:**

நல்ல தமிழ் எழுதுவது என்றால் என்ன பொருள்? அழகான சொற்களை அணி அணியாக அடுக்கிப் பிழையாக எழுதுவது என்று பொருள்படுமா? இல்லை. பிழையற்ற தமிழில் இலக்கண மரபு குன்றாது எழுதுவதுதான் நல்ல தமிழில் எழுதுவது ஆகும். வலி மிகுதல் என்பது நல்ல தமிழ் எழுத விரும்புவோர் அறிந்து கொள்ள வேண்டுவனவற்றுள் ஒன்று. வல்லெழுத்து மிகுந்து வருதலையே இலக்கணத்தில் சுருக்கமாக வலி மிகுதல் என்பர்.

**வலி மிகுதல்:**

இரண்டு சொற்கள் இணையும்பொழுது இரண்டு சொற்களுக்கு இடையே ச, ச, த, ப என்னும் நான்கு வல்லெழுத்துகள் மட்டுமே மிகும். இரண்டு சொற்களில் முதற் சொல்லை நிலை மொழி எனவும் இரண்டாவது சொல்லை வருமொழி எனவும் சொல்லுவர். இரண்டு சொற்கள் சேரும்பொழுது வருமொழி முதலில் க, ச, த, ப இருந்தால் நிலை மொழிச் சொல்லின் இறுதியில் முன் சொன்ன நான்கு உயிர் மெய் எழுத்துகளின் மெய்யெழுத்தானது மிகுந்து வரும். இதனையே பொதுவாக வலி மிகுதல் என்று சொல்லலாம்.

அந்த + பையன் = அந்தப் பையன்
நிலைமொழி வருமொழி

‘வல்லெழுத்து மிகுவது ஏன் வேண்டும்? என்று வினவலாம். பொருளைத் தெளிவாகவும் சரியாகவும் உணர்வதற்கும் தமிழ் மொழிக்கே உரிய இன்னோசையை வெளிப்படுத்துவதற்கும் இதைத் தெரிந்து கொள்ள வேண்டும். வலி மிகுதல் தமிழ் மொழியிலும் மலையாள மொழியிலும் காணப்படுவதன்றி வேறு மொழிகளில் இல்லை என்று மொழி நூலறிஞர்கள் கூறுவர் என வல்லெழுத்து மிகுவதின் இன்றியமையாமையைச் சுட்டிக் காட்டுவர். அ. கி. பரந்தாமனார்.

இரண்டு சொற்கள் இணைந்தால் தொடராகிறது. இவ்வாறு உருவான தொடரானது தொகா நிலைத் தொடர் என்றும் தொகை நிலைத் தொடர் என்றும் இருவகைப்படும்.

இரு சொற்கள் இணைந்திருந்து இவ்விரு சொற்களுக்கு நடுவில் எச் சொல்லும் பொருள் கொள்ளும்பொழுது மறையாது இருந்தால் அச் சொற்றொடரைத் தொகாநிலைத் தொடர் என்பர். கோழி கூவிற்று என்பது தொகாநிலைத் தொடர். மறைந்து வருவது தொகை நிலைத் தொடராகும்.

எடுத்துக்காட்டு:

ஊறுகாய் - வினைத் தொகை.

இது ஊறும் காய், ஊறுகின்ற காய், ஊறிய காய் என மூன்று காலத்துக்கும் பொதுவாய் காலத்தைக் குறிக்கும் சொல்லானது மறைந்திருப்பதால் இது தெகை நிலைத் தொடராகும்.

**(1) தொகா நிலைத் தொடர்:**

1. கண்ணன் பாடினான் --- எழுவாய்த் தொடர் (கண்ணன் - எழுவாய்)
2. கண்ணா வா --- விளித் தொடர் (கண்ணா – விளி)
3. பாடினான் கண்ணன் --- வினை முற்றுத் தொடர் (பாடினான் - முற்று)
4. படித்த பையன் --- பெயரெச்சத் தொடர் (படித்த – பெயரெச்சம்)
5. மற்றொன்று --- இடைச்சொல் தொடர் (மற்று-இடைச் சொல்)
6. சால உண்டான் --- உரிச்சொல் தொடர் (சால – உரிச் சொல்)
7. போ போ --- அடுக்குத் தொடர் (போ – என்பது அடுக்கி வருவதால்)

**2. தொகை நிலைத் தொடர்:**

1. செடிகொடி --- உம்மைத் தொகை (செடியும் கொடியும்)
2. மலைத் தோள் --- உவமைத் தொகை (மலை போனற தோள்)
3. கொல் யானை --- வினைத் தொகை (கொல் என்பது மூன்று காலத்துக்கும்)
4. கருங்குதிரை --- பண்புத் தொகை (கருமை – பண்பு)
   பலா மரம் --- இரு பெயரொட்டுப் பண்புத் தொகை (பலாவும் மரமும் எனச் சிறப்புப் பெயரும் பொதுப் பெயரும் இணைந்து வருவதாகும்.)
5. யானைப் பாகன் --- வேற்றுமைத் தொகை (யானையை ஓட்டும் பாகன்)
6. பைந்தொடி வந்தாள் --- அன்மொழி தொகை.

மேலேயுள்ள அறுவகையான தொகை நிலைத் தொடர்களுள் வேற்றுமைத் தொடர் நீங்கலாகவுள்ள ஐந்து தொடர்களும் வேற்றுமையல்லாத தொடர்கள் எனப் பொருள்படும் அல்வழித் தொடர் எனவும் அழைக்கப் பெறும. எனவே, தொகை

நிலைத் தொடர் என்பது வேற்றுமைத் தொடர், அல்வழித் தொடர் என இரு வகைப்படும். வேற்றுமைத் தொடரிலும் வேற்றுமை உருபு வரும் தொடர், வேற்றுமைத் தொடர் என்றும், வேற்றுமை உருபு மறைந்து வருவதை வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை எனவும் அழைக்கப்பெறும். எனவே, வேற்றுமைத் தொகையானது பன்னிரண்டு வகைப்படும். தொடரும் தொகையும் பற்றித் தெரிந்து கொள்ளுவதால் சந்திப் பிழையின்றி எழுதலாம்.

**ஏன் மிக வேண்டும்?**

சொற்களின் நடுவே வல்லெழுத்து இட்டு ஏன் எழுத வேண்டும் என்பதற்குச் சில அடிப்படைக் காரணங்கள் உண்டு. சொற்கள் இணைந்து வரும்பொழுது இரு சொற்களுக்கு இடையே ஏற்படும் மாற்றங்களை உருபொலியன் மாற்றங்கள் என்பர். இம் மாற்றங்கள் ஒரு மொழிக்குத் தேவைதானா? அல்லது இம் மாற்றங்கள் ஏன் ஒரு மொழியில் நடைபெற வேண்டும் என்னும் கேள்விகள் எழுவது இயற்கையே. இவற்றிற்கு இரண்டு காரணங்களைச் சொல்லலாம். 1. பொருள் வேறுபாட்டினைப் புலப்படத்துவதற்கும் 2. ஒலிப்பு முறையினை எளிமைப்படுத்துவதற்கும் இம் மாற்றங்கள் தேவைப்படுகின்றன.

எடுத்துக்காட்டு:

ஓடா குதிரைகள்
ஓடாக் குதிரைகள்

என்னும் இவ்விரு தொடர்கள் பொருள் அடிப்படையில் வேறுபட்டிருப்பதைக் காணலாம். ‘ஓடா குதிரை’, இனி ஓடா எனப் பொருள் தருவதையும், ‘ஓடாக் குதிரைகள்’ என்பது ஓடாத குதிரைகள் எனப் பொருள் தருவதையும் காணலாம். ஒலிப்பு நிலையிலும் ஓடா குதிரைகள் என இரு சொற்களையும் பிரித்து உச்சரிப்பதற்கும் ஓடாக்குதிரைகள் எனச் சேர்த்து உச்சரிப்பதற்கும் உள்ள நிலையினைப் பார்க்க வேண்டும். முன்னதை ஒலிக்கும் பொழுது ஏற்படும் நாவசைப்பானது பின்னதை ஒலிக்கும் பொழுது ஏற்படுவதில்லை. நாவானது மிகவும் எளிதாகச் சொற்களை உச்சரிப்பது காணலாம்.

மணி + அழகு = என இரண்டு சொற்கள் இணையும் பொழுது முதல் சொல்லிலுள்ள இகரத்தையும் இரண்டாவது சொல்லிலுள்ள அகரத்தையும் நாவானது ஒரே சமயத்தில் ஒலிக்க முடிவதில்லை. ஏனெனில் இகரமும் அகரமும் பிறக்குமிடங்கள் வேறுவேறு. இகரம் நுனி நாவை ஒட்டிப் பிறக்கும் உயிரெழுத்து; அகரம் பின் அண்ணத்தை ஒட்டிப் பிறக்கும் உயிரெழுத்து. எனவே, நாவிற்கு எளிதாக இருக்கும் பொருட்டு இவ்விடத்தில் யகர உடம்படுமெய் இட்டு எழுதுவர். மணியழகு என உச்சரிப்பது நாவிற்கு எளிதாக இருப்பதைக் காணலாம். எனவே, தேவையான இடங்களில் வல்லெழுத்து மிகுத்து எழுதுவது தேவையாகும்.

**வல்லெழுத்து மிகும் இடங்கள்:**

1. அ, இ, உ, என்னும் சுட்டு எழுத்துகளின் பின்னும், எ என்னும் வினாவெழுத்தின் பின்னும் வரக்கூடிய சொற்காளனது க, ச, த, ப, என்னும் மெய்யெழுத்தினை முதலில் கொண்டிருந்தால் அந்த வல்லெழுத்து மிகும்.

அ + பையன் = அப் பையன்
இ + பெண் = இப் பெண்
எ + சிறவன் = எச் சிறுவன்?

2. அந்த, இந்த எந்த என்னும் சொற்களின் பின் வல்லெழுத்து மிகும்.

அந்த + பையன் = அந்தப் பையன்
எந்த + பெண் = எந்தப் பெண்?

3. அப்படி, இப்படி, எப்படி என்னும் சொற்களின் பின் மிகும்.

அப்படி + பார்த்தான் = அப்படிப் பார்த்தான்
இப்படி + போனான் = இப்படிப் போனான்
எப்படி + சொன்னான் = எப்படிச் சொன்னான்

4. அங்கு இங்கு, எங்கு என்னும் சொற்களில் மிகும்.

அங்கு + சென்றாள் = அங்குச் சென்றாள்
இங்கு + கிடைக்கும் = இங்குக் கிடைக்கும்
எங்கு + போவாய் = எங்குப் போவாய்

5. இனி, தனி, என்னும் சொற்களின் பின் மிகும்.

இனி + போகலாம் = இனிப் போகலாம்
தனி + கட்டிடம் = தனிக் கட்டிடம்

6. இரண்டாம் வேற்றுமை யுருபு ஐ விரிந்து வரும் சொற்களின் பின் வரும் க, ச, த, ப என்னும் வல்லெழுத்துகள் மிகும்.

(அவன் + ஐ) அவனை + சந்தித்தேன் = அவனைச் சந்தித்தேன்
கண்ணனை + பார்த்தேன் = கண்ணனைப் பார்த்தேன்

7. நான்காம் வேற்றுமை உறுபு மிக்கு வரும்போது வல்லெழுத்துகள் மிகும்.

(அவன் + கு) = அவனுக்கு + கொடு = அவனுக்குக் கொடு
எனக்கு + தா = எனக்குத் தா

8. ஆறாம் வேற்றுமைத் தொகையில் அ.்.றிணைப் பெயர்களின் பின் வல்லெழுத்துகள் மிகும்.

புலி (அது) + தலை = புலித்தலை

குருவி + கூடு = குருவிக் கூடு

9. ஏழாம் வேற்றுமைத் தொகையில் மிகுவதைக் காணலாம்.

மனை (கண்) + பிறந்தார் = மனைக்கண் பிறந்தார்

குடி + பிறந்தார் = குடிப்பிறந்தார்

10. இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகையில் மிகும்.

தயிர் (தயிரையுடைய) + குடம் = தயிர்க்குடம்

காய்கறி + கடை = காய்கறிக்கடை

11. மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகையில் மிகும்.

பட்டு + (பட்டினால் ஆகிய) சேலை = பட்டுச் சேலை

மோர் + குழம்பு = மோர்க் குழம்பு

12. நான்காம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகையில் மிகும்.

குழந்தை (குழந்தைக்கு) + பால் = குழந்தைப் பால்

கோழி + தீனி = கோழித் தீனி

13. ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகையில் மிகும்.

வாய் (வாயின்) + பாட்டு = வாய்ப் பாட்டு

விழி + புனல் = விழிப் புனல்

14. ஓரெழுத்து ஒரு மொழிக்குப் பின் வரும் வல்லெழுத்துகள் மிகும்.

பூ + பறித்தான் = பூப் பறித்தான்

தீ + பிடித்தது = தீப் பிடித்தது

கை + குழந்தை = கைக் குழந்தை

15. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின் பின் வரும் வல்லெழுத்துகள் மிகும்.

அறியா (த) + பிள்ளை = அறியாப் பிள்ளை

காணா (த) + காட்சி = காணாக் காட்சி

ஓடா (த) + குதிரை = ஓடாக் குதிரை

16. அகர, இகர ஈற்று வினையெச்சத்தின் பின் வலி மிகும்.

| | | | | |
|---|---|---|---|---|
| வர | + | சொன்னான் | = | வரச் சொன்னான் |
| மெல்ல | + | பேசினார் | = | மெல்லப் பேசினார் |
| ஓடி | + | போனான் | = | ஓடிப் போனான் |

17. ஆய், போய், ஆக, என என்னும் வினையெச்சங்களின் பின்னும் வலி மிகும்.

| | | | | |
|---|---|---|---|---|
| பார்ப்பதாய் | + | சொன்னான் | = | பார்ப்பதாய்ச் சொன்னான் |
| போய் | + | பார்த்தான் | = | போய்ப் பார்த்தான் |
| இருப்பதாக | + | சொன்னான் | = | இருப்பதாகச் சொன்னான் |
| என | + | கூறினான் | = | எனக் கூறினான் |

18. வன்தொடர்க் குற்றியலுகரத்தின் பின் வரும் வல்லெழுத்துகள் மிகும்.

| | | | | |
|---|---|---|---|---|
| எட்டு | + | தொகை | = | எட்டுத் தொகை |
| பத்து | + | பாட்டு | = | பத்துப் பாட்டு |
| கற்று | + | கொடுத்தான் | = | கற்றுக் கொடுத்தான் |
| விட்டு | + | சென்றான் | = | விட்டுச் சென்றான் |
| வைத்து | + | போனான் | = | வைத்துப்போனான் |
| பாக்கு | + | தின்றான் | = | பாக்குத்தின்றான் |

19. திரு, நடு, முழு, விழு, பொது, அணு போன்றுள்ள முற்றியலுகரச் சொற்களை அடுத்து வரும் வல்லெழுத்துகள் மிகும்.

| | | | | |
|---|---|---|---|---|
| திரு | + | தொண்டு | = | திருத் தொண்டு |
| நடு | + | தெரு | = | நடுத் தெரு |
| முழு | + | பேச்சு | = | முழுப் பேச்சு |
| விழு | + | பொருள் | = | விழுப் பொருள் |
| பொது | + | பணி | = | பொதுப் பணி |
| அணு | + | குண்டு | = | அணுக் குண்டு |

20. இருபெயரொட்டுப் பண்புத் தொகையில் வரும் வல்லெழுத்துகள் மிகும்.

| | | | | |
|---|---|---|---|---|
| தை | + | திங்கள் | = | தைத் திங்கள் |
| சாரை | + | பாம்பு | = | சாரைப் பாம்பு |

21. உவமைத் தொகையை அடுத்து வலி மிகும்.

| | | | | |
|---|---|---|---|---|
| தாமரை | + | கண் | = | தாமரைக்கண் |

| | | | | |
|---|---|---|---|---|
| மலை | + | தோள் | = | மலைத்தோள் |

22. ட, ற என்னும் எழுத்துகள் இரட்டித்து நெடில் தொடர்க் குற்றியலுகரத்துக்குப் பின்னும் வல்லெழுத்து மிகும்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மாடு | > | மாட்டு | + | சாணம் | = | மாட்ச் சாணம் |
| வீடு | > | வீட்டு | + | சோறு | = | வீட்டுச் சோறு |
| ஆறு | > | ஆற்று | + | தண்ணீர் | = | ஆற்றுத் தண்ணீர் |
| கிணறு | > | கிணற்று | + | தவளை | = | கிணற்றுத் தவளை |

23. ய, ர, ழ ஆகிய எழுத்துகள் ஈற்றாகச் சொற்களுக்குப் பின்வரும் க, ச, த, ப மிகும்.

| | | | | |
|---|---|---|---|---|
| பொய் | + | காதல் | = | பொய்க் காதல் |
| ஊர் | + | பேச்சு | = | ஊர்ப் பேச்சு |
| கீழ் | + | திசை | = | கீழ்த் திசை |

24. மகர ஈற்றுப் பெயர்களிலுள்ள மகர எழுத்தானது சேரும் இடத்தும் க, ச, த, ப மிகும்.

| | | | | |
|---|---|---|---|---|
| மர (ம்) | + | கிளை | = | மரக் கிளை |
| வட்ட (ம்) | + | கிணறு | = | வட்டக் கிணறு |

**வல்லெழுத்துகள் மிகா இடங்கள்:**

வல்லெழுத்து மிகாமல் வருமிடத்தை வலி மிகாமை என அழைப்பர். வல்லெழுத்தை மிகுவித்து எழுதப் பழகிய ஒருவர் கண்ட இடங்களில் எல்லாம் வல்லெழுத்து இட்டு எழுதத் தொடங்குவதைக் காணலாம். வல்லெழுத்து மிகா இடங்களில் வல்லெழுத்து மிகுவித்து எழுதுவது தவறு.

செய்த + பையன் = செய்த பையன்

இங்கே வல்லெழுத்து மிகாமை வேண்டும். செய்தல் என்னும் பெயரெச்சமானது பையன் என்னும் பெயரைக் கொண்டு முடிகிறது. இதற்குப் பதிலாக செய்தப் பையன் என வல்லெழுத்து மிகுவித்து எழுதினால் பொருள் மாறி விடுவதை காணலாம். எனவே வல்லெழுத்து மிகாத இடங்களைப் பற்றிய விளக்கமும் மாணவர்களுக்குத் தேவையான ஒன்றாகும்.

1. அது, இது, எது, அவை, இவை, எவை, அன்று, இன்று, என்று, அத்தனை, இத்தனை, எத்தனை, அவ்வளவு, இவ்வளவு, எவ்வளவு,

அவ்வாறு, இவ்வாறு, எவ்வாறு, படி, ஆறு சேர்ந்து வரும் வினையெச்சங்கள் ஒரு, இரு, அறு, எழு என்பது ஆகிய இச் சொற்களுக்குப் பின் வருமொழி முதலில் க, ச, த, ப என்னும் எழுத்துகளின் வருக்க எழுத்து இருந்தால் மிகாது.

| | | | | |
|---|---|---|---|---|
| அது | + | பெரிது | = | அது பெரிது |
| எவை | + | கூவின | = | எவை கூவின? |
| எத்தனை | + | பூக்கள் | = | எத்தனை பூக்கள்? |
| எவ்வளவு | + | கொடுத்தார் | = | எவ்வளவு கொடுத்தார் |
| கண்டபடி | + | செய்தான் | = | கண்டபடி செய்தான் |
| சொன்னவாறு | + | செய்தான் | = | சொன்னவாறு செய்தான் |
| ஒரு | + | பொருள் | = | ஒரு பொருள் |

அத்தனை, எத்தனை, இத்தனை என்னும் சொற்களின் பின்வரும் வல்லெழுத்துகள் மிகும்.

அத்துணை + பெரிது = அத்துணைப் பெரிது என மிகுவது காணலாம். ஆனால் அத்தனை, இத்தனை, எத்தனை என்னும் சொற்களின் பின் வரும் வல்லெழுத்துகள் மிகாது.

2. பல, சில என்னும் பன்மை அ.்.றிணைப் பெயர்களின் பின் வல்லெழுத்துகள் மிகுவது இல்லை.

| | | |
|---|---|---|
| பல + பேர் | = | பலபேர் |
| சில + பெயர்கள் | = | சிலபெயர்கள் |

ஆனால் இவையே தம்முன் தாம் வருகின்ற பொழுது வல்லெழுத்து மிகுந்தும் மிகாமலும் வருதல் உண்டு.

| | | | | |
|---|---|---|---|---|
| பல | + | பல | = | பலபல, பற்பல அல்லது பலப்பல |
| சில | + | சில | = | சிலசில சிற்சில அல்லது சிலச்சில |

3. செய்த, செய்கிற என்னும் வாய்ப்பாடுகளைக் கொண்டு முடியும் பெயரெச்சங்களின் பின்வரும் வல்லெழுத்துகள் மிகா.

| | | | | |
|---|---|---|---|---|
| செய்த | + | பையன் | = | செய்த பையன் |
| செய்கிற | + | தொழில் | = | செய்கிற தொழில் |

4. இடைச் சொற்களாகிய ஏ, ஓ இவற்றின் பின்னும் வினா இடைச் சொல்லாகிய ‘ஆ’ காரத்தின் பின்னும் வல்லெழுத்து மிகுவது இல்லை.

| | | | | |
|---|---|---|---|---|
| (அவன் ஏ) அவனே | + | பார்த்தான் | = | அவனே பார்த்தான் |
| (அவள் ஓ) அவளோ | + | கொடுத்தாள் | = | அவளோ கொடுத்தாள் |
| (அவன் ஆ) அவனா | + | கேட்டான் | = | அவனா கேட்டான் |

5. விளிப் பெயர்களின் பின் வல்லெழுத்து மிகுவது இல்லை.

| | | | | |
|---|---|---|---|---|
| அண்ணா | + | பார் | = | அண்ணா பார் |
| தம்பி | + | போ | = | தம்பி போ |

6. ஒடு, ஓடு என்னும் மூன்றாம் வேற்றுமை உருபுகளில் வரும் வல்லெழுத்து மிகாது.

| | | | | |
|---|---|---|---|---|
| தம்பியோடு | + | சென்றான் | = | தம்பியோடு சென்றான் |
| பொன்னனோடு | + | பேசினான் | = | பொன்னனோடு பேசினான் |

7. இருந்து, நின்று என்னும் ஐந்தாம் வேற்றுமை உருபுகளின் பின்னும் மிகாது.

| | | | | |
|---|---|---|---|---|
| வீட்டிலிருந்து | + | கொடுத்தான் | = | வீட்டிலிருந்து கொடுத்தான் |
| மலையினின்று | + | கழிந்த | = | மலையினின்று கழிந்த |

8. அது என்னும் ஆறாம் வேற்றுமையுருபின் பின்னும் மிகாது.

| | | | | |
|---|---|---|---|---|
| கந்தனது | + | சட்டை | = | கந்தனது சட்டை |

9. வினைத்தொகை பின் மிகாது.

| | | | | |
|---|---|---|---|---|
| சுடு | + | காடு | = | சுடுகாடு |
| ஊறு | + | காய் | = | ஊறுகாய் |

10. ஈறுகெட்ட பெயரெச்சத்தைத் தவிர பிற பெயரெச்சங்களின் பின் வல்லெழுத்து மிகுவது கிடையாது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெரிய | + | பெட்டி | = | பெரிய பெட்டி |
| சிறிய | + | குதிரை | = | சிறிய குதிரை |
| நல்ல | + | பாம்பு | = | நல்ல பாம்பு |
| படித்த | + | பையன் | = | படித்த பையன் |
| படியாத | + | பெண் | = | படியாத பெண் |

11. மென்றொடர்க் குற்றியலுகரச் சொற்களுக்குப் பின் வரும் வல்லெழுத்து மிகாது.

| | | | | |
|---|---|---|---|---|
| என்று | + | கூறினார் | = | என்று கூறினார் |
| நன்று | + | பேசினார் | = | நன்று பேசினார் |
| கண்டு | + | சொன்னார் | = | கண்டு சொன்னார் |
| வந்து | + | கொடுத்தான் | = | வந்து கொடுத்தான் |

12. இடைத் தொடர், ஆய்தத் தொடர், உயிர்த் தொடர், நெடிற்றொடர்க் குற்றியலுகரச் சொற்களுக்குப் பின்வரும் வல்லெழுத்து மிகுவது இல்லை.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| செய்து | + | கொண்டான் | = | செய்து கொண்டான் | -- இடைத் தொடர்க் குற்றியலுகரம் |
| எ∴கு | + | தோள் | = | எ∴கு தோள் | -- ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம் |
| வரகு | + | சிறியது | = | வரகு சிறியது | -- உயிர்த் தொடர்க் குற்றியலுகரம் |
| நாடு | + | பெரியது | = | நாடு பெரியது | -- நெடிற் றொடர்க் குற்றியலுகரம் |

13. அகர ஈற்றுக் குறிப்புப் பெயரெச்சத்தின் பின் மிகாது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெரிய | + | பையன் | = | பெரிய பையன் |
| அரிய | + | பணி | = | அரிய பணி |

14. அல்வழிக் கண் எழுவாய்த் தொடரின் பின் வரும் வல்லெழுத்துகள் மிகா.

| | | | | |
|---|---|---|---|---|
| பல | + | கொடியது | = | பல கொடியது |
| அரா (பாம்பு) | + | கடித்தது | = | அரா கடித்தது. |

15. இரு வடமொழிச் சொற்கள் சேர்ந்து வருந் தொடர்களில் வரும் வல்லெழுத்துகள் மிகாது.

| | | | | |
|---|---|---|---|---|
| சுப்பிரமணிய | + | பாரதி | = | சுப்பிரமணிய பாரதி |
| ஆதி | + | பகவன் | = | ஆதிபகவன் |
| தேச | + | பக்தி | = | தேசபக்தி |

16. உம்மைத் தொகைக்குப் பின் வலி மிகாது.

| | | | | |
|---|---|---|---|---|
| யானை | + | குதிரை | = | யானை குதிரை |

இராப் பகல், ஏற்றத் தாழ்வு, முதலிய உம்மைத் தொகைச் சொற்கள் இதற்கு விதி விலக்கானவை.

17. இரண்டாம் வேற்றுமைத் தெகை பின்வரும் வல்லெழுத்து மிகாது.

| | | | | |
|---|---|---|---|---|
| பங்கு | + | பிரித்தான் | = | பங்கு பிரித்தான் (பங்கைப் பிரித்தான் |

என விரியும்)

| | | | | |
|---|---|---|---|---|
| பறவை | + | பிடித்தான் | = | பறவை பிடித்தான் |
| கனி | + | தின்றான் | = | கனி தின்றான் |
| தமிழ் | + | படித்தாள் | = | தமிழ் படித்தாள் |
| நீர் | + | குடித்தது | = | நீர் குடித்தது. |

18. வன்றொடர்க் குற்றியலுகரச் சொற்களின் பின் ‘கள்’, ‘தல்’ என்னும் விகுதிகள் சேரும்போது வரும் வல்லெழுத்து மிகுதல் சிறப்பன்று. ஆனால் பிழையன்று.

| | | | | |
|---|---|---|---|---|
| வாக்கு | + | கள் | = | வாக்குகள் |
| எழுத்து | + | கள் | = | எழுத்துகள் |
| கூப்பு | + | தல் | = | கூப்புதல் |

கருத்துகள், கருத்துக்கள், வாக்குகள் வாக்குக்கள், பாட்டுகள் பாட்டுக்கள் என இரு வேறு வடிவங்களும் இன்று வழக்காற்றில் உள்ளன.

அ. கி. பரந்தாமனார் எழுதிய ‘நல்ல தமிழ் எழுத வேண்டுமா? என்னும் நூலிலுள்ள வலி மிகும் விதிகளின் தொகுப்பு, வலி மிகாமைக்குரிய விதிகள் முதலான அதிகாரங்களில் கொடுக்கப் பெற்றுள்ள எடுத்துக்காட்டுகளை அடிப்படையாகக் கொண்டு எழுதப் பெற்றது இப் பாடம். சந்திப் பிழையின்றி எழுதுவது என்பது மொழிப் பயிற்சியின் முக்கியமான ஒன்றாகும். வலி மிகுதலுக்கும் வலி மிகாமைக்கும் இங்குக் கொடுக்கப் பெற்றுள்ளதை மாணவர்கள் படித்துப் பார்த்து அதன் வழிச் சொற்களை உருவாக்க முயற்சி செய்வார்களேயானால் மொழித் திறன் மிக்கவர்களாக விளங்குவார்கள் என்பது உறுதி.

## நிறுத்தக் குறிகளைப் பயன்படுத்துதல்

**நிறுத்தக் குறிகள்:**

காற் புள்ளி, அரைப் புள்ளி என வழங்கும் நிறுத்தக் குறிகள் எல்லாம் தமிழ் மொழிக்குப் புதுமையானவையாகும். இவற்றின் தோற்றம் மிகவும் சமீபத்தே, மேனாட்டினரின் வருகையை ஒட்டியே நிறுத்தக் குறியினைப் பயன்படுத்தும் வழக்கம் தமிழில் புகுந்தது. ஆங்கிலேயர் வருகைக்கு முன்னர் தமிழில் ஏகார ஓகார உம்மைகள் நிறுத்தக் குறிகளின் பங்கினைச் செய்து வந்தன எனலாம். ஆனால், மேனாட்டில் நிறுத்தக் குறிகளைப் பயன்படுத்தும் வழக்கம் கிறித்து பிறப்பதற்கு முன்பே பழக்கத்தில் இருந்து வந்திருக்கிறது. அரிஸ்டோபோனஸ் என்பார். கி. மு. மூன்றாம் நூற்றாண்டினளவில் ஏதோ ஒருவகையான நிறுத்தக் குறியமைப்பு

முறையைக் கையாண்டார் என்று கூறப்படுகின்றது. இப்போது நாம் கையாளுகின்ற நிறுத்தக் குறிகள் 15 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அல்தைன் அச்சகத்தினை அமைத்த அல்தஸ் மனுசியஸ் என்பவரால் அமைக்கப்பட்டனவாம். அக்குறியீட்டு முறையினை முதன் முதலாகத் தமிழில் புகுத்திக் கையாண்ட பெருமை, நல்லூர் ஆறுமுக நாவலர் அவர்களைச் சார்ந்ததாகும் என்பர் மு. கணபதிப் பிள்ளை.

| | | |
|---|---|---|
| , | — | காற் புள்ளி (Comma) |
| ; | — | அரைப் புள்ளி (Semicolon) |
| : | — | முக்காற் புள்ளி (Colon) |
| . | — | முற்றுப் புள்ளி (Full Stop) |
| ? | — | வினாக் குறி (Question Mark) |
| ! | — | உணர்ச்சிக் குறி (Interjection Mark) |
| “——” | — | இரட்டை மேற்கோள் குறிப்பு (Double Quotation) |
| ‘——’ | — | ஒற்றை மேற்கோள் குறிப்பு (Single Quotation) |
| ……….. | — | தொடர் விடுபாட்டுக் குறி |
| — | — | விடுகுறி (Dash) |
| * | — | உடுக்குறி (Star Mark) |
| —….— | — | தனிநிலைத் தொடர்க்குறி (Parenthesis) |
| ( ) | — | பிறைக்குறி (Brackets) |
| [ ] | — | பகர அமைப்புக் குறி (Brackets) |

**காற்புள்ளி: (,)**

1. சொற்களை வரிசைப்படுத்திச் சொல்லும்பொழுதும் ஒவ்வொரு சொற்களைப் பிரித்து எழுதும்பொழுதும்.
   அறம், பொருள், இன்பம், வீடு என்பவை உறுதிப் பொருள்களாம்.

2. இணையாக வருவனவற்றை குறிப்பிடும் பொழுது.
   இன்பமும் துன்பமும், விருப்பும் வெறுப்பும் இல்லாதவனே உண்மைத் துறவியாவான்.

3. வாக்கியத்தில் ஒரு எழுவாயும் பல பயனிலையும் சேர்ந்து வரும்பொழுது
   தன் கணவன் கொலையுண்டு இறந்தான் என்று கேட்ட கண்ணகி பொங்கியெழுந்தாள், விம்மினாள், கலங்கினாள்.

4. ஆனால், ஆகையால், அதனால், ஆகவே, இனி, மேலும் முதலான இணைச் சொற்களுக்குப் பின்னும்.

செய்யுள் படிப்பதற்குச் சிறிது கடினமாக இருக்கிறது. எனினும், அது நமக்குத் தனிமையில் இனிமை தருகிறது.

5. விளிப் பெயர் வரும் பொழுது.

   தம்பீ, நாம் வீட்டுக்குப் போகலாம்.

6. முகவரியில் பெயருக்கு அடுத்தும், பட்டத்துக் இறுதியிலும்.

   அ. கி. பரந்தாமனார், எம். ஏ.,

7. ஆங்கிலத் தேதி முறையிலும்.

   ஏப்ரல் 1, 1979.

8. மேற்கோள் குறிக்கு முன்.

   கண்ணன் தனது நண்பனைக் கண்டதும், "இன்று மாலையில் வருகிறாயா?" என்று கேட்டான்.

**அரைப்புள்ளி: (;)**

1. வாக்கியத்தில் ஒரே எழுவாயானது பல பயனிலைகளைக் கொள்ளும் பொழுது இடையிலுள்ள பயனிலைகளுக்கு அரைப் புள்ளி இடுதல் வேண்டும்.

   மனித வாழ்க்கை, ஓர் ஆறு; குளம் அன்று.

2. ஏனெனில், ஏனென்றால் முதலான காரணக் கிளவிகளுக்கு முன்.

   நான் இன்று பேசமாட்டேன்; ஏனென்றால் எனக்குத் தொண்டை சரியில்லை.

3. ஒரு வாக்கியத்தில் பல சிறு வாக்கியங்கள் இருந்து முழுக் கருத்தைச் சொல்லும் பொழுது.

   மணம் அறிந்ததை மறைத்துப் பொய் சொல்லாதே; சொன்னால் மனமே வருந்தும்.

4. ஒன்றுக்கு மாறான கருத்தைக் கொண்ட சிறு வாக்கியங்கள் இணைந்து ஒரு கருத்தினை விளக்கும் பொழுது,

   கற்றவல்ல அறிஞர்கள் அடக்கமாயிருப்பர்; கல்லா மூடர்கள் ஆரவாரம் செய்வர்.

**முக்காற் புள்ளி: (:)**

1. வாக்கியத்தில் கூறிய ஒன்றனை விரித்துக் கூறும் பொழுது,
   எழுத்து இரு வகைப்படும்: ஒன்று உயிரெழுத்து, மற்றொன்று மெய்யெழுத்து.
2. முக்காற் புள்ளியுடன் கோடிட்டு எழுதுவர்.
   பிழை திருத்துக: -
3. மேற்கோளுக்கு இடையே
   திருக்குறள் அதிகாரம் 8 : 6
4. ஒரு கருத்தை வலியுறுத்தும் பொழுது.
   ஒன்றைக் கூர்ந்து சிந்திக்க, நூல்களைப் படித்துப் பழகு: அதுவே கல்விக்கு மிகவும் வேண்டுவது.

**முற்றுப்புள்ளி: ( . )**

1. வாக்கிய முடிவில்.
   நீ வெளியே போ.
2. சொற் குறுக்கத்தின் போது.
   கி. மு., கி. பி. (கிறித்து பிறப்பதற்கு முன், கிறித்து பிறந்ததற்குப் பின்)

**வினாக் குறி: (?)**

பாடுபட்டால் பலன் இல்லாமல் போகுமோ?

உனக்குப் பொறுப்பு ஏது?

**உணர்ச்சிக் குறி: (!)**

தம்பி உன் நாவை அடக்கிப் பேசு!

**மேற்கோள் குறிகள்: (“….” ‘…..’)**

ஒருவர் கூறுவதை எடுத்துக் காட்டும் பொழுது இரட்டை மேற்கோள் குறியிடுவதும், ஒரு மேற்கோளுக்குள் வரும் பிறிதொரு மேற்கோளைச் சொல்லும் பொழுது ஒற்றை மேற்கோள் குறியினை இடுவதும் வழக்கம்.

“நான் போய் வருவேன்” என்றான்.

“உலக வாழ்க்கை துன்பமே நிறைந்தது” என்னும் கொள்கை உண்மைக்கும் உத்திக்கும் பொருந்துவதன்று என்பதை அக் கட்டுரையில் திரு. மணிவண்ணனார் நிரூபித்துள்ளார்.

**தொடர் விடுபாட்டுக் குறி: (…… …..)**

ஒரு தொடர் விடுபட்டிருந்தால்.

அன்பர்களே…. கேளுங்கள்

அவன் பெயர்…… யான் கூறமாட்டேன்.

**தனிநிலைத் தொடர்க் குறி: (—………….—)**

ஒரு வாக்கியத்தில் அதனோடு தொடர்பில்லாத தனி வாக்கியங்கள் தொடர்பில்லாத நிலையில் இருக்கும் பொழுது.

நண்பா உம்மைக் கண்டதும் --- ஒளியாமற் செல்லுகிறேன்.

எனக்கு வெட்கம் வந்து விட்டது.

**அடைப்புக் குறிகள்: ( [ ] { })**

1. ஒரு பொருளை விளக்கும் பொழுது.

   குறிஞ்சி நிலத்தில் குன்று (மலை) காணப்படும்.

2. ஆங்கிலத் தொடர்களை எழுதும் பொழுது.

   அடைப்புக் குறிகள். (Brackets)

**உடுக்குறி: (*)**

அடிக்குறிப்புக் காட்டுவதற்கு இக்குறியைப் பயன்படுத்துவர்.

பட்டப்படிப்பில் பயிலும் மாணவர்களுக்குத் தேவையான நிறுத்தக் குறிகளைப் பற்றியும் அவற்றைப் பயன்படுத்தும் பாங்கினையும் ஓரளவு சுருக்கிய முறையில் சொல்ல வேண்டும் என்னும் நோக்கில் எழுதப்பட்டது இப் பாடம். இது பொரும்பாலும் அ. கி. பரந்தாமனார் எழுதிய ‘நல்ல தமிழ் எழுத வேண்டுமா?’ என்னும் நூலிலுள்ள நிறுத்தக் குறிகளும் தவறுகளும் என்னும் அதிகாரத்தையும் தென்புலோலியூர் மு. கணபதிப் பிள்ளை எழுதிய பயிற்சித் தமிழ் (இரண்டாம் பதிப்பு) என்னும் நூலிலுள்ள நிறுத்தக் குறிகள் என்னும் அதிகாரத்தினையும் துணையாகக் கொண்டு எழுதப்பட்டது இது. நிறுத்தக் குறிகளைத் தவறாகப் பயன்படுத்துவதால் பொருளே மாறிவிடுவதை அ. கி. பரந்தாமனார் பலவிடங்களில் சுட்டிக் காட்டியுள்ளார்.

எடுத்துக்காட்டு:

1. நீ பழம், பாக்கு, வெற்றிலை வாங்கி வா.
2. நீ பழம் பாக்கு, வெற்றிலை வாங்கி வா.

என்னும் தொடர்களைக் கவனித்தால் பொருள் வேறுபட்டிருப்பதைக் காணலாம். எனவே, நிறுத்தக்குறிகளைப் பயன்படுத்தும் பொழுது தவறின்றிப் பயன்படுத்த

வேண்டும். அவ்வாறு பயன்படுத்தும் பொழுது அவை மொழிக்கு ஓர் அழகைத் தர வேண்டும்.

## தன் கூற்றினையும் பிறர் கூற்றினையும் பயன்படுத்தும் பாங்கு

**தன்கூற்றும் பிறர் கூற்றும்:**

“மக்கள் உரையாடும்பொழுது பேசும் பேச்சினை ----- இரு வகைப்படுத்தலாம். ஒன்று, ஒருவர் பேச்சினை ----- அவர் பேசியபடியே ----- தன்மை இடத்திற்கு ஏற்ப ---- அனுபவித்துக் கூறுவது. அங்ஙனம் கூறுவதை ‘நேர்க் கூற்று’, ‘தன் மொழி’ ‘தன் கூற்று’, என்பதுண்டு. மற்றையது, ஒருவர் பேச்சினை பொருள் மாறுபடாதபடி ---- படர்க்கை இடத்திற்கு ஏற்ப ---- மாற்றியமைத்துக் கூறுவது. இங்ஙனம் கூறுவதை, ‘அயற் கூற்று’, ‘அயல் மொழி’, ‘பிறர் கூற்று’ என்பதுண்டு” என, தன் கூற்றும் பிறர் கூற்றும் பற்றி மு. கணபதிப் பிள்ளை விளக்குவதை நாம் மனதில் கொள்ள வேண்டும். தமிழ் மொழியில் தன் கூற்றே மிகுதியாக வழக்கிலுள்ளது. தன் கூற்றும் பிறர் கூற்றும் சில வேளைகளில் ---- ஏன் பெரும்பாலும் ---- வேறுபாடின்றியே தமிழர்கள் எழுதி வருகிறார்கள். ஆனால் மாணவர்கள் இத் தவறினைக் களைய வேண்டும்.

எடுத்துக்காட்டு:

1. “கந்தா பாடம் படி” என்றார் ஆசிரியர் ---- தன் கூற்று.
   “கந்தனைப் பாடம் படிக்கச் சொன்னார் ஆசிரியர் ---- பிறர் கூற்று

2. அவன், “நான் படிப்பேன்” என்றான் ---- தன் கூற்று.
   அவன் தான் படிப்பதாகக் கூறினான் ---- பிறர் கூற்று.

தன்கூற்று, பிறர்கூற்று வாக்கியங்களில் சொற்களில் ஏற்படுகின்ற மாற்றங்களைப் பற்றிய தெளிவு மாணவர்களுக்கு வேண்டும். கூற்றுகளில் ஏற்படும் மாற்றங்களைக் கீழ்க் காணுமாறு வரிசைப் படுத்தலாம்.

**தன் கூற்று \ பிறர் கூற்று:**

நான் ---- தான் \ என் என்னுடைய ---- தன் தன்னுடைய \ நீ ---- நான், அவன், இவன் \ உன் ---- என் தன் \ அவன் ---- நீ, அவன், இவன் \ நீ, அவன், இவன் \ இது, இவை ---- அது அவை \ இங்கே ---- அங்கே இன்று ---- அன்று \ நாளை ---- அடுத்த நாள், மறு நாள் \ நேற்று ---- முதல் நாள்.

இம் மாற்றங்களை மாணவர்கள் உரியை முறையில் எழுதும்பொழுது பயன்படுத்த வேண்டும்.

**மாணவர் கருத்தில் கொள்ள வேண்டியன:**

1. சந்திப் பிழைகள் என்றால் என்ன?
2. வல்லெழுத்துகள் மிகும் இடங்கள் யாவை?
3. வல்லெழுத்துகள் மிகா இடங்களை விளக்குக.
4. நிறுத்தக் குறிகளை ஏன் பயன்படுத்த வேண்டும்? விளக்குக.
5. தொகைநிலைத் தொடர், தொகாநிலைத் தொடர்: குறிப்பு வரைக.
6. நல்ல தமிழ் எழுதுதல் என்றால் என்ன? விளக்குக.
7. தன்கூற்றைப் பிறர் கூற்றாக மாற்றி எழுதும் பொழுது கவனத்தில் இருத்த வேண்டியன யாவை?

பாடம் - 6

# பிழை திருத்தம்

## மொழி நடைப் பயிற்சி ---- 1

**சுருக்கம்:**

ஒலிமுறைக் குழப்பம் தவிர்த்தல் ---- சொற்களின் முதலிலும் இடையிலும் இறுதியிலும் வரும் எழுத்துகள் ---- சொற்களிடையே ஏற்படும் குழப்பம் தவிர்த்தல் ---- சொற்களின் ஓசை இசைவாய் வரும் குழப்பம் ---- சில சொல் இணைகள் ---- வெண்ணீரா வெந்நீரா? ---- முடிப்புரை ---- வினாக்கள்.

நல்ல தமிழ் எழுதுவதற்கு மொழி நடைப் பயிற்சியும் துறை மொழிப் பயிற்சியும் வேண்டும் என்று சொன்னோம். மொழியைப் பிழையில்லாமல் எழுதவும், மயக்கம் இல்லாமல் எழுதவும், இனிமை சேர்த்து எழுதவும் கற்பதே மொழி நடைப்பயிற்சி. இந்தப் பயிற்சியைப் பெறும்போது, நமது மொழி நடை அனிமை உடையதாக அமைவதோடு, செறிவும் தெளிவும் உடையதாகவும் அமைகிறது.

எழுத்துப் பிழையும், சொற் பிழையும், சொற்றொடர்ப் பிழையும் இல்லாமல் அமையும் போதுதான் மொழிநடை சீரானதாக அமைகிறது. எனவே, நமது வாக்கியங்களில் ஏற்படக் கூடிய எழுத்துப் பிழைகளை நீக்கி, சொல்லின் பொருள் அறிந்து பயன்படுத்தி, மயக்கமில்லாததாக வாக்கியங்கள் அமைக்க வேண்டும்.

**ஒலிக் குழப்பம் நீங்க:**

எழுத்துப் பிழை ஏற்படாமல் இருக்க வேண்டுமானால், ஒரு சொல்லில் எழுத்துகள் அமைந்து நிற்கும் முறைமையைப் பற்றிய (இலக்கண) மரபு தெரிந்திருக்க வேண்டும். நமது மொழியில் இருக்கின்ற சில எழுத்துகளால் அமையும் சொற்களை, அவற்றின் பொருள் வேறுபாட்டுடன் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

எடுத்துக்காட்டாக, அரம், அறம் என்று இரண்டு சொற்கள்; மனம், மணம் என்று இரண்டு சொற்கள்; அலை, அழை, அளை என்று மூன்று சொற்கள். இவற்றைப்போல் சற்றேறக்குறைய ஒரே ஒலியும் வடிவமும் உடைய சொற்களைக் கையாளும்போது பிழை ஏற்பட வாய்ப்புள்ளது. இது நமது பேச்சுப் புழக்கத்தால் ஏற்படக்கூடிய பிழை. பேசும்போது சற்றே தடுமாற்றம் இருந்தால் கேட்பவர்கள்

அவ்வளவாக இதைப் பொறுட்படுத்த மாட்டார்கள். மழை என்பதை மளை என்றும், பழம் என்பதை பளம் என்றும், வீரம் என்பதை வீறம் என்றும் உச்சரிப்பவர்கள் உண்டு. தமிழ் நாட்டின் சில இடங்களில் திருவிழா என்பதைத் திருவிஷா என்றும் சொல்லுவார்கள். வாழைப் பழம் என்பதை வாயப் பழம் என்று சொ்லுவோரும் உளர்.

பேச்சு மொழியிலும் இவை பிழையேயாம். என்றாலும், அங்கே பேசுகின்றவர் எதைக் குறிக்கிறார் என்பது எளிதாகப் புலப்பட்டுவிடுவதால், கருத்தை உணர்ந்து கொள்வதில் பெரிய குழப்பம் ஏற்படுவதில்லை. ஆனால், எழுத்து மொழியில் இத்தகைய குழப்பங்கள் ஏற்படாதபடிப் பார்த்துக்கொள்ள வேண்டும். ‘அறம் செய விரும்பு’ என்பதை ‘அரம் செய விரும்பு’ என்று எழுதினால் பொருளே வேறாகி விடுகிறது அல்லவா? (அறம் என்றால் தருமம் அல்லது நல்ல காரியம் என்று பொருள். அரம் என்றாலோ இரும்பு முதலிய உலோகங்களை உராவித் தேய்ப்பதற்கு உரிய கருவி என்று பொருள்.)

இத்தகைய எழுத்து (ஒலி)க் குழப்பத்தை நீக்குவதற்குச் சில வழிகள் உள்ளன. உரைநடை அல்லது கவிதைப் புத்தகங்களைப் படிப்பதால் சொற்களுக்கு உரிய சரியான பொருள் நம் நெஞ்சில் நிலைக்கிறது. நமக்குத் தெரிந்த அல்லது நாம் அவ்வப்போது கேட்கிற சொற்களில் இப்படிப்பட்ட ஒலி ஒற்றுமை உடைய சொற்களை ஒருங்கு வைத்து நினைத்துப் பார்த்தாலும் நமக்குத் தெளிவு ஏற்படுகிறது.

**பயிற்சி:**

பின்வரும் இணைச் சொற்களின் வேறுபாடு புலப்படும்படி அவற்றைத் தனித்தனி வாக்கியங்களில் அமைத்துப் பழகுக:

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அரிதல் | — | அறிதல் | இரங்கல் | — | இறங்கல் |
| உரி | — | உறி | ஊரல் | — | ஊறல் |
| எரி | — | எறி | ஏரி | — | ஏறி |
| கரை | — | கறை | கரி | — | கறி |
| திணை | — | தினை | புணை | — | புனை |
| பாணம் | — | பானம் | வானம் | — | வாணம் |

பின்வரும் மும்மைச் சொற்களின் பொருள் வேறுபாடு தெரியும்படி அவை ஒவ்வொன்றையும் தனித்தனி வாக்கியங்களில் அமைத்துப் பழகுக:-

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இலை | இளை | இழை | உலை | உளை | உழை |
| உலவு | உளவு | உழவு | ஒலி | ஒளி | ஒழி |
| கிலி | கிளி | கிழி | தலை | தளை | தழை |
| வலி | வளி | வழி | வலை | வளை | வழை |

இவற்றில் எந்தச் சொல்லுக்காவது பொருள் தெரியாவிட்டால், ‘தமிழ் அகராதி’ அல்லது ‘தமிழ் - தமிழ் - ஆங்கில அகராதி’யின் துணை கொண்டு தெரிந்து கொள்ள வேண்டும்.

**சொல்லின் முதலில் வரும் எழுத்துகள்:**

நமது மொழி பல காலமாகப் பேசப்பட்டும் எழுதப்பட்டும் வருகிற மொழி. இதனால் இந்த மொழிக்கு என்று சில நடைமுறை மரபுகள் ஏற்பட்டுள்ளன. இலக்கணக்காரர்கள் மக்களின் பேச்சிலிருந்தும் எழுத்திலிருந்தும் இந்த மரபுகளைக் கண்டறிந்து தொகுத்துத் தந்திருக்கிறார்கள்.

ஒரு சொல்லுக்கு முதலில் வரும் எழுத்துகள் எவை, சொல்லின் இடையில் ஒன்றோடொன்று சேரும் எழுத்துகள் எவை, சொல்லின் கடைசியில் வரும் எழுத்துகள் எவை என்னும் விவரம் முக்கியமானது. இதைத் தெரிந்து கொண்டால் நமது மொழி ஆளுமையில் ஏற்படக்கூடிய பல பிழைகளைத் தவிர்த்துவிடலாம்.

பழங்காலத்தார், நம்மிடம் உள்ள (உயிரும் மெய்யுமாகிய) முப்பது எழுத்துகளில் 21 எழுத்துகள்தான் சொற்களில் முதலில் வரும் என்று கணக்கிட்டார்கள். 12 உயிர் எழுத்துகளும், க, ச, ஞ, த, ந, ப, ம, ய, வ என்னும் 9 மெய் எழுத்துகளுமே சொற்களின முதலில் வரும் என்பது அவர்களின் கணக்கு. அதாவது, தமிழில் எந்த ஒரு சொல்லும் இந்த இருபத்தியோரு (21) எழுத்துகளில் ஒன்றைத்தான் தொடக்கமாகக் கொண்டிருக்க வேண்டும். இது நமது பழைய இலக்கண நூலாகிய தொல்காபப்பியம் தருகின்ற கணக்கு.

இடைக் காலத்தில் இவைகளோடு ங என்னும் எழுத்தையும் சேர்த்து சொற்களுக்கு முதலில் வரும் எழுத்துகள் இருபத்திரண்டு (22) என்று சொல்லுவார்கள். அங்ஙனம், இங்ஙனம் முதலான சொற்களில் உள்ள ஙனம் என்பதில் இப்படி வருவதாகக் கருதினார்கள். நன்னூல் என்னும் இடைக்கால இலக்கணம் இந்தக் கருத்தைச் சொல்லுகிறது.

இக்காலத்தார், மேலும் சில எழுத்துகள் மொழிக்கு (சொல்லுக்கு) முதலில் வருவதாகக் கண்டறிந்திருக்கின்றார்கள். தொலகாப்பியம், நன்னூல் ஆகியவைகளில்

உள்ள விதிப்படி ம, ண, ர, ல, ள, ழ, ற, ன என்னும் எழுத்துகள் எந்தச் சொல்லிலும் முதலில் வரக்கூடாது. இப்போது நமது மக்களின் பேச்சிலும் எழுத்திலும் இந்த விதி மாறிவிட்டது. டயர், டமாரம், லட்டு, ரப்பர் முதலான சொற்கள் நமது மக்களிடையே மிகுதியாக வழங்கத் தொடங்கி விட்டன. எனவே, இப்போது சொல்லுக்கு முதலில் வரும் எழுத்தகளின் தொகை இருபத்தி நான்காக (24) உயர்ந்துவிட்டது. (உயிர் எழுத்துகள் 12, மெய் எழுத்துகளில் க, ச, ஞ, ட, த, ந, ப, ம, ய, ர, ல, வ என்னும் 12).

முன்பெல்லாம், தமிழில் சில எழுத்துகளை முதலாக உடைய சொற்கள் இல்லை, அப்படிப்பட்ட ஒலிகளை முதலாக உடைய வேற்றுமொழிச் சொற்கள் வரும்போது, அவற்றின் முன்னால் அ அல்லது இ என்னும் உயிர் எழுத்தைச் சேர்த்து எழுதுவது வழக்கமாக இருந்தது. ராமசாமி என்பதை இராமசாமி என்று எழுதுவார்கள். லட்சுமணன் என்பதை இலட்சுமணன் என்று எழுதுவார்கள். ரங்கம் என்பதை அரங்கம் என்று எழுதுவார்கள்.

இப்போது, இப்படி எழுதுவதற்கு வாய்ப்பு இல்லாமல், மிகுதியான சொற்கள் தமிழில் வந்து வழங்கத் தொடங்கிவிட்டன. அவற்றுக்கு அ, இ கொடுத்து எழுதினால் பொருட் குழப்பம் ஏற்படுகிறது. சான்றாக டயர் என்னும் ஆங்கிலச் சொல்லை இடயர் என்று எழுதினால் பொருளே மாறிப் போகிறது. ரப்பர் - இரப்பர், லட்டு - இலட்டு, லாரி - இலாரி, ராட்டினம் - இராட்டினம் முதலான சொற்களும் இவ்வாறே.

இந்தக் குழப்பங்களைக் கவனித்த பேராசிரியர் அ. கி. பரந்தாமனார் அவர்கள் இனிமேல் ட, ர, ல என்னும் எழுத்துகளையும் சொற்களுக்கு முதலில் வரும் எழுத்துகளாகக் கொள்ளலாம் என்கிறார். அவர் எழுதிய 'நல்ல தமிழ் எழுத வேண்டுமா? என்னும் புத்தகத்தில் இந்த விவரம் உள்ளது.

சொற்களுக்கு முதலில் வரும் எழுத்துகளைப் பற்றிய விதியின் மிக முக்கியமான கருத்துகள் உண்டு. உயிர் எழுத்துகள் தாமாக சொல்லின் முதலில் வரும். அணில், ஆறு, இலை, ஈகை, உணவு, ஊட்டம், எழில், ஏற்றம், ஐயம், ஒழுங்கு, ஓர்மை, ஔவை என்பன போல மெய்யெழுத்துகள் தாமாக சொல்லின் தொடக்கமாக வரமாட்டா. அவை ஏதாவது ஓர் உயிர் எழுத்தோடு சேர்ந்து (உயிர் மெய் எழுத்து) தான் சொற்களுக்கு முதலில் வர வேண்டும்.

மெய்யெழுத்துகள் உயிரோடு சேர்ந்தே சொல்லுக்கு முதலில் வரும்போது, எந்தெந்த மெய்யெழுத்துகள் எந்தெந்த உயிர் எழுத்துகளோடு சேர்ந்து முதலில்

வரும் (எந்தெந்த உயிர்களோடு சேர்ந்து முதலில் வராது) என்பதை நமது இலக்கணங்கள் தெளிவாக விளக்கி விவரிக்கின்றன.

க, ச, த, ப, ம என்னும் மெய்யெழுத்துகள் எல்லா உயிர் எழுத்துகளோடும் சேர்ந்து சொல்லின் முதலில் வரும். கனி, காதலி, கிளை, கீற்று, குறும்பு, கூட்டம், கெட்டி, கேள்வி, கைப்பு, கொடை, கோடு, கவ்வு முதலியன போல. ஆனால் ஞ, ய, வ முதலிய சில மெய் எழுத்துகள் சொல்லுக்கு முதலில் வருமென்றாலும் எல்லா உயிர்களோடும் அவை சேர்ந்து (சொல்லுக்கு முதலில்) வருவதில்லை. ஞ வரிசையில் ஞமலி, ஞாயிறு, ஞிமிறு, ஞெண்டு என்னும் சில உயிர்மெய்களே சொல்லின் தொடக்க எழுத்தாக வருகின்றன. மற்றவை வருவதில்லை. ய வரிசையிலும் யி, யீ, யெ, யே, யை, யொ, யோ முதலிய எழுத்துகள் மொழிக்கு முதலில் வரமாட்டா.

இந்த விவரங்களைத் தெரிந்து கொண்டால் நாம் பிழைகள் செய்ய மாட்டோம். நேற்று என்பதை ஞேற்று என்றும், நோஞ்சான் என்பதை ஞோஞ்சான் என்றும் எழுத மாட்டோம். இலை என்பதை யலை என்று எழுத மாட்டோம். ஒன்று என்பதை யொன்று என்று எழுத மாட்டோம். வீடு என்பதை வூடு என்று எழுத மாட்டோம். எழுத்திலே மட்டுமல்ல நமது பேச்சிலேகூட இத்தகைய கொச்சை எழுத்துகள் ஊடாடமாட்டா. எழுத்தாலும் பேச்சாலும் நமது எண்ணங்களை மற்றவர்களுக்குச் செப்பமாகத் தெரிவிப்பதற்கு உரிய ஒரு கருவிதானே மொழி?

**இடையில் வரும் எழுத்துகள்:**

சொற்களுக்கு இடையே வரும் எழுத்துகளைப் பற்றியும் திட்டவட்டமான விதிமுறை உண்டு. எந்த எழுத்தை அடுது எந்த எழுத்து வரும்; எந்த எழுத்துக்குப் பிறகு எந்த வழுத்து வராது என்பதை எல்லாம் அந்த (இலக்கண) விதி நமக்குத் தெளிவாகச் சொல்லுகிறது.

தமிழில் உள்ள பதினெட்டு (18) மெய் எழுத்துகளில் ர், ழ் என்னும் இரண்டும் ஒரே சொல்லில் இரட்டித்து வரமாட்டா. அதாவது ர் வந்தபின், அதே சொல்லில் மேலும் ஒரு ர் அதை அடுத்து வராது. ழ வும் அப்படியே. ஒரு ழகரத்தை அடுத்து மற்றொரு ழகரம் வராது. அப்படிச் சொற்களே தமிழில் கிடையாது.

இந்த எழுத்துகளைத் தொடர்ந்து (அடுத்து) வேறு எழுத்துகள் மட்டுமே வரும். அதாவது சேர்தல், ஓர்மை, வாழ்தல் என்பன போல வரும்.

ஏனைய பதினாறு (16) மெய் எழுத்துகளும் தத்தம் எழுத்தோடு இரட்டித்து வரும். பக்கம், அங்ஙனம், உச்சம், மஞ்ஞை பட்டம், வண்ணம், பத்து, செந்நிறம்,

அப்பா, அம்மா, மெய்யன், நெல்லி, அவ்வை, உள்ளம், முற்றம், சின்னம் என்பன எடுத்துக்காட்டு. இவற்றில் இரண்டாவது வருபவை க, ங, ச, ஞை, நி முதலிய உயிர்மெய் எழுத்துகளேயானாலும், அவை வரும்போது அதே மெய் எழுத்து வருவதாகவே கொள்ள வேண்டும். உயிர்மெய் எழுத்திலே முதலில் மெய் எழுத்து (க் + அ = க; ம் + அ = ம) தானே இருக்கிறது?

மெய் எழுத்துகளை வல்லினம் (க், ச், ட், த், ப், ற்) மெல்லினம் (ங், ஞ், ண், ந், ம், ன்), இடையினம் (ய், ர், ல், வ், ழ், ள்) என்று பிரித்து இருக்கிறோம். வல்லின மெய் எழுத்தை அடுத்து மற்றொரு மெய் எழுத்து வராது. (உயிர்மெய்தான் வரும்) வக்ப், மிக்ச்சர், முப்த் என்பன போல மெய்கள் இணைந்து தமிழில் சொற்கள் வருவதில்லை.

இந்த விதிமுறைகளைத் தெரிந்து கொண்டால் முயற்ச்சி, அதற்க்கு என்றெல்லாம் பிழையாக எழுத மாட்டோம் அல்லவா?

**இறுதியில் வரும் எழுத்துகள்:**

தமிழில் ஒரு சொல் எந்தெந்த எழுத்துகளைக் கொண்டு முடியும், எந்தெந்த எழுத்துகள் சொல்லின் கடைசியில் வரமாட்டா என்பதும் முக்கியமாக நினைவில் கொள்ளத் தக்கது. பன்னிரண்டு உயிர் எழுத்துகளும், ஞ், ண், த், ம், ன், ய், ர், ல், வ், ழ், ள் என்னும் பதினோரு (11) மெய் எழுத்துகளும் குற்றியல் உகரமும் சொல்லின் கடைசியில் வரும் எழுத்துகள்.

இவற்றில் உயிர் எழுத்து என்பது தனி உயிரெழுத்தாகவும் வரலாம்; மெய்யோடு சேர்ந்த உயிர்மெய் எழுத்தாகவும் வரலாம். (உயிர்மெய் எழுத்தில், க் + இ = கி என்பது போல் உயிர் எழுத்து ஒலிதானே கடைசியில் நிற்கிறது?) ஆ, ஓ முதலான வியப்புச் சொற்களிலும் அளபெடையிலுமே உயிர் எழுத்து சொல்லின் கடைசியில் வரும். மற்றெல்லா இடங்களிலும் மெய்யெழுத்தோடு சேர்ந்தே உயிர் எழுத்து சொல்லின் கடைசியில் வரும்.

மெய் எழுத்துகளில், மேலே குறித்த பதினொன்றும் சொல்லின் இறுதியில் வரும் என்பது கூடப் பழைய முறைதான். இப்பொழுது அவற்றில் சில எழுத்துகள் சொல்லின் கடைசி எழுத்தாக வருவதில்லை.

உரிஞ், பொருந், தெவ் என்பன போன்ற சொற்கள் முன்பு பழக்கத்தில் இருந்தன. இப்போது இந்த எழுத்துகளைக் கொண்டு முடியும் சொற்கள் அதிகம் வழங்குவதில்லை. எனவே, தனி மெய்களாக சொற்களின் இறுதியில் இருப்பவை ன்,

ம், ய், ர், ல், ழ், ள், ன், என்னும் எட்டு எழுத்துகளே. (கண், அறம், மெய், ஊர், கால், முன், மீன்).

கு, சு, டு, து, பு, று என்னும் ஆறு எழுத்துகளும் பல இடங்களில் முழு உச்சரிப்பு பெறாமல் ஒலி குறைந்தே வரும். அவற்றையே நாம் குற்றியல் உகரம் என்கிறோம். இவையும் சொல்லின் கடைசியில் வரும் என்பது தமிழின் மரபு.

**சொற் குழப்பம் நீக்கல்:**

எழுத்துகளைக் கையாள்வது போலவே, சொற்களைக் கையாள்வதிலும் நமக்குத் தெளிவு வேண்டும். ண, ன எழுத்துகளில் குழப்பம் ஏற்பட வாய்ப்பு இருப்பது போலவே, சில சொற்களிலும் குழப்பம் ஏற்படுவதுண்டு. படிந்தான் என்பதற்கும் படித்தான் என்பதற்கும் பொருளில் தொடர்பே இல்லை. கடிந்தான் என்பதற்கும் கடித்தான் என்பதற்கும் தொடர்பே இல்லை.

ஒரு எழுத்து மாறுதல்கூடச் சொல்லின் பொருளில் பெரிய மாறுதல்களை ஏற்படுத்திவிடுகிறது என்பதை நாம் மனத்தில் வைத்திருக்க வேண்டும். ‘அழிந்தது’, ‘அழித்தது’ என்னும் இரண்டு சொற்களும் ஒரே பொருள் உடையவை போலத் தோன்றினாலும் இவற்றால் குறிக்கப்படும் நிகழ்ச்சியில் நுட்பமான வேறுபாடு உள்ளது. ‘அழிந்தது’ என்றால், தானே சிதைந்தது என்று பொருள். ‘அழித்தது’ என்றால், ஏதோ ஒன்று (மற்றொன்றைச்) சிதைத்தது என்று பொருள். இவற்றில் ‘அழிந்தது’ என்பதைத் தன்வினை என்றும் ‘அழித்தது’ என்பதைப் பிறவினை என்றும் சொல்லுகிறோம்.

சிலபோது, கிட்டதட்ட ஒரே ஓசை உடைய சொற்களில் குழப்பம் ஏற்படுவதும் உண்டு. துகில் என்பதும் துயில் என்பதும் ஒலியில் நெருக்கமாக இருந்தாலும் பொருளில் வேறு வேறானவை. துகில் என்பது துணி, துயில் என்பது உறக்கம். வேய்தல் என்பதையும் மேய்தல் என்பதையும் சிலர் மாற்றிக் கையாண்டு விடுவர். கூரை வேய்ந்தான் என்பதற்குப் பதிலாகக் கூரை மேய்ந்தான் என்று சொன்னால் எப்படி இருக்கும்? ஆடு மாடுகள் புல்லை மேயும், மனிதன் கூரை வேய்வதற்குப் பதிலாக அதை மேயலாமா?

மைல் என்பது ஒரு நீட்டல் அளவு, மயில் என்பது ஒரு பறவை. பெட்டியைத் திறந்தான் என்பதற்குப் பதிலாகப் பெட்டியைத் துறந்தான் என்று எழுதிவிடக்கூடாது. துறந்தான் என்றால் விட்டுவிட்டுப் போய்விட்டான் என்று பொருள். உற்றார் உறவினரை விட்டுவிட்டுச் சாமியாராகப் போய் விடுகிறவனைத் துறவி என்று சொல்லுகிறோம் அல்லவா? துறந்தவன் துறவி.

**சொல் இணைகள்:**

இரண்டு சொற்களை இணைத்து ஒரு புதிய சொல்லை உண்டாக்கும்போது சில பிழைகள் ஏற்படுவது உண்டு. நமது கடைப் பலகைகளிலும் செய்தித் தாள்களில் வரும் விளம்பரங்களிலும் ‘நயம் ஊத்துக்குளி வெண்ணை’ ‘அசல் தேங்காய் எண்ணெய்’ என்பன போன்ற சொற்களைப் பார்த்திருப்பீர்கள். இதிலே உள்ள வெண்ணை, எண்ணை என்னும் சொற்கள் பிழையாக எழுதப்பட்டுள்ளன.

வெண்மை, நெய் என்னும் இரண்டு சொற்கள் சேர்ந்து வெண்ணெய் என்று ஆகிறது. அதை வெண்ணை என்று எழுதக்கூடாது. எள், நெய் என்னும் இரண்டு சொற்கள் சேர்ந்து எண்ணெய் என்று ஆகிறது. அதை எண்ணை என்று எழுதக் கூடாது.

வெண்ணை என்பது வெண்மை + ணை என்று பிரியும், அதற்குப் பொருள் கிடையாது. அதே போல எண்ணை என்பது எள் + ணை என்று பிரியும். இதற்கும் பொருள் எதுவும் கிடையாது. எனவே மேற்கண்ட சொற்களை முறையே வெண்ணெய், எண்ணெய் என்றே எழுத வேண்டும் என்பதை உணர வேண்டும்.

**வெந்நித் தண்ணீரா?**

இவற்றைப் போன்ற வேறு சில கூட்டுச் சொற்களும் உண்டு. வென்னீர், சென்னீலம் என்றெல்லாம் சிலர் எழுதுவார்கள். இவை வெந்நீர், செந்நீலம் என்றே எழுதப்பட வேண்டும். வெம்மை, நீர் என்று இரண்டு சொற்களால் ஆனதே வெந்நீர் என்னும் கூட்டுச் சொல். இந்தச் சொற்கள் இணையும்போது வெம்மை என்பதில் உள்ள கடைசி எழுத்து நீங்கிப் போகும். வெம், நீர் என்ற சொற்களே நிற்கும். அது வெம் நீர் என்று ஆகி, உச்சரிப்பு எளிமைக்காக வெந்நீர் என்று ஆகிறது. செந்நீலம் என்ற சொல்லும் செம்மை, நீலம் என்னும் இரண்டு சொற்களால் ஆனது. அவை இணையும்போது செம் நீலம் என்று ஆகிச் செந்நீலம் என்றே அமைய வேண்டும்.

வெந்நீர் என்பதைச் சுடு தண்ணீர் என்றே சிலர் எழுதுவார்கள். தண்ணீர் என்றால் குளிர்ந்த நீர் என்று பொருள். எனவே சுடு தண்ணீர் என்றால் வெப்பமான குளிர்ந்த நீர் என்று பொருள்படும். அப்படி நீர் கிடையாது. தவிரவும் இங்கே நாம்

குறிப்பிட விரும்புவது சுடு நீர் என்னும் வெந்நீரையே. சூடாக இருக்கின்ற நீரை வெப்பமான குளிர்ச்சியான நீர் என்று சொல்லக் கூடாதல்லவா?

இன்னும் பல பேர், ஒரு படி மேலே சென்று வெந்நித்தண்ணி என்பார்கள். அதாவது வெந்நீர் தண்ணீர் என்கிறார்கள். அப்படி என்றால் சுடவைத்து ஆற வைத்த நீர் என்று பொருள் (சூடாக இருக்கிற) வெந்நீரை இப்படிக் குழப்பமான சொற்களால் குறிக்கக் கூடாது அல்லவா?

**நினைவிலே கொள்ளுங்கள்:**

எண்ணை அல்ல, எண்ணெய்;

வெண்ணை அல்ல, வெண்ணெய்;

வென்னீர் அல்ல, சுடு தண்ணீர் அல்ல, வெந்நித் தண்ணீரும் அல்ல, அது வெந்நீர்.

**முடிப்புரை:**

கிட்டத்தட்ட ஒரே விதமான ஒலி உடைய எழுத்துகளைத் தெளிவாகப் பயின்று அவற்றால் ஏற்படும் பொருள் வேறுபாட்டை உணர வேண்டும். கிட்டதட்ட ஒரே விதமான ஓசை உடைய சொற்களை ஆள்வதிலும் கவனம் வேண்டும். சொல்லின் முதலிலும் நடுவிலும் வரக்கூடிய எழுத்துகள் எவையெவை என்பதை அறிந்திருக்க வேண்டும். தவறான சொல்லாட்சிகளைக் கொஞ்சம் ஊன்றிக் கவனித்து அவற்றின் அமைப்பைத் திருத்திக் கொள்ள வேண்டும். இதனால் நமது மொழிநடைப் பயிற்சி வளம் பெறுகிறது. நாம் கையாளும் பேச்சு மொழியிலும் எழுத்து மொழியிலும் சிறந்த செப்பம் ஏற்படுகிறது.

**மாணவர் மனங்கொள்ள வேண்டியன:**

1. பின்வரும் சொல் இணைகளின் பொருள் விளங்கும்படி தனித்தனியே வாக்கியங்களில் அமைத்து எழுது.

   (அ) வேலை, வேளை (ஆ) குரை, குறை (இ) இலை, இழை (ஈ) ஒலி, ஒளி (உ) எண்ணை, எண்ணெய்,

2. சொல்லுக்கு முதலிலும் இடையிலும் வரும் எழுத்துகளைப் பற்றிய தெளிவு மொழிநடைப் பயிற்சியில் எந்த அளவு உதவுகிறது?
3. பின்வரும் சொற்களின் பிறவினை வடிவத்தை எழுதுக:

   எழுந்தான், விழுந்தான், ஓடினான், வணங்கினான், கற்றான்.

4. வெந்நித் தண்ணீர் என்பது பற்றி ஒரு குறிப்பு வரைக.

பாடம் - 7

# குழப்பம் நீக்குதல்

## மொழி நடைப் பயிற்சி – 2

**சுருக்கம்:**

மரபை இழப்பதா? ---- உயிரினங்களின் குரல் ---- செயல் அடிப்படையில் சொற்கள் ---- உருவமும் பருவமும் ---- இலை, ஓலை, மடல் ---- சொல் பஞ்சமில்லை ---- ஆணும் பெண்ணும் ---- குட்டிகள் குஞ்சுகள் ---- தொடுக்கவா கட்டவா? ---- வினாக்கள்.

### மரபை இழப்பதா?

தமிழ் மொழி சொல் வளமுடைய மொழி. பல நூற்றாண்டுகளாகப் பயின்று வருகின்ற மொழி. எனவே, நுட்பமான கருத்துகளை விளக்கும் ஆற்றல் தமிழுக்கு உண்டு. ஆயினும், நம் மக்களிலே பலருக்கு மொழியில் போதிய பயிற்சி இல்லை. அடி மனத்தின் விளைவான ஒரு மந்தநடைப் போக்கும் நமது வாழ்வின் அனைத்துத் துறைகளிலும் படர்ந்து கிடக்கிறது. நமது பேச்சு மொழியிலும், இந்த மந்தநடை ஒருவிதமான மயக்கத்தை உண்டாக்குகிறது. எனவே, பலரின் மொழிநடை போதிய திட்ப நுட்பத் தெளிவு இல்லாமல், வலிவும் பெலிவும் இழந்து கிடக்கிறது. நலிந்த உடலுக்கு ஊட்டம் சேர்ப்பதற்கு உடற்பயிற்சி தேவைப்படுகிறது. அது போலவே மொழி நடைக்கு ஊட்டம் சேர்க்கவும் சில பயிற்சிகள் தேவைப்படுகின்றன. எந்தச் சொல்லை எங்கே எப்படி ஆள்வது என்கிற தெளிவை நாம் பயில வேண்டியுள்ளது.

அதிகம், அநேகம் என்னும் இரண்டு சொற்கள் மிகுதி என்னும் ஒரே பொருளைக் குறிக்கின்றன. ஆனால், இவற்றில் அதிகம் என்ற சொல்லை அளவின் மிகுதியைக் குறிக்கின்ற இடத்திலும் அநேகம் என்ற சொல்லை எண்ணிக்கையின் மிகுதியைக் குறிக்கின்ற இடத்திலும் பயன்படுத்துதல் வேண்டும். இதுபோலவே எத்தனை, எவ்வளவு போன்ற சொற்களை, ‘‘உனக்கு எத்தனைப் புத்தகங்கள் வேண்டும்?’’ என்று எண்ணைக் குறிக்கின்ற இடத்திலும், ‘‘எவ்வளவு நெல் வேண்டும்?’’ என்று அளவைக் குறிக்கின்ற இடத்திலும் பயன்படுத்துவது மொழி நடைக்குத் தெளிவையும் அழுத்தத்தையும் கொடுக்கும்.

சில சொற்கள் காலங்காலமாக ஒரு குறிப்பிட்ட பொருளில் பயன்பட்டு வந்துள்ளன. அவற்றின் மரபு அறியாமல், அவற்றைத் தாறுமாறாகப் பயன்படுத்தத் தொடங்கி விட்டால் மொழி மரபு சிதைவதோடு நமது பேச்சிலும் எழுத்திலும் இருக்க வேண்டிய நுட்பமும் சிதைந்து போகும். ‘பட்டினம்’ என்ற சொல் கடற்கரை நகரத்தையும் ‘பட்டணம்’ என்ற சொல் நாட்டின் உட்பகுதியில் உள்ள நகரத்தையும் குறித்து வந்துள்ளன. இன்று பலர் இந்த வேறுபாடு தெரியாமல் கையாளுவதால் காலப்போக்கில் சொற்கள் தனித்தன்மையை இழந்து விடும்நிலை உருவாகி விடுகிறது.

முன்பெல்லாம் பட்டினத்தார் என்று சொன்னாலே அவர் ஒரு கடற்கரை ஊரைச் சேர்ந்தவர் என்று விளங்கிவிடும். இப்போது அந்தச் சொல்லாட்சியில் ஏற்பட்ட மயக்கத்தால், அந்தக் குறிப்பே அழிந்து போய் விட்டது. மரபு வழியாக நமக்குக் கிடைத்திருக்கும் பல சொற்களைப் பேணிக் காப்பதன் வாயிலாக, அவற்றை மறு பயிற்சி செய்து மொழிநடையோடு இழைய விடுவதன் வாயிலாக, மொழிநடை செப்பமும் நுணுக்கமும் பெற்றுத் திகழும் என்பது வெளிப்படை.

**உயிரினங்களின் குரல்:**

நம்மைச் சுற்றி வாழும் உயிரினங்களை விலங்கு, பறவை, ஊர்வன, நீந்துவன எனப் பலவாறாகப் பிரித்திருக்கின்றோம். காலை முதல் மாலை வரை ---- சிலபோது இரவிலே கூட அவற்றின் குரல்களைக் கேட்டுக் கொண்டே வாழ்கிறோம். இந்தக் குரல்களின் வேறுபாட்டைக் கருதியும், அவற்றை எழுப்புகிற பிராணிகளின் அழகு, ஆற்றல், முதலிய பண்புகளுக்கு ஏற்பவும், அவற்றின் குரல்களை வெவ்வேறு சொற்களால் (நம் முன்னோர்கள்) குறிப்பிட்டு வந்தார்கள்.

யானை பிளிறும்;
நாய் குரைக்கும்;
கழுதை கனைக்கும்;
நரி ஊளையிடும்;
ஆந்தை அலறும்;
மயில் அகவும்.

என்பன போல ஒவ்வொன்றுக்கும் வெவ்வேறு சொற்களை ஆள்வதே தமிழ் மரபு. இதற்கு மாறாக, யானை கத்துகிறது; நரி கத்துகிறது; கழுதை கத்துகிறது; ஆந்தை கத்துகிறது என்று சொன்னாலும் நமக்கும் பொருள் விளங்கும். ஆனால் அதிலே ஓர் அழகோ தெளிவோ இல்லை. ஒலிகளைக் கொண்டே ஒவ்வோர் உயிர்ப் பிராணியையும் வேறு பிரித்து உணரக்கூடிய நுட்பமும் இல்லை.

மொழி என்பது வெறும் சொற்களின் கோர்வை அல்ல; சரியான சொல்லை உரிய இடத்தில் பயன்படுத்தி, நமது கருத்தைப் பொருத்தமாக, விளக்கமாக விளக்குவதே மொழி. எனவே, மென்மையான மயிலின் குரலையும் கடுமையான ஆந்தையின் குரலையும் கத்துகிறது என்ற ஒரே சொல்லால் குறிக்கக்கூடாது. அப்படிக் குறித்து விட்டால் மொழி நடையின் உயிரோட்டமே குன்றிவிடுகின்றது.

**செயல் அடிப்படை:**

அருவி, ஆறு, ஏரி ஆகிய எல்லாவற்றிலும் உள்ளது தண்ணீர்தான். ஆனால், அருவியில் தண்ணீர் வழிகிறது (அல்லது விடுகிறது) என்கிறோம். ஆற்றில் தண்ணீர் ஓடுகிறது என்கிறோம். ஏரியில் தண்ணீர் தேங்குகிறது என்கிறோம். இவற்றை மாற்றிச் சொன்னால் பொருளே குழம்பி விடுகிறது. அருவியில் தண்ணீர் தேங்கி நின்றால், யாரும் குளிக்க முடியாது அல்லவா?

ஒரே இடத்தில் மிகுதியாகச் சேரும் உயிர்ப் பிராணிகளை அல்லது உயிர் இல்லாத பொருள்களைக் குறிக்கவும் வெவ்வேறு சொற்கள் வழங்கிவருகின்றன. பல ஆடுகள் சேர்ந்தால் ஆட்டுக் கூட்டம் என்பதில்லை; ‘ஆட்டு மந்தை’ என்கிறோம். மக்கள் பலர் சேர்ந்தால் ‘மக்கட் கூட்டம்’ என்கிறோம். கற்கள் சேர்ந்தால் கற் குவியல், மலைகள் சேர்ந்தால் மலைத் தொடர், மரங்கள் சேர்ந்தால் மரச் சோலை, யானைகள் சேர்ந்தால் யானைப் பந்தி என்கிறோம். ஒரே காம்பில் திரண்டிருக்கும் பொருட்களைக்கூட அவற்றின் வேறுபாடு புலப்படும் விதமாக, பூங்கொத்து என்றும் பழக் குலை என்றும் சொல்லுகிறோம். விறகு சேகரித்து ஒன்றாகச் சேர்நதால் விறகுக் கட்டு என்கிறோம். நாற்றைப் பிடுங்கி ஒன்றாகச் சேர்த்தால் நாற்றுமுடி என்கிறோம்.

இப்படி எண்ணியெண்ணி வெவ்வேறு சொற்களை ஆளவேண்டும். இதனால் அந்தச் சொற்களிலேயே அங்கு நடக்கும் செயலின் தன்மை அழகாகவும் சுருக்கமாகவும் விளக்கப்பட்டு விடுகிறது. சுருக்கமும் தெளிவும்தானே மொழிக்கு அழகு?

கற்களை ஓர் இடத்தில் திரட்டும்போது பரப்பிப்போட மாட்டார்கள்; குவித்தே போடுவார்கள்; எனவே கற் குவியல். யானைகள் ஒன்று சேரும்போது வரிசை வரிசையாகவே சேரும். எனவே, யானைப் பந்தி. விறகைத் திரட்டி உறுதியான கயிற்றால் (கொடியால்) இறுக்கிக் கட்டுகிறோம்; எனவே, விறகுக் கட்டு. நாற்றை அப்படி இறுக்கிக் கட்டினால் சிதைந்து போகும். எனவே மெதுவாக, அவைகளில் சில நாற்றுகளைக் கொண்டே மென்மையாக முடிந்து வைக்கிறார்கள். ஆகவே அது நாற்று முடி.

**உருவமும் பருவமும்:**

செயல்களின் அடிப்படையில் மட்டுமல்லாது வடிவம் பருவம் என்னும் அடிப்படையிலும் சொல்லாட்சி அமைய வேண்டும். ஓர் இலையின் பல்வேறு பருவங்களைத் தளிர், இலை, பழுப்பு, சருகு, என்னும் வேறு வேறு சொற்களால் குறிக்கிறோம். இந்தச் சொற்களைச் சொன்னவுடனேயே நமக்கு அதன் தோற்றமும் விளங்கிவிடுகிறது.

அரும்பு, முகை, மொட்டு, மலர், அலர், வீ, செம்மல் என்னும் சொற்கள் நமக்குப் புதுமையாகத் தோன்றும். ஆனால், நமது முன்னோர்கள், மலரின் பல்வேறு பருவங்களை இந்தத் தனித்தனிச் சொற்களாலேயே குறித்து வந்தார்கள். மலரும் பருவத்தில் உள்ள பூவையே மலர் என்றார்கள். நன்றாக விரிந்தது அலர். அலர்ந்து வாடிய தோற்றத்தில் இருப்பது வீ; வாடிச் சுருண்டு கீழே விழுந்தபின், அது செம்மல் என்றே சொல்லப்பட்டது, இன்று இத்தனையும் ஆளாவிட்டாலும், அரும்பு, மலர், அலர், வீ என்னும் அத்தனையும் பூ என்னும் ஒரே சொல்லால் குறிப்பதையாவது தவிர்க்கலாம் அல்லவா?

**இலை, ஓலை, மடல்:**

பருவத்தால் மட்டுமல்ல, தோற்றத்தினாலும் இயல்பினாலும்கூட, ஒரே இனப் பொருளை வேறு வேறு சொற்களால் குறிக்கப்படுகிறது. பூ ஏந்தத் தொடங்குமுன் மரம், செடி, கொடி எல்லாவற்றிலும் வளரும் உறுப்புக்கு இலை என்ற பொதுப் பெயர் உள்ளது. ஆனால், எல்லாவற்றையும் நாம் இலை என்றே சொல்வதில்லை.

புல்லின் இலையைத் தாள் என்கிறோம். நெல்லும் ஒரு வகைப் புல்லே. ஆதலால், நெல்லின் இலையையும் தாள் என்றே சொல்லுகிறோம். "அரிதாள் வர மறுநாள் பயிராகும்" என்ற நாட்டுப் பாடல் உள்ளது அல்லவா?

நம்முடைய முன்னோர்கள் பனை, தென்னை, கமுகு, முதலிய மரங்களையும் புல் என்றே சொன்னார்கள். பனைக்குத் தாலப் புல் என்ற ஒரு பெயரும் உண்டு. எதன் அடிமரத்தின் உட்பாகம் உறுதியாக (வயிரம்) இருக்கிறதோ அது மரம் என்றும், எதிலே வெளிப் பாகம் உறுதியாக இருக்கிறதோ அது புல் என்றும் கருதப்பட்டன. "புறக் காழனவே புல்லென மொழிப" "அகக் காழனவே மரம் என மொழிப" என்பது தொல்காப்பியம். (காழ் என்றால் உறுதி அல்லது வயிரம் என்பது பொருள்).

இந்தப் புற்கள் மற்ற புற்களைப் போல் தரையிலே கிடக்கவில்லை. வானுற ஓங்கி நிற்கின்றன. எனவே, இவற்றின் இலைகளைத் தாள் என்று சொல்ல முடியவில்லை. (நமது உறவுக்கார வீட்டுப் பையன் சிறுவனாக இருக்கும்போது டே என்று அழைக்கலாம், அவன் வளர்ந்த பிறகு அப்படி அழைக்க முடியுமா?

பெயரைத் தெரிந்து கொண்டு அதைச் சொல்லி அழைக்கிறோம் அல்லவா?) ஆகவே ஓங்கி வளர்ந்துவிட்ட தென்னை, பனை, கமுகு முதலிய புற்களின் இலைகளை ஓலை என்று சொன்னார்கள்.

தென்னை, பனை போன்ற மற்றொன்று தாழை. இதுவும் அவற்றைப்போல் புல்லின வகையைச் சேர்ந்ததுதான். ஆனாலும், அவற்றைப்போல மடர் (காம்பு) எடுத்து இலை எடுக்காமல், மடலும் இலையும் சேர்ந்தே இருப்பதால் தாழையின் இலை மடல் என்றே சொல்லப்படுகிறது. கமுகின் இலை காம்பில் இருந்தும் இல்லாதது போன்ற ஓர் அமைப்புடையது. எனவே, கமுகின் இலையையும் சிலபோது மடல் என்று சொல்வதுண்டு.

**சொல் பஞ்சமா?**

இப்போது பல புதிய அறிவியல் துறைகள் உள்ளன. உழவுத் தொழில், கைத் தொழில் ஆகிய பழைய தொழில்களும் புதுப்பிக்கப்பட்டு விரிவுபடுத்தப்பட்டுள்ளன. இந்தத் துறைகளைப் பற்றியெல்லாம், தமிழில் புதிய புத்தகங்கள் வரவேண்டும் என்று ஆசைப்படுகிறோம். ஆனால், உடனேயே, ‘‘அவற்றிற்குரிய துறைச் சொற்கள் இல்லையே’’ என்ற அவலக் குரல் எழுகிறது. (டெக்னிக்கல் டெர்ம்ஸ்) இதற்குக் காரணம் தமிழின் சொல் பஞசம் அல்ல, தமிழில் உள்ள சொற்களையே நாம் பயன்படுத்தாமல் விட்டு விட்டோம். அவற்றைப் பயன்படுத்தி வராததால் அப்படிச் சொற்களே இல்லை என்று கருதி விட்டோம்.

மரம், செடி, கொடி, புல் ஆகியவற்றின் இலைகளுக்கு மட்டுமல்ல அவற்றின் விதைகளுக்குக்கூடத் தமிழில் வெவ்வேறு பெயர்கள் இருந்து வருகின்றன. மிளகாய், கத்திரி ஆகியவற்றின் விதைகளை வித்து என்கிறோம். மா, பலா, பனை ஆகியவ்றறின் விதைகளைக் கொட்டை என்கிறோம். சோளம், நெல் முதலியவற்றின் விதைகளை மணி என்கிறோம். ஆமணக்கு, வேம்பு ஆகியவற்றின் விதைகளை முத்து என்கிறோம்.

அது மட்டுமா? கலப்பை என்னும் ஒரே பொருளின் பாகங்களைக் குறிக்கவும் பல்வேறு சொற்கள் உள்ளன. மேழி, ஏற்கால், குற்றி, கொழு, நுகம் முதலான பல பகுதிகள் இணைந்தே ஒரு கலப்பை உண்டாக்குகிறது.

இந்தச் சொற்களை எல்லாம் இடத்திற்கு ஏற்றபடி, பொருள் பொருத்தத்தோடு கையாண்டால் நமது மொழியே புதிய வளம் பெறும். நெற் கதிரில் மணிகள் அணி அணியாக உள்ளன என்பதற்கும் நெற்கதிர் நன்றாக உள்ளது என்பதற்கும் வேறுபாடு உண்டு அல்லவா? ஆணும் பெண்ணும்: உயிர் வகைகளின் (ஆண், பெண்) பால் வேற்றுமையைக் குறிக்கும் சொற்கள் தமிழ் மொழிக்கே தனி அழகு

சேர்க்கின்றன. ஆண், பெண் என்னும் சொற்களை முன்னே சேர்த்து (ஆண் கோழி பெண் கோழி என்பது போல) எழுதினாலும் பொருள் விளங்கும். என்றாலும், சேவல், பெட்டை என்னும் தனித்தனிச் சொற்களால் அவற்றைக் குறித்தால் சுருக்கமாகவும் அழகாகவும் இருக்கும் அல்லவா?

‘‘காதல் மடப்பிடியோடு களிறு வருவதைக் கண்டேன்’’ என்று பாடுகிறார் அப்பர், இதையே பெண் யானையோடு ஆண் யானைகள் வருவன கண்டேன் என்றால் எப்படி இருக்கும்? பொருள் விளங்கி விடுகிறது. ஆனால் மொழி அழகு குன்றி விடுகிறது அல்லவா?

இதேபோல், காளை மாடு, பசு மாடு என்று சொல்லாமல் காளை, பசு என்று சொல்லுகிறோம். ஆண் குரங்கு, பெண் குரங்கு என்று சொல்லாமல், கடுவன், மந்தி என்று சொல்லுகிறோம்.

‘‘இப்படி எல்லாம் ஏன் சொல்வது? ஆண், பெண் என்று சேர்த்தால் என்ன? என்று எண்ணத் தோன்றும். கருத்து விளங்கும் என்பது உண்மைதான். ஆனால், அதிலே ஒரு கனிவு இருக்காது. மானம் மறைப்பதற்கு உள்ள ஆடையை எப்படி எப்படியெல்லாம் அழகுபடுத்துகிறோம். பசியைத் தணிப்பதற்கு உள்ள உணவிலே எத்தனை வகைகள். மொழி நடையிலும் மக்கள் அழகை விரும்புகிறார்கள்.

**குட்டிகள் - குஞ்சுகள்:**

பால் பாகுபாட்டிலே மட்டுமின்றி இளமைப் பெயர்களிலும் தமிழ் மொழி வகைமைப்பாடு (வெரைட்டி) காட்டுகிறது. கிளியின் பிள்ளையைக் குஞ்சு என்றும் எருமையின் பிள்ளையைக் கன்று என்றும் சொல்வதே தமிழ் வழக்கம்.

உயிர்களை, அறிவின் அடிப்படையில் ஆறு வகையாகப் பிரித்துப் பார்க்கிறோம். ஆறு அறிவு உடைய மனிதனே உயிர் வகைகளிலே உயர்ந்தவன் என்று சொல்லுகிறோம். அப்படியானால் ஓரறிவு உயிர், ஆறு அறிவு உயிர் என்றும் ஒவ்வொன்றின் பிள்ளையையும், அந்த வேறுபாடு விளங்கும் வகையில் குறிப்பிடுவதுதானே முறை?

கோழிக் குஞ்சு, கிளிக் குஞ்சு, மீன் குஞ்சு, என்றெல்லாம் சொல்லி வருகிற நாம், நாயின் பிள்ளையை நாய்க் குஞ்சு என்று சொல்வதில்லை. அந்தப் பிராணிகளை நேரில் பார்த்திருப்பதால், சிறியதையும், பெரியதாக இருப்பதையும் ஒரே சொல்லால் குறிக்கக் கூடாது என்பது நமக்கே புரிந்து விடுகிறது.

நம்முடைய பிள்ளையைக் குழந்தை என்கிறோம். நம் வீட்டு எலியின் பிள்ளையைக் குஞ்சு என்கிறோம். ‘‘காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு’’ என்பது உண்மையே. அதுவும் தன் மொழியில் தன் பிள்ளையைக் ‘‘குழந்தாய்’’ என்று அழைக்கக்கூடும். ஆனால், காக்கையின் பிள்ளை கறுப்பாக இருக்கிறது என்பது மறுக்க முடியாத உண்மை அல்லவா? இதே போலத்தான், அந்தந்தப் ‘பிள்ளையின்’ தோற்றம், இயல்பு ஆகியவைகளுக்கு ஏற்பவே அதற்குத் தகுந்த சொல்லால் குறிக்கப் பெற வேண்டும்.

இராமனுக்குச் சூட்ட வேண்டிய முடியைப் பரதனுக்குச் சூட்டுவதற்குத் திட்டமிட்டாள் கைகேயி. இதை அறிந்து சீற்றம் கொண்ட இலக்குவன், ‘‘சிங்கக் குருளைக்கு இடு தீஞ்சுவை ஊனை நாயின் வெங்கன் சிறு குட்டினை ஊட்ட விரும்பினாள்’’ என்று கொதிக்கிறான். இங்கே சிங்கக் குட்டினுக்கு ஊட்டும் ஊனை நாயின் குட்டினுக்கு ஊட்ட விரும்பினாள் என்று சொன்னால் அதிலே தொனிக்கும் இளக்காரம் வருமா?

**தொடுக்கவா? கட்டவா?:**

நின்றாள், ஓடினாள், படுத்தாள் என்றெல்லாம் சொல்லும்போது அந்தச் சொற்களின் பொருள் நமக்குத் தெளிவாக விளங்குகிறது. இதுபோல் ஒவ்வொரு செயலையும் இதற்கு உரிய சொல்லால் குறிப்பதே பொருத்தம். ஆனாலும், செயல்களின் நுட்பமான வேறுபாடு தெரியாதவர்கள் ஒரு சொல்லையே பல செயல்களுக்குப் பயன்படுத்திக் குழப்பம் விளைவிக்கிறார்கள். நமது மொழி நடை திருந்த வேண்டுமானால் இந்த மயக்கச் சொல்லாட்சி தவிர்க்கப் படவேண்டும்.

ஏற்கெனவே கட்டுதல், முடிதல் என்னும் சொற்களைப் பார்த்தோம். அதேபோல, உரிய சொற்களைத் தேர்ந்தெடுத்து ஆளப் பழக வேண்டும். மரத்தை வெட்டலாம். தக்காளிப் பழத்தை வெட்டக்கூடாது. அதை நறுக்க வேண்டும். தக்காளிப் பழத்தை மரம் வெட்டுவதைப் போல வெட்டினால் அதன் சாறு தெரித்து நம் ஆடை வீணாகிவிடும்.

விறகு உலர்ந்து வலிமை பெற்றது. விறகுக் கட்டைகளை ஒன்றாகச் சேர்த்து இறுக்கிக் கட்டலாம். ஆனால் பூவை அப்படிக் கட்டிவிடக்கூடாது. பூ மென்மையானது. அதை மெல்லிய வாழை நாரில் தொடுக்க வேண்டும். அழகு என்பவள், ‘‘நாரெடுத்து நறும் மலரைத் தொடுப்பாளின் விரல் வளைவில் நாடகத்தைச் செய்கின்றாள்’’ என்ற பாடுகிறார் அல்லவா கவிஞர்?

விறகை எரிக்கவேண்டும். வேண்டாத சருகு, குப்பை முதலியவற்றைக் கொளுத்த வேண்டும். ஆனால், விளக்கை எரிக்கவோ கொளுத்தவோ கூடாது. விளக்கை ஏற்றவேண்டும். நுங்கு, இளநீர் போன்றவைகளைச் சீவ வேண்டும். பென்சிலையும் சீவலாம், ஆனால் தலையைச் சீவி விடக் கூடாது. தலையை வாரவேண்டும். ‘‘தலை வாரிப் பூச் சூட்டி உன்னைப் பாட சாலைக்குப் போ என்று சொன்னாள் உன் அன்னை’’ என்றுதானே கவிஞர் பாடுகிறார். (தலை சீவுதல் என்றால் தலயை வெட்டுதல் என்று பொருள்.)

நிகழ்ச்சிகளின் வன்மை மென்மைகளுக்கு ஏற்பவும், அவற்றை நடத்தி வைப்பவர்களின் இயல்புகளுக்கு ஏற்பவும் சொற்களைத் தேர்ந்தெடுத்து ஆள வேண்டும். போட்டேன் என்பதற்கும் வைத்தேன் என்பதற்கும் வேறுபாடு உண்டு அல்லவா? மாடு மிதித்தது என்பதற்கும் குருவி உட்கார்ந்தது என்பதற்கும் வேறுபாடு உண்டு அல்லவா?

**முடிப்புரை:**

சில இடங்களில், நாம் நிகழ்ச்சியை அறியாததால் தவறான சொல்லைப் பயன்படுத்தி விடுகிறோம்; குஞ்சு, குட்டி, கன்று முதலியவைகளைக் கண்டு, அவைகளின் தன்மையை உணராததாலும், தவறான சொல்லைப் பயன்படுத்துகிறோம். ஆயினும் பல இடங்களில், அப்படி இல்லை. நிலமையும் நிகழ்ச்சியும் நமக்குத் தெரியும். ஆனாலும், போதிய அக்கறை இல்லாததாலேயே தவறான சொல் வந்து விடுகிறது. சிறிது கவனமாக மொழியை ஆளப் பழகினால், தவறான சொற்களால் பொருள் மயக்கம் ஏற்படுவதற்கே இடம் இராது.

‘‘எப்பொருள் எச்சொ(ல்)லின் எவ்வாறு உயர்ந்தோர் செப்பினர். ---- அப்படிச் செப்புதல் மரபே’’ என்கிறது நமது தொல்காப்பியம். ‘‘மரபு நிலை திரியின் பிறிது பிறிது ஆகும்’’ என்றும் அது நம்மை எச்சரிக்கிறது.

**மாணவர் மனங்கொள்ள வேண்டியன:**

1. உயிரினங்கள் குரல் எழுப்புவதை வேறு வேறு சொற்களால் குறிப்பது ஏன்?
2. கும்பல் அல்லது பல பொருள்கள் சேருதல் என்பதைக் குறிக்கத் தமிழில் உள்ள வெவ்வேறு சொற்களைத் தந்து விளக்குக.
3. கட்டுதல், முடிதல், தொடுத்தல், என்னும் சொற்கள் எந்த எந்த இடங்களில் ஆளப்படுதல் வேண்டும்? ஏன்?

4. நாம் சொல்லும் கருத்து மயக்கம் இலலாமல் (தெளிவாகவும் அழகாகவும்) வெளிப்படுவதற்கு நாம் எவ்வெவற்றில் கவனம் செலுத்த வேண்டும்?
5. கீழ்க்காணும் சொற்களின் சிறப்புப் பொருள் வேறுபாட்டை உணர்த்தும் வண்ணம் தொடர்களில் அமைத்துக் காட்டுக.
    1. இலை, ஓலை, மடல்
    2. ஏரி, குளம், குட்டை
    3. கூட்டம், குவியல், மந்தை
    4. கடுவன், மந்தி, களிறு, பிடி, சேவல், கோழி
    5. அரும்பு, மொட்டு, முகை, மலர், அவர், வீ
    6. குட்டி, குஞ்சு, பிள்ளை, கன்று, குழவி
    7. கட்டுதல், முடித்தல், தொடுத்தல், வெட்டுதல், நறுக்குதல்
    8. எரித்தல், கொளுத்தல், சுடுதல், கருக்கல்
    9. சீவுதல், வாருதல், ஏற்றுதல், இறக்குதல்
    10. மொழியில் சொற்களின் சிறப்புப் பொருள் உணர்ந்து பயன்படுத்துவதன் நோக்கம் யாது?
    11. மரபு நிலையைப் போற்ற வேண்டியதன் காரணத்தை விளக்குக.